வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

ஈழநாடு

வார மலர்


Eelanadu

மலர் : 07 31.05.2026 ஞாயிற்றுக்கிழமை இதழ் : 145 பக்கங்கள் : 16




# பௌத்தத்தை தேசிய அடையாளத்தின் இதயமாகக் கருதுகின்றது இலங்கை!

## சர்வதேச வெசாக் தின நிகழ்வில் அமைச்சர் விஜித ஹேரத்



கொழும்பு, மே. 31

இலங்கை எப்போதும் பௌத்த மதத்தை தனது தேசிய அடையாளத்தினதும், கலாசாரத்தினதும் இதயமாகக் கருதுவதாக வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையகத்தில் உள்ள பொருளாதார மற்றும் சமூகப் பேரவையில் நடைபெற்ற 27 ஆவது சர்வதேச வெசாக் தினக் கொண்டாட்ட நிகழ்வில் காணொளி வடிவில் வெளியிடப்பட்ட வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்தின் வெசாக் தினச் செய்தியில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் கூறப்பட்டதாவது-

ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையகத்திலும் அதன் ஏனைய கிளைக் கட்டமைப்புக்களின் அலுவலகங்களிலும் வெசாக் தினத்தை சர்வதேச ரீதியாக அங்கீகரிப்பதற்கான வரலாற்றுச் சிறப்புமிக்க 54/115 தீர்மானம் நிறைவேற்றப்பட்டு 27 ஆண்டுகள் நிறைவடையும் தறுவாயில், இந்த நிகழ்வில் உரையாற்றுவதற்கான சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தமை குறித்துப் பெருமிதமடைகிறேன்.

இலங்கையின் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் மறைந்த லக்ஷ்மன் கதிர்காமரின் முயற்சியினாலும், தீர்க்கதரிசனத்தினாலும் கொண்டுவரப்பட்ட இந்தத்

15



## தையிட்டி விகாரை முன்பாக நேற்று காணி உரிமையாளர்கள் போராட்டம்!

யாழ்ப்பாணம், மே. 31

தையிட்டி சட்டவிரோத விகாரை அமைந்துள்ள தமது காணிகளை மீளக் கையளிக்கக் கோரி காணி உரிமையாளர்கள் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

குறித்த விகாரை அமைந்துள்ள காணி மற்றும் அதனைச் சூழவுள்ள காணிகளான தனியார் காணிகளை காணி உரிமையாளர்களிடம் மீளக் கையளிக்க வேண்டும் எனக் காணி உரிமையாளர்கள் ஒவ்வொரு பௌர்ணமி தினத்திலும் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்நிலையில், நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை மற்றும் நேற்று சனிக்கிழமை ஆகிய இரண்டு நாள்களும் அவர்கள் போராட்டத்தை முன்னெடுத்தனர். (அ)

## பிக்குகள்-பௌத்த மக்கள் பிணைப்பினை பிரபாகரனால் கூட உடைக்கமுடியவில்லை

### அகலகட சிறிசுமண தேரர் சுட்டிக்காட்டு

கொழும்பு, மே. 31

இலங்கையின் நீண்டகால வரலாற்றுப் பின்னணியில், பௌத்த பிக்குகள் மற்றும் பௌத்த மக்கள் இடையிலான பிணைப்பை பிரபாகரனால் கூட உடைப்பதற்கு முடியவில்லை. ஒரு சிலர் செய்யும் தவறுகளுக்காக ஒட்டுமொத்த சங்க சமூகத்தையும் மதிப்பிட்டு, பௌத்த சாசனத்தை வீழ்த்த இடமளிக்கக்கூடாது. பௌத்த சாசனத்தைப் பாதுகாப்பதற்கான தேசிய வேலைத்திட்டத்துக்கு அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என அகலகட சிறிசுமண தேரர் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு நேற்று கருத்து தெரிவிக்கும் போதே அவர்

15



## காலத்தை கடத்த நாம் ஆட்சிக்கு வரவில்லை!

### ஜனாதிபதி அநுரகுமார தெரிவிப்பு

கொழும்பு, மே. 31

தற்போதைய அரசு ஆட்சிக்கு வந்தது எப்படியாவது ஐந்து வருட காலத்தைக் கடந்து செல்வதற்காக அல்ல என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் மூன்றாவது பகுதியின் இரண்டாம் கட்டத்தின் கீழ், ரம்புக்கனையிலிருந்து கலகெதர வரையிலான 18.7 கிலோமீற்றர் நீளப்பகுதியின் அபிவிருத்திப் பணிகளை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்து, கலகெதர பொது

15

## நவீன தொழிநுட்ப உதவிகளுடன் மீனவர்களை தேடும் பணி தீவிரம்

யாழ்ப்பாணம், மே. 31

பருத்தித்துறையில் இருந்து கடற்தொழிலுக்கு போன நிலையில் காணாமல் போன கடற்தொழிலாளர்களை இந்திய கடல் எல்லைப்பகுதியை அண்மித்து தேடுதல் நடத்த இந்திய அரசின் அனுமதியை பெற்று, தேடுதல் நடவடிக்கைகளை விஸ்தரித்துள்ளதாக தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் க. இளங்குமரன் தெரிவித்துள்ளார்

யாழ்ப்பாணத்தில் நேற்று சனிக்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பருத்தித்துறை பகுதியில் இருந்து கடற்தொழிலுக்கு சென்ற

15

## நீதிமன்ற அனுமதியுடன் யாழில் அடக்கம் செய்யப்பட்ட கைதி ஜெயக்குமாரின் உடல்

யாழ்ப்பாணம், மே. 31

யாழ்ப்பாணம் புங்குடுதீவு மாணவி சிவலோகநாதன் வித்தியாவின் கொலை தொடர்பில் மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்த கைதியான பூபாலசிங்கம் ஜெயக்குமாரின் இறுதிக்கிரியை நேற்று நடைபெற்றது.

யாழ்ப்பாணம் கோம்பையன் இந்து மயானத்தில், அரச செலவில் அவருடைய உடலம் அடக்கம் செய்யப்பட்டது.

இந்த விடயத்தை யாழ்ப்பாணம் சட்ட மருத்துவ அதிகாரி எஸ். பிரணவன் உறுதிப்படுத்தினார்.

வித்தியா படுகொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்டவர்களின் தண்டனையை உயர் நீதிமன்றம் கடந்த மே மாதம் உறுதி செய்தது.

15

## பல்லேகம ஹேமரத்ன தேரரின் பதவி தற்காலிக இடைநிறுத்தம்

கொழும்பு, மே. 31

அட்டமஸ்தானாதிபதி பல்லேகம ஹேமரத்ன தேரருக்கு எதிரான குற்றச்சாட்டுகள் தொடர்பான நீதிமன்ற நடவடிக்கைகள் நிறைவடையும் வரை, அவரது பதவி தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, அட்டமஸ்தானத்தின் பணிகளை தற்காலிகமாகக் கவனிப்பதற்காக வடமத்திய திசையின் பிரதம சங்கநாயக்கரும் ருவன்வெலி சைத்தியாராமாதிகாரியுமான வணக்கத்திற்குரிய ஈதல வெடுனுவெவே ஞானதிலக்க நாயக்க தேரர் நியமிக்கப்பட்டுள்ளதாக மல்வத்து மகா விகாரை

15

## சில வணிகக் குழுக்களுக்கு சாதகமாக நடக்கிறது அரசு!

### நாமல் ராஜபக்ஷ குற்றச்சாட்டு

கொழும்பு, மே. 31

நாட்டு மக்களுக்குச் சேவை செய்வதை விடுத்து, தமக்கு அரசியல் ரீதியாக நெருக்கமான ஒரு சில வணிகக் குழுக்களுக்குச் சாதகமாகவே தற்போதைய அரசாங்கம் தொடர்ந்து முடிவுகளை எடுத்து வருவதாக பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

குளியாப்பிட்டியவில் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய

15

## அம்பாந்தோட்டை கடலில் நீராடிய 3 பாடசாலை மாணவர்கள் மாயம்!

கொழும்பு, மே. 31

அம்பாந்தோட்டை ஹூங்கம, களமெட்டிய கடற்பகுதியில் நீராடிக் கொண்டிருந்த மூன்று பாடசாலை மாணவர்கள் நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளனர்.

இவர்கள் 12 முதல் 18 வயதுக்கு இடைப்பட்ட மாணவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காணாமல் போன மாணவர்களைக் கண்டறியும் நோக்கில், உயிர் காக்கும் குழுவினர் தேடுதல் நடவடிக்கையொன்றை ஆரம்பித்துள்ளனர்.

(அ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பௌத்த சாசனத்தை அழிப்பதற்கு உள்நாட்டு,வெளிநாட்டு சூழ்ச்சிகள்

## தேசிய பிக்குகள் ஒன்றியம் குற்றச்சாட்டு

கொழும்பு, மே. 31

பௌத்த மதத்தின் தூண்களாகக் கருதப்படும் பிக்குகள், பிக்குணிகள், உபாசகர்கள் மற்றும் உபாசிகைகள் ஆகியோரின் அடிப்படைகளைச் சிதைத்து, பௌத்த சாசனத்தை அழிப்பதற்கான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சக்திகளின் நடவடிக்கைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக தேசிய பிக்குகள் ஒற்றுமை ஒன்றியம் குற்றம் சுமத்தியுள்ளது.

தேசிய பிக்குகள் ஒற்றுமை ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பாளர் எலபத்கம ஞானரத்தன தேரர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பௌத்த கட்டமைப்பை சிதைத்து அதனை முற்றாக அழிப்பதற்கான சூழ்ச்சிகள் முன்னெடுக்கப்படுவதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

குறிப்பாக, அண்மையில் தலைமை தேரர் தொடர்பான சம்பவத்தை மையப்படுத்தி, அரச சார்பற்ற நிறுவனங்கள் நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி பிக்குகளுக்கு எதிராக அவதூறுகளைப் பரப்புவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

விஹாரை மற்றும் தேவாலயங்கள் சட்டத்தின் கீழ் பௌத்த சாசனத்தைப் பாதுகாப்பதற்குரிய ஏற்பாடுகள் ஏற்கனவே உள்ள நிலையில், அவற்றை மீறி செயற்படுவது சாசனத்தின் வீழ்ச்சிக்கே வழிவகுக்கும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சங்க சொத்துக்கள் தொடர்பில் மாற்றங்கள் தேவைப்படின், முப்பீட மகாநாயக்க தேரர்களிடம் ஆலோசனை பெற்று உரிய முறையில் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். (அ)

# எரிபொருளுக்கு வழங்கும் மானியத்தால் பெற்றோலிய கூட்டுத்தாபனம் நட்டத்தில்!

## மின்சக்தி அமைச்சின் தரவுகள் சுட்டிக்காட்டு

கொழும்பு, மே. 31

இலங்கை வலுசக்தி அமைச்சு வெளியிட்டுள்ள புதிய தரவுகளின்படி, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தற்போது சந்தையில் விற்பனை செய்யும் எரிபொருள்களினால் பாரிய அளவிலான கட்டமைப்பு நஷ்டத்தை எதிர்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏப்ரல் மாத இறக்குமதி விலைகளின் அடிப்படையில், மானியங்கள் எதுவும் கணக்கில் சேர்க்கப்படுவதற்கு முன்னரே ஒவ்வொரு லீற்றர் எரிபொருளிலும் ஏற்படும் நட்டம் மிக அதிகமாகக் காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குறிப்பாக, சாதாரண பொது மக்களாலும் போக்குவரத்துத் துறையினாலும் அதிகம் பயன்படுத்தப்படும் பெற்றோல் மற்றும் டீசல் ஆகியவற்றுக்கு கூட்டுத்தாபனம் பெருமளவு நட்டத்தைத் தாங்கி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு லீற்றர் 92 ரக பெற்றோல் எரிபொருளை சந்தைக்குக் கொண்டு வருவதற்கான இறக்குமதிச் செலவு 273.59 ரூபாயாகவும், அதற்கான வரி 136.58 ரூபாயாகவும் காணப்படுகிறது.

இதன் மூலம் அதன் உண்மையான சூத்திர விலை 432.59 ரூபாயாக இருக்க வேண்டும் என்ற போதிலும், அது 398 ரூபாய்க்கே விற்பனை செய்யப்படுவதால் ஒரு லீற்றருக்கு 34.59 ரூபாய் நட்டம் ஏற்படுகிறது. இதேபோல், 95 ரக பெற்றோல் ஒரு லீற்றருக்கு 22.46 ரூபாய் நட்டம் பதிவாகியுள்ளது.

மறுபுறம், டீசல் மற்றும் மண்ணெண்ணெய் விற்பனையில் இந்த நட்டத்தின் அளவு மிக மோசமாக உயர்ந்துள்ளது. ஒரு லீற்றர் ஒட்டோ டீசலின் இறக்குமதி செலவு 560.85 ரூபாயாகவும், வரி 163.27 ரூபாயாகவும் உள்ள நிலையில், அதன் சூத்திர விலை 749.70 ரூபாயாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

எனினும், அது சந்தையில் 382 ரூபாய்க்கு மட்டுமே விற்பனை செய்யப்படுவதால், ஒவ்வொரு லீற்றர் ஒட்டோ டீசலுக்கும் கூட்டுத்தாபனம் 367.70 ரூபாய் என்ற பாரிய நட்டத்தைச் சந்தித்து வருகிறது.

சுப்பர் டீசலைப் பொறுத்தவரை இந்த நட்டம் மேலும் அதிகரித்து லீற்றருக்கு 397.07 ரூபாயாகப் பதிவாகியுள்ளது.

அதேவேளை, எவ்வித வரிகளும் விதிக்கப்படாத மண்ணெண்ணெய், ஒரு லீற்றர் 550.24 ரூபாய் இறக்குமதிச் செலவுடன், 580.53 ரூபாய் சூத்திர விலையைக் கொண்டிருந்தபோதிலும், அது வெறும் 255 ரூபாய்க்கே நுகர்வோருக்கு வழங்கப்படுகிறது.

இதன் காரணமாக ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் விற்பனையிலும் 325.53 ரூபாய் நட்டத்தை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் எதிர்கொண்டுள்ளமை மின்சக்தி அமைச்சின் தரவுகள் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. (அ)

# நாமல் எம்.பிக்கு எதிரான விசாரணை ஒத்திவைப்பு!

கொழும்பு, மே. 31

கிரிஷ் கொடுக்கல் - வாங்கல் விவகாரம் தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவுக்கு எதிராக சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கை ஜூலை மாதம் 7ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த வழக்கு தொடர்பான ஆரம்பகட்ட வழக்கு விசாரணைக்கு முந்தைய மாநாடு நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை நிறைவடைந்தது.

இதனைத் தொடர்ந்தே, இந்த வழக்கின் பிரதான விசாரணையை ஜூலை மாதம் 7ஆம் திகதி ஆரம்பிப்பதற்கு நீதிமன்றம் தீர்மானித்துள்ளது. (அ)

# வழக்கேடு காணாமற்போன விடயம் நீதிமன்ற ஊழியர்கள் இருவர் கைது!

திருமலை, மே. 31

திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில் பணியாற்றும் ஆண் ஊழியர் ஒருவரும் பெண் ஊழியர் ஒருவரும், நீதிமன்ற வழக்கேடு ஒன்று காணாமற் போன சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தின் பதிவாளரால் மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவில் செய்யப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் பின்னர் குறித்த இருவரும் கைது செய்யப்பட்டனர் என தெரிவிக்கப்படுகிறது.

விசாரணைகளின்போது காணாமற்போனதாகக் கூறப்படும் வழக்கேடு, கைது செய்யப்பட்ட ஆண் ஊழியரின் வீட்டிலிருந்து மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், சந்தேக நபர்கள் திருகோணமலை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து, நாளை திங்கட்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (அ)

# வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் 2 இலங்கையர், 16 சீனர் கைது!

கொழும்பு, மே. 31

சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட 3 கோடியே 13 இலட்சத்து 80 ஆயிரம் ரூபா பெறுமதியான வெளி நாட்டு சிகரெட்டுகளுடன் 18 சந்தேக நபர்களைக் கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இந்த கும்பலில் 2 இலங்கையர்களும், 16 சீன நாட்டுப் பிரஜைகளும் உள்ளடங்குவதாக இலங்கை சுங்கத் திணைக் களம் தெரிவித்துள்ளது.

சந்தேக நபர்கள் டுபாய் மற்றும் மலேசியா ஆகிய நாடுகளில் இருந்து கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

அவர்கள் கொண்டுவந்த 27 பயணப் பொதிகளை சுங்க அதிகாரிகள் சோதனைக்கு உட்படுத்தியபோதே, அவற்றுள் மிகவும் நுணுக்கமாக மறைத்து வைக்கப்பட்டிருந்த சீன தயாரிப்பு சிகரெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதன்போது, 209,200 சீன தயாரிப்பு சிகரெட்டுகளைக் கொண்ட 1,046 சிகரெட் கார்ட்டூன்கள் கைப்பற்றப்பட்டதாக சுங்கத் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (அ)

# இடைநீக்கம் செய்யப்பட்ட நிலையிலும் வேதனத்தை பெறும் இ.போ.ச. சாரதிகள்!

## பாராளுமன்றக் குழுவில் விவாதம்!

கொழும்பு, மே. 31

பல்வேறு ஒழுக்காற்றுப் பிரச்சினைகள் காரணமாக பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளபோதிலும், தொடர்ந்து வேதனம் பெற்று வரும் அரச பஸ் சாரதிகள் தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று பாராளுமன்றத்தில் நடைபெற்றது.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி விவகாரங்கள் தொடர்பான அமைச்சின் ஆலோசனைக் குழு, அதன் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தலைமையில் கூடிய போதே இந்த விடயம் ஆராயப்பட்டது.

இக்குழுவில் கருத்துத் தெரிவித்த அதிகாரிகள் அதிர்ச்சியூட்டும் விவரங்களை வெளிப்படுத்தினர்.

பல்வேறு ஒழுக்கீனப் பிரச்சினைகள் காரணமாக சுமார் 400 முதல் 500 வரையிலான சாரதிகள் தற்காலிக வேலையிலிருந்து நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களில் ஒரு பகுதியினர் சட்ட ரீதியான பல்வேறு பின்னணிகள் மற்றும் நீதிமன்ற நடவடிக்கைகள் காரணமாக தற்போதும் தங்களது அடிப்படைச் சம்பளத்தைத் தொடர்ந்து பெற்று வருகின்றனர்.

இவ்வாறு அரச துறையில் பணியிடை நீக்கம் செய்யப்பட்டு, வீட்டில் இருந்தபடியே சம்பளம் பெறும் சாரதிகளில் சிலர், சட்டவிரோதமான முறையில் தனியார் பஸ்களில் சாரதிகளாகப் பணிபுரிந்து இரட்டை வருமானம் ஈட்டி வருகின்றனர்.

இது குறித்து நீண்ட நேரம் விவாதித்த போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க, இவ்வாறானவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுக்கும் சட்ட நடைமுறைகளை மறுபரிசீலனை செய்யுமாறும், இது தொடர்பான சட்ட ஆலோசனைகளை விரைவாகப் பெற்று உரிய நடவடிக்கை எடுக்குமாறும் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். (அ)

# சட்டவிரோதமாக பொருத்தப்பட்ட ஜீப் வாகனத்துடன் ஒருவர் கைது!

கொழும்பு, மே. 31

சட்டவிரோதமான முறையில் இலங்கைக்குள் கொண்டுவரப்பட்ட வாகன உதிரிப்பாகங்களைப் பயன்படுத்தி போலி ஆவணங்கள் மூலம் செய்யப்பட்ட ஜீப் ரக வாகனம் ஒன்றை வைத்திருந்த குற்றச்சாட்டில் 39 வயதுடைய சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.


நேற்று முன் தினம் இரவு கொட்டாவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில், மேல் மாகாண தெற்கு குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனையின்போதே இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

குறித்த ஜீப் ரக வாகனம் சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட பாகங்களைக் கொண்டு தயார் செய்யப்பட்டுள்ளதுடன், முறையான வருமான வரி அனுமதிப்பத்திரம், காப்புறுதிச் சான்றிதழ் அல்லது புகைப் பரிசோதனை அறிக்கை எதுவுமின்றி செலுத்தப்பட்டு வந்ததாக பொலிஸார் குறிப்பிட்டனர். அத்துடன், இந்த வாகனத்திற்காக போலியான ஆவணங்களைத் தயாரித்து, அவற்றைப் பயன்படுத்திய குற்றச்சாட்டின் பேரிலும் இந்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இலங்கைக்கான வத்திக்கான் பேராயர் பிரதமருடன் சந்திப்பு



கொழும்பு, மே. 31

இலங்கைக்கான வத்திக்கான் தூதர் பேராயர் மொன்சிக்னர் அன்ட்செஜ் ஜோஸ்வோஸிக் நேற்று முன் தினம் அலரி மாளிகையில் பிரதமரைச் சந்தித்தார்.

இலங்கைக்கான வத்திக்கான் பேராயரை வரவேற்ற பிரதமர், வத்திக்கான் தூதராக நியமிக்கப்பட்டதற்காக தனது வாழ்த்துகளைத் தெரிவித்ததோடு, கடந்த 5 தசாப்தங்களாக இலங்கை மக்களுடன் பேணப்பட்டுவரும் நீண்ட கால நட்புறவும் ஆன்மீக ஒற்றுமையும் தொடர்பில் தனது பாராட்டை வெளிப்படுத்தினார்.

இரு தரப்பினரும் தொடர்ச்சியான ஒத்துழைப்புகள் மற்றும் ஈடுபாடுகள் ஊடாக இரு நாடுகளுக்கிடையிலான நட்புறவுகளை மேலும் பலப்படுத்துவதற்கான தங்களது உறுதிப்பாட்டை மீண்டும் வெளிப்படுத்தினர்.

இந்நிகழ்வில் பிரதமரின் செயலாளர் பிரதீப் சப்புதந்திரி, பிரதமரின் மேலதிக செயலாளர் திருமதி சாகரிகா போகஹவத்த மற்றும் வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு, சுற்றுலா அமைச்சின் அதிகாரிகளும் கலந்துகொண்டனர். (அ)

# வலி.வடக்கில் 19 கிராம அலுவலர் பிரிவுகளில் 2400 ஏக்கர் காணிகள் இராணுவத்தினர் வசம்!

## பிரதேச சபை தவிசாளர் சுகிர்தன் தகவல்

யாழ்ப்பாணம், மே. 31

யாழ்ப்பாணம் வலி. வடக்கில் 19 கிராம சேவையாளர் பிரிவுகளை உள்ளடக்கிய சுமார் 2400 ஏக்கர் தனியார் காணிகளை இராணுவத்தினர் 36 வருடங்களாக அடாத்தாகக் கையகப்படுத்தி விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர் என வலி. வடக்கு பிரதேச சபை தவிசாளர் சோ. சுகிர்தன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வலிகாமம் வடக்கில் விவசாயம் மற்றும் கடற்தொழில் என செழிப்பு மிக்க 19 கிராம சேவையாளர் பிரிவுகள் இன்னமும் இராணுவக் கட்டுப்பாட்டில் காணப்படுகின்றன.

இதில் 3 கிராம சேவையாளர் பிரிவுகள் முற்றாகவும், ஏனைய 16 கிராம சேவையாளர் பிரிவுகள் பகுதியளவிலும் இராணுவக் கட்டுப்பாட்டில் காணப்படுகின்றன.

பலாலி மேற்கு, பலாலி வடமேற்கு மற்றும் மயிலிட்டித்துறை தெற்கு ஆகிய மூன்று கிராம சேவையாளர் பிரிவுகளும் முழுமையாக விடுவிக்கப்பட வேண்டியுள்ளது.

மயிலிட்டி வடக்கு , மயிலிட்டித்துறை தெற்கு மற்றும் மயிலிட்டித்துறை வடக்கு ஆகிய மூன்று கிராம சேவையாளர் பிரிவுகளைக் கொண்ட இலங்கையின் மீன் உற்பத்தியில் மூன்றில் ஒரு பங்கு மீன் உற்பத்தியை வழங்கிய மக்கள் இன்று அப்பகுதிகளில் இருந்து வெளியேற்றப்பட்டு 36 வருடங்கள் கடந்தும் மீள் குடியேற்றப்படவில்லை.

இந்த மக்களை மீள் குடியேற்றுவோம் எனக் கூறி மாறி மாறி ஆட்சிக்கு வந்த எந்த அரசாங்கமும் இவர்களை மீள் குடியேற்றவில்லை.

மக்களின் காணி மக்களுக்கே எனக் கூறி வந்த இந்த அரசாங்கம், ஆட்சிக்கு வந்து இரண்டு ஆண்டு காலம் நிறைவடைந்தும் பலாலி வீதியை நேரக் கட்டுப்பாட்டுடன் திறந்துவிட்டதை தவிர வேறு எதனையும் செய்யவில்லை.

பலாலி வீதியில் கிழக்குப் பகுதியை முழுமையாக விடுவிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டு வரும் நிலையில், விமான நிலைய விஸ்தரிப்பிப்புக்கு எனக் காணியை விடுவிக்க மறுப்பு தெரிவிக்கின்றனர்.

உண்மையில் விமான நிலைய விஸ்தரிப்புக்கு பலாலி கிழக்குப் பகுதி காணிகள் தேவையில்லை.

அண்மையில் காணி விடுவிப்பு தொடர்பில் ஆராய்வதற்கு பாதுகாப்பு பிரதி அமைச்சர் இப்பகுதிக்கு வந்திருந்தபோது காணிகள் தொடர்பிலான விவரங்கள் தெரிந்தவர்களை அழைக்கவில்லை.

சாக்கு போக்காக ஆளுநர் அலுவலகத்தில் கூட்டத்தை நடத்தி விட்டு, காணிகளை விடுவிப்போம் எனக் கூறிச் சென்றுள்ளனர்.

எனவே, மக்களை தொடர்ந்து ஏமாற்றாது இப்பகுதி மக்களுக்கு சொந்தமான சுமார் 2400 ஏக்கர் காணிகளையும் உடனடியாக விடுவிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்-என்றார். (அ)

## தெல்லிப்பழை வைத்தியருக்கு எதிரான அவதூறு;

# அர்ச்சுனா எம்.பிக்கு எதிரான வழக்கின் கட்டளை ஜூன் 19!

யாழ்ப்பாணம், மே. 31

பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதன் உள்ளிட்டோருக்கு எதிராக தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலை வைத்தியர் நிகழ்நிலை காப்புச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்த வழக்கு எதிர்வரும் ஜூன் 19ஆம் திகதி கட்டளைக்காக திகதியிடப்பட்டது.

தெல்லிப்பழை வைத்தியசாலை புற்று நோய்ப்பிரிவு வைத்தியர் தொடர்பில் சமூக வலைத்தளங்களில் அவதூறு பரப்பினார்கள் எனும் குற்றச்சாட்டில் பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதன் உள்ளிட்ட இரு வைத்தியர்களுக்கு எதிராக நிகழ்நிலை காப்புச் சட்டத்தின் கீழ் யாழ்ப்பாணம் மேலதிக நீதிவான் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று முன் தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே யாழ்ப்பாணம் மேலதிக நீதிவான் நீதிமன்றம் இவ்வாறு உத்தரவிட்டது.

பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதன், மற்றொரு வைத்தியர், தனியார் ஊடகம், வலையொளித் தளங்கள் உள்ளிட்ட சில தரப்புகளுக்கு எதிராகவே இந்த வழக்கு தொடரப்பட்டது.

எதிர் மனுதாரர் சார்பில் சமர்ப்பணங்கள் செய்யப்பட்ட நிலையில் குறித்த வழக்கை எதிர்வரும் ஜூன் மாதம் 19ஆம் திகதிக்கு கட்டளைக்காக மன்று திகதியிட்டது. (அ)

# பல பகுதிகளில் திடீர் மின் தடை!

கொழும்பு, மே. 31

கொழும்பு மாவட்டம் உள்ளிட்ட பல பகுதிகளில் திடீர் மின்சாரத் தடை ஏற்பட்டுள்ளதாக எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

மின்சார கட்டமைப்பில் ஏற்பட்டுள்ள சமநிலையின்மை காரணமாக, கொழும்பு உள்ளிட்ட நாட்டின் சில பகுதிகளில் மின்சார விநியோகம் தடைப்பட்டுள்ளதாக எரிசக்தி அமைச்சர் அநுர கருணாதிலக தெரிவித்துள்ளார்.

மின்சார விநியோகத்தை வழமைக்குக் கொண்டு வர சீரமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# மரண தண்டனை தீர்ப்பு வெளியானதும் உயிரை மாய்ப்பதற்கு முயற்சித்த கைதி!

கொழும்பு, மே. 31

நுவரெலியா மாவட்ட மேல் நீதிமன்றத்தில் நேற்று முன் தினம் மரண தண்டனை விதிக்கப்பட்ட கைதி ஒருவர், நீதிமன்ற வளாகத்திற்குள்ளேயே நஞ்சு அருந்தி உயிரை மாய்க்க முயன்ற சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

உடபுசல்லாவ பகுதியைச் சேர்ந்த 44 வயதுடைய நபர் ஒருவரே இவ்வாறு உயிர் மாய்க்க முயன்றவராவார்.

கடந்த கால கொலைச் சம்பவம் ஒன்றுடன் தொடர்புடைய குறித்த நபருக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் நியாயமான சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டதையடுத்து, நுவரெலியா மாவட்ட மேல் நீதிமன்ற நீதிபதி விராஜ் வீரசூரிய அவருக்கு மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

இத்தீர்ப்பை அடுத்து, அவர் நீதிமன்றக் கூண்டிலிருந்து சிறை அறைக்கு அழைத்துச் செல்லப்பட்டபோதே, தன்வசம் மறைத்து வைத்திருந்த நஞ்சை திடீரென அருந்தியுள்ளார்.

இதனைத் தடுத்து நிறுத்திய சிறைச்சாலை அதிகாரிகள் மற்றும் பொலிஸார், உடனடியாக அவரை மீட்டு நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்த்தனர். தற்போது அவர் அங்கு தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (அ)

# அரச அதிகாரிகளின் இடமாற்றங்களை எந்தவித தாமதமுமின்றி அமுல்படுத்துக!

## பொது நிர்வாக அமைச்சு பணிப்புரை

கொழும்பு, மே. 31

பொதுச் சேவைகள் அதிகாரிகள் தொடர்பான வருடாந்த இடமாற்றத் தீர்மானங்களை எவ்வித தாமதமுமின்றி உடனடியாக நடைமுறைப்படுத்துமாறு அனைத்து அரச நிறுவனங்களுக்கும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு பணிப்புரை விடுத்துள்ளது.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அனுமதியுடன் இந்த விசேட சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

வருடாந்த இடமாற்ற உத்தரவுகள் இறுதி செய்யப்பட்ட பின்னர், அவற்றை நிறுத்தி வைக்கவோ, திருத்தங்களை மேற்கொள்ளவோ அல்லது பிற்போடவோ முடியாது என திட்டவட்டமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இடமாற்றங்கள் தொடர்பான ஏதேனும் ஆட்சேபனைகள் அல்லது மேன்முறையீடுகள் காணப்படின், அவை பரிந்துரைக்கப்பட்ட ஒன்லைன் முறைமையூடாகவே சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

இந்த கோரிக்கைகள் மறு ஆய்வுக் குழுக்கள், அரசாங்க சேவை ஆணைக்குழு அல்லது நிர்வாக மேன்முறையீட்டு தீர்ப்பாயம் ஆகியவற்றின் ஊடாக பரிசீலிக்கப்படும்.

இதேவேளை மேன்முறையீடுகள் பரிசீலனையில் இருக்கும் காலப்பகுதியிலும் கூட, ஏற்கனவே பிறப்பிக்கப்பட்ட இடமாற்ற உத்தரவுகள் தடையின்றி நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என அமைச்சு வலியுறுத்தியுள்ளது.

திட்டமிடப்பட்ட திகதியில் எவ்வித விதிவிலக்குகளுமின்றி இடமாற்ற உத்தரவுகளை நடைமுறைப்படுத்துவதை நிறுவனங்களின் தலைவர்கள் உறுதி செய்ய வேண்டும் என சுற்றறிக்கையின் ஊடாக அறிவுறுத்தப்பட்டுள்ளது. (அ)

# இராணுவத்திற்கு புதிய பதவி நிலை பிரதானி!

கொழும்பு, மே. 31

இலங்கை இராணுவத்தின் 69 ஆவது இராணுவ பதவி நிலை பிரதானியாக, இலங்கை பீரங்கிப் படையணியைச் சேர்ந்த மேஜர் ஜெனரல் நிலந்த பிரேமரத்ன நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நியமனமானது நேற்று முன் தினம் முதல் அமுலுக்கு வரும் வகையில் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அரசாங்கத்தில் உள்ள பலர் பஸிலுடன் அடிக்கடி பேச்சு!



## நாமல் ராஜபக்ஷ பரபரப்பு தகவல்

கொழும்பு, மே. 31

அரசாங்கத்தில் உள்ளவர்கள் தம்மைக் காட்டிலும் அதிகப்படியான தடவைகள் தனது சிறிய தந்தையான பஸில் ராஜபக்ஷவுடன் பேசி வருவதாக பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஸ தெரிவித்துள்ளார்.

இலங்கையில் பல சட்ட மற்றும் ஊழல் தொடர்பான விவகாரங்களில் விசாரணைக்கு உள்ளாகியிருந்தபோதிலும், முன்னாள் நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ தொடர்ந்து அமெரிக்காவில் தங்கியிருப்பது குறித்து எழுப்பப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே நாமல் இதனைத் தெரிவித்துள்ளார்.

பஸில் ராஜபக்ஷ சட்டத்திலிருந்து தப்பியோடுவதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகளை நிராகரித்த நாமல், ராஜபக்ஷ குடும்பத்தைச் சேர்ந்த எவரும் சட்ட நடவடிக்கைகளில் இருந்து தப்பித்துச் செல்வதாகத் தான் நம்பவில்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்தில் உள்ளவர்கள் தம்மைக் காட்டிலும் அதிகமாகவே அவரிடம் பேசுகிறார்கள் என்றும், அவர்களின் அறிவுரையின் பேரில்தான் அவர் வெளிநாட்டில் தங்கியிருக்கிறாரா என்பது தமக்குத் தெரியாது என்றும் அவர் கூறினார்.

அது குறித்து நீங்கள்தான் அவர்களிடம் மற்றும் தனது சிறிய தந்தையிடமும் கேட்க வேண்டும் என்றும், எனினும் அவர் நீதித்துறை செயல்முறைகளுக்குள் தொடர்ந்து பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டு வருவதாகவும் நாமல் சுட்டிக்காட்டினார்.

பஸில் ராஜபக்ஷ தனது சட்டத்தரணிகள் ஊடாக இலங்கை நீதிமன்றங்கள் முன்னிலையில் தொடர்ந்து முன்னிலையாகி வருவதாகவும், அதனுடன் தொடர்புடைய சட்ட நடவடிக்கைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# நகர அபிவிருத்தி அதிகார சபையின் பிராந்திய உப அலுவலகம் மன்னாரில்

மன்னார், மே. 31

நகர அபிவிருத்தி அதிகார சபையின் பிராந்திய உப அலுவலகம், கூட்டுறவு அபிவிருத்தி பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க தலைமையில் மன்னாரில் திறந்து வைக்கப்பட்டது.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங்கும் இந்த அலுவலகத்தின் மூலம், எதிர்காலத்தில் வவுனியா மற்றும் மன்னார் நகரங்களை அபிவிருத்தி செய்யும்போது, கட்டுமானப் பணிகளுக்கான ஆரம்ப திட்ட அனுமதிகளை பெற்றுக்கொள்வது உள்ளிட்ட பல சேவைகளை இலகுவாக முன்னெடுக்கும் நோக்கில் இந்த பிராந்திய உப அலுவலகம் நிறுவப்பட்டுள்ளது.

'வளமான நாடு, அழகான வாழ்க்கை' என்ற அரசாங்கத்தின் கொள்கைத் திட்டத்தின் கீழ், 2030 ஆம் ஆண்டளவில் வவுனியா நகரத்தை வட மாகாணத்தின் வர்த்தக மற்றும் வணிக மையமாகவும், பிரதான நுழைவாயிலாகவும் நகர அபிவிருத்தித் திட்டங்களின் கீழ் அபிவிருத்தி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், மன்னார் மாவட்டத்தின் பிரதான நகரமான மன்னார் நகரத்தையும் அதனைச் சுற்றியுள்ள கடலோரப் வலயத்தையும் அடிப்படையாகக் கொண்டு அபிவிருத்திகளை மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிகழ்வில் நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் எம்.கே. ஹேமச்சந்திர, மன்னார் மாவட்ட செயலாளர் கே. கனகேஸ்வரன், நகர அபிவிருத்தி அதிகார சபையின் வட மாகாண பிராந்திய பணிப்பாளர் சமன் திஸாநாயக்க ஆகியோருடன் உள்ளூராட்சி மன்றங்களின் பிரதிநிதிகள் பலரும் கலந்து கொண்டனர். (அ)

# ஈரற்பெரியகுளத்தில் விபத்து: குடும்பஸ்தர் ஒருவர் மரணம்!

## மனைவி படுகாயம்!!

வவுனியா, மே. 31

யாழ்ப்பாணம் - கண்டி பிரதான வீதியில், வவுனியா ஈரட்டபெரியகுளம் பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக நேற்று முன்தினம் இரவு 9.30 மணியளவில் இடம்பெற்ற வாகன விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், அவரது மனைவி காயமடைந்துள்ளார் என ஈரற்பெரியகுளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொழும்பில் இருந்து வவுனியா நோக்கி பயணித்த சொகுசு பஸ் ஒன்று மோட்டார் சைக்கிளுடன் மோதியதாலேயே இந்த விபத்து சம்பவித்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

இதன்போது பெரிய உளுக்குளம் பகுதியைச் சேர்ந்த எஸ். தில்ஹால் சதுரங்க என்ற 30 வயதுடையவர், தனது மனைவியுடன் மோட்டார் சைக்கிளில் பயணித்தபோதே இந்த விபத்து நேர்ந்துள்ளது.

விபத்தில் கணவர் உயிரிழந்துள்ளதுடன், பலத்த காயமடைந்த அவரது மனைவி வவுனியா பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விபத்துக்குள்ளான சொகுசு பஸ்ஸின் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் குறித்து ஈரற்பெரியகுளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# 61 கைதிகளுக்கு பொது மன்னிப்பு

கொழும்பு, மே. 31

வெசாக் பண்டிகையை முன்னிட்டு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவினால் 61 கைதிகளுக்கு ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளதுடன், அவர்களில் 33 கைதிகள் நேற்றைய தினமே விடுதலை செய்யப்பட்டனர்.

அரசியலமைப்பின் 34ஆம் பிரிவின் கீழ் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய இந்த பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் ஆணையாளரும் ஊடகப் பேச்சாளருமான ஏ.சி.கஜநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த விசேட பொது மன்னிப்பின் கீழ் தகுதி பெற்ற எஞ்சிய கைதிகளும் உரிய நடைமுறைகளின்படி விடுவிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (அ)

# மட்டக்களப்பு நகரத்தில் உள்ள தனியார் வங்கியில் தீ விபத்து!



மட்டக்களப்பு, மே. 31

மட்டக்களப்பு நகரில் அமைந்துள்ள தனியார் வங்கி கிளையில் நேற்று அதிகாலை 5 மணியளவில் திடீரென தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ரயில் வீதி சந்தியில் அமைந்துள்ள தனியார் வங்கிக் கிளை ஒன்றில் திடீரென கரும்புகை மற்றும் தீப்பிழம்புகள் வெளிவருவதைக் கண்ட பிரதேச வாசிகள் மற்றும் பாதுகாப்புப் பிரிவினர் உடனடியாக இது குறித்து தீயணைப்புப் பிரிவினருக்கும் பொலிஸாருக்கும் தகவல் வழங்கியுள்ளனர்.

தகவலறிந்த மட்டக்களப்பு மாநகர சபையின் தீயணைப்புப் படையினர் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று கடுமையான பிரயத்தனத்துக்கு மத்தியில் தீயை முழுமையாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

அதிகாலை நேரம் என்பதால் வங்கியில் ஊழியர்களோ அல்லது வாடிக்கையாளர்களோ இல்லாததால் உயிர்ச்சேதங்கள் ஏற்படவில்லை.

மின்சார ஒழுக்கு காரணமாகவே இத் தீ விபத்து ஏற்பட்டிருக்கலாம் என முதற்கட்ட விசாரணைகளில் சந்தேகிக்கப்படுகிறது. (அ)

# வாரம் ஒருசிந்தனை:

## கங்காணி

கங்காணி-கண்காணி

(இக்காலத்தில் இறைவனின் சிலகருவிகள் கண்காணித்துப் பதிகின்றன)

அறிவில்லாதவர் 'முட்டாள்கள்' மூர்க்கர்கள் கருதுகிறார்கள்.

தம்மைக் காவல் காக்கயாரும் இல்லைஎனக் கருதுகிறார்கள்.

பொய் சொல்லலாம்
களவாடலாம்
ஏமாற்றலாம்

எதையும் எவரும் தெரிந்துகொள்ளார்.

முட்டாள்களும் மூர்க்கர்களும் அறிவில்லாதவர்களும் கருதுகிறார்கள்.

யாவரையும் காவல் காக்கின்றஒருவன் எங்கும் இருக்கின்றான்.

அவன் இல்லாத இடம் இல்லை.

எவ்விடத்திலும் நிறைந்து காவல் புரிகின்றவன் இறைவன்.

காவல் புரிபவனாக இறைவனை அறிந்தோர்
பொய் பேசார்
களவாடார்
ஏமாற்றார்.

பலநூற்றாண்டுகளுக்கு முன்பு இந்தச் செய்தியை எழுதியவர் திருமூலர்.

12 திருமுறைகள்.

அதில் 10ஆம் திருமுறை திருமந்திரம்.

திருமூலர் இயற்றியது.

திருமந்திரம் நூலில் 9 தந்திரங்கள்

7ஆம் தந்திரம்

36 ஆவதுதலைப்பு

கூடாஒழுக்கம்

முதலாம் பாடல்

திருமூலர் கூறுகிறார்.

"கண்காணி இல்லென்
றுகள்ளம் பலசெய்வார்
கண்காணி இல்லா
இடம்இல்லைகாணுங்கால்
கண்காணியாகக் கலந்
தெங்கும் நின்றானைக் கண்
காணிகண்டார் களவொழிந்
தாரே."

– மறவன்புலவு
க. சச்சிதானந்தன்

# எரிபொருள் விலை குறையாது!

கொழும்பு, மே. 31

உலக சந்தையின் எரிபொருள் விலைகளுக்கு அமைவாக, இலங்கையில் எதிர்வரும் எரிபொருள் விலை திருத்தத்தின்போது விலைக்குறைப்பு ஒன்றை எதிர்பார்க்க முடியாது என இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் மயூர நெத்திகுமார தெரிவித்தார்.

கடந்த மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களுடன் ஒப்பிடுகையில் தற்போது எரிபொருள் விலைகளில் ஓரளவு குறைவு தென்பட்டாலும், மத்திய கிழக்கு போருக்கு முன்னர் உலக சந்தையில் காணப்பட்ட எரிபொருள் விலைகளை விட தற்போதைய விலைகள் இன்னும் உயர்வாகவே உள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும், உலக சந்தையின் இன்றைய எரிபொருள் விலை இன்றைய பிற்பகல் அளவில் தீர்மானிக்கப்படும் எனத் தெரிவித்த அவர், அதற்கமைய அந்த நிலைமைகளை ஆராய்ந்த பின்னரே உள்நாட்டு எரிபொருள் விலை குறித்து தீர்மானம் எடுக்கப்படும் என்றும் கூறினார்.

# சுற்றுலாப் பயணிகளின் வருகை மேலும் அதிகரிப்பு

கொழும்பு, மே. 31

ஜனவரி முதலாம் திகதி முதல் மே மாதம் 28ஆம் திகதி வரையான காலப்பகுதியில் மாத்திரம் 1,010,807 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

மே மாதத்தில் முதல் 28 நாள்களில் மாத்திரம் 134,530 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர். இந்நிலையில், மே மாதத்தில் பதிவான அதிகூடிய சுற்றுலாப் பயணிகளின் வருகை மே மாதம் 23ஆம் திகதி இடம்பெற்றுள்ளதோடு, அன்றைய தினம் மாத்திரம் 7,310 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர். மே முதலாம் திகதி முதல் நாட்டுக்கு வருகைதந்த சுற்றுலாப் பயணிகளில் இந்தியப் பிரஜைகளே அதிகளவானோர் ஆவர். அவர்களின் எண்ணிக்கை 56,063 எனப் பதிவாகியுள்ளது.

இதற்கு மேலதிகமாக பிரித்தானிய பிரஜைகள் 8,582 பேரும், சீன பிரஜைகள் 8,439 பேரும், ஜேர்மனிய பிரஜைகள் 6,443 பேரும் அவுஸ்திரேலிய பிரஜைகள் 5,868 பேரும், மாலைதீவு பிரஜைகள் 4,110 பேரும் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

ஐக்கிய அமெரிக்கா, பிரான்ஸ் மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளிலிருந்தும் கணிசமான அளவு சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர். (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu
31.05.2026 ஞாயிற்றுக்கிழமை
பராபவ வருடம், வைகாசி 17

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## கரப்பான் பூச்சி ஜனதா கட்சி

இந்தியாவில் இந்த மாத நடுப்பகுதியில் இணையத்தில் திடீரென ஒரே இரவில் தொடங்கப்பட்ட ஒரு அரசியல் கிண்டல் இயக்கமான கரப்பான் பூச்சி ஜனதா கட்சி (Cockroach Janata Party) அந்த நாட்டு அரசியல் தளத்தில் எதிர்பாராத அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தியிருக்கிறது. அது தற்போது இளைஞர்களின் வேலை வாய்ப்பின்மை, பணவீக்கம் மற்றும் அரசியல் சீர்குலைவுகளுக்கு எதிரான ஒரு மிகப்பெரிய டிஜிட்டல் புரட்சியாக உருவெடுத்திருக்கிறது.

மே 15 ஆம் திகதி போலித் தொழில்முறைச் சான்றிதழ்கள் தொடர்பான உச்ச நீதிமன்ற விசாரணையின்போது இந்திய பிரதம நீதியரசர் சூர்ய காந்த் சமூக ஊடகங்கள் மற்றும் செயற்பாட்டுத் தளங்களில் நுழையும் வேலையில்லாத சில நபர்களை கரப்பான் பூச்சிகள் என்றும் சமூகத்தின் ஒட்டுண்ணிகள் என்றும் வர்ணித்து சர்ச்சைக்குரிய ஒரு கருத்தை தெரிவித்தார்.

தனது கருத்து பொதுவில் இளைஞர்களைக் குறிவைத்தவை அல்ல என்றும் போலிப் பட்டங்களை வைத்திருக்கும் மோசடிப் பேர்வழிகளை மட்டுமே குறிவைத்து கூறப்பட்டது என்றும் பிரதம நீதியரசர் விளக்கமளித்த போதிலும், அந்த கருத்து இணையத்தில் தீயாய்ப் பரவிவிட்டது. ஏற்கெனவே மிகவும் கடுமையான வேலை வாய்ப்புப் போட்டிச் சூழலை எதிர் கொண்டிருக்கும் இந்திய இளைஞர்கள் தாங்கள் அவமதிக்கப்பட்டதாகவும் முற்றிலும் புறக்கணிக்கப்பட்டதாகவும் உணர்ந்தனர்.

இதற்கு பதிலடி கொடுக்கும் விதமாக மறுநாளே (மே 16) பொஸ்டன் பல்கலைக்கழக பட்டதாரியும் தகவல் தொடர்பு நிபுணருமான 30 வயதான அபிஜித் தீப்கே எனபவர் சமூக ஊடகங்களில் கரப்பான் பூச்சி ஜனதா கட்சி என்ற அமைப்பைத் தொடங்கினார். இது இந்தியாவின் ஆளும் பாரதிய ஜனதா கட்சியை பகிடி செய்யும் விதமாக வைக்கப்பட்ட பெயராகும்.

அவமதிப்பை அடையாளமாக மாற்றும் திடசங்கற்பத்துடன் "சோம்பேறிகளினதும் வேலையற்றவர்களின் குரல்" என்பதே அடையாளம் என்று பிரகடனம் செய்த தீப்கே "மதசார்பற்ற, சோசலிச, ஜனநாயக மற்றும் சோம்பேறித்தனமான" கட்சி என்ற நகைச்சுவையான சுலோகத்தை முன் வைத்தார்.

இன்றைய தலைமுறை இளைஞர்கள் (Gen Z) தங்களது நிஜ உலகப் பொருளாதார ஏமாற்றங்களை வெளிப்படுத்துவதற்கான ஒரு தளமாக, இணையக் கிண்டல்கள் (Memes) மற்றும் செயற்கை நுண்ணறிவு மூலம் உருவாக்கப்பட்ட அறிக்கைகளைப் பயன்படுத்துவதே இதன் நோக்கமாகும். இந்த இயக்கத்தின் பிரமாண்டமான வளர்ச்சி அரசியல் ஆய்வாளர்களை பெரும் அதிர்ச்சியில் ஆழ்த்தியிருக்கிறது.

இணையக் கிண்டல் கலாசாரத்தினாலும் இளைய தலைமுறையினர் மத்தியில் நிலவும் பொதுவான விரக்தியினாலும் தூண்டப்பட்ட கரப்பான் பூச்சி ஜனதா கட்சியின் இன்ஸ்டகிராம் பக்கம் ஐந்தே நாட்களில் ஒரு கோடி பின்தொடர்பாளர்களைக் கடந்தது. இது ஆளும் பாரதிய ஜனதா கட்சி போன்ற முக்கிய அரசியல் கட்சிகளின் அதிகாரபூர்வ சமூக ஊடகப் பங்கங்களை தற்காலிகமாக முந்திச் சென்றிருக்கிறது. மே மாதத்தின் இறுதி நாளான இன்று கரப்பான் கட்சியின் பின்தொடர்பாளர்களின் எண்ணிக்கை 2. கோடியைத் தாண்டியிருக்கிறது.

இது இந்திய தேர்தல் ஆணையகத்தில் பதிவு செய்யப்பட்ட ஒரு கட்சியல்ல. இது முற்றிலும் பரவலாக்கப்பட்ட டிஜிட்டல் எதிர்ப்பு இயக்கமாகவே இயங்கும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இணையக் கிண்டல்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு இயக்கம் உண்மையான கொள்கை மாற்றங்களாகவோ அல்லது முறையான அடிமட்ட மக்கள் போராட்டமாகவோ மாறுமா என்று அரசியல் விமர்சகர்கள் விவாதித்துக் கொண்டிருக்கிறார்கள்.

டிஜிட்டல் யுகத்தில் நகைச்சுவையும் கிண்டலும் அரசியல் எதிர்ப்பின சக்திவாய்ந்த கருவிகளாக விரைவாக மாறிவரும் சூழ்நிலையில் கரப்பான் கட்சியின் தாக்கம் தெற்காசிய நாடுகளுக்கும் மற்றைய பிராந்தியங்களுக்கும் பரவி பாரம்பரியமான அரசியல் கட்சிகளுக்கு பாரிய சவாலைத் தோற்றுவிக்கக்கூடியதாக இணையக் கட்சிகளின பெருக்கத்துக்கு வழிவகுக்கக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



## மக்கள் ஆணைக்குத் துரோகம்

வாக்காளர்களின் ஆள்காட்டி விரலில் வைக்கப்பட்ட அழியா மை அழிவதற்கு முன்பாகவே, கர்நாடகாவில் பாரதிய ஜனதா கட்சி முதன் முதலில் கையாண்ட "ஆபரேஷன் லோட்டஸ்" (தாமரை நடவடிக்கை) மாதிரியை ஒத்த ஒரு அதிர்ச்சிகரமான அரசியல் பாணியைத் தமிழக வெற்றிக் கழகம் தமிழ்நாட்டில் அறிமுகப்படுத்தியுள்ளது.

தங்களின் சட்டமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்த நான்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர்களை உடனடியாகத் தன்வசப்படுத்திய தன் மூலம், தன்னை ஒரு "தூய்மையான சக்தி" என்று சந்தைப்படுத்திக் கொண்ட வளர்ந்து வரும் த.வெ.க., தனது "கருத்தியல் எதிரியான" பா.ஜ.க.பயன்படுத்திய அதே சந்தேகத்திற்குரிய தந்திரத்தைக் கையாண்டுள்ளது.

இந்த மாதிரியானது, எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்களை இராஜினாமா செய்துவிட்டு ஆளுங்கட்சியில் சேர ஊக்குவிக்கிறது, அத்துடன் இடைத் தேர்தல் மூலம் மீண்டும் சட்டமன்றத்திற்குள் நுழைவதற்கான வாய்ப்பையும் வழங்குகிறது. இதன் சட்டபூர்வத்தன்மை அல்லது அந்த நான்கு சட்டமன்ற உறுப்பினர்கள் விரைவில் தேர்தல் களத்தில் மீண்டும் நுழைவதற்கான வாய்ப்புகள் எப்படி இருந்தாலும், இந்த நடவடிக்கையின் நோக்கம் "ஆயா ராம், கயா ராம்" என்ற குதிரை பேர மாதிரியிலிருந்து எந்த வகையிலும் வேறுபட்டதல்ல.

நம்பிக்கை வாக்கெடுப்பின் போது த.வெ. கவிற்கு ஆதரவாக வாக்களித்த அண்ணா தி.மு.க. அதிருப்தியாளர்கள், கட்சிக்குள் உள்ள பிரச்சினைகளையே தங்களின் இராஜினாமாவுக்குக் காரணமாகக் கூறினர், அதை சபாநாயகரும் மிக விரைவாக ஏற்றுக் கொண்டார்.

மக்கள் தங்களுக்கு அளித்த ஆணையை வெறும் 21 நாட்களுக்குள் அவமதித்தது ஒருபுறமிருக்க, அவர்களைத் தகுதி நீக்கம் செய்யக் கோரும் மனுக்கள் சபாநாயகரிடம் நிலுவையில் இருந்த நேரத்தில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மாநிலத்தின் முதன்முதலான தேர்தலுக்குப் பிந்தைய பலவீனமான கூட்டணி அரசாங்கத்தில் உள்ள உள்ளார்ந்த அரசியல் சோதனைகள் மற்றும் சமநிலைகள் குறித்து த.வெ.க.கவலை அடைந்துள்ளது என்பதும், கூட்டணிக் கட்சிகள் சவால்களை ஏற்படுத்தினால் அவர்களை வெளியேற்றுவதற்கு அது தயாராகி வருகிறது என்பதும் தெளிவாகத் தெரிகிறது.

இந்த நிகழ்வுப் போக்குகள் முற்றிலும் ஆச்சரியமளிக்கவில்லை, ஏனெனில் த.வெ.க. இதுவரை நெருக்கடிகளிலிருந்து தப்பிக்க மாற்றுத் திறனாளிகள் அல்லது எதிர்க் கட்சிகளின் ஆதரவைச் சுரண்டுவதில் ஒரு விசித்திரமான அரசியல் உள்ளுணர்வை வெளிப்படுத்தியுள்ளது - அது கரூர் பேரணி நெரிசலுக்குப் பிறகானதாக இருக்கட்டும் அல்லது அரசாங்கம் அமைக்கும் போதாக இருக்கட்டும்.

உடைந்த மக்கள் ஆணையின் பின்னணியில், த.வெ.க. ஒரே நேரத்தில் தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி மற்றும் அண்ணா திமு.க., பா.ஜ.க.வை உள்ளடக்கிய தேசிய ஜனநாயக கூட்டணி ஆகிய இரு தரப்பு அங்கத்தினர்களையும் நாடியது. ஆரம்பத்திலேயே, அம்மா மக்கள் முன்னேற்றக் கழகத் தலைவர் டி.டி.வி. தினகரன் தனது ஒரே ஒரு சட்டமன்ற உறுப்பினரைக் குதிரைப்பேரம் செய்ய முயற்சி நடந்ததைச் சுட்டிக்காட்டியிருந்தார்.

இது தவிர, தி.மு.க.வின் முன்னாள் கூட்டணிக் கட்சிகளின் ஆதரவைப் பெற்றிருந்த போதிலும், ஜோசப் விஜய் நம்பிக்கை வாக்கெடுப்புக்கு முந்தைய நாள், அண்ணா தி.மு.க.வின் பொதுச் செயலாளர் எடப்பாடி கே. பழனிசாமியைத் திட்டமிட்டுத் தவிர்த்து விட்டு, கறைபடிந்த அண்ணா தி.மு.க. அதிருப்திக் குழுவின் தலைவர்களைச் சந்திப்பதில் எந்தத் தயக்கமும் காட்டவில்லை.

இது வாக்கெடுப்பின் போது அண்ணா தி.மு.க.வின் சட்டமன்றக் குழுவுக்குள் பிரிவினையை ஊக்குவித்தது, இதனால் அதிருப்தியாளர்களைத் தகுதி நீக்கம் செய்வதற்கான கோரிக்கைகள் எழுந்தன. இப்போது, "ஆபரேஷன் லோட்டஸ்" என்பது மக்களின் ஆணையை சீர்குலைப்பதற்கான ஒரு பழக்கப்பட்ட உத்தியாக மாறிவிட்டது.

இந்தத் போக்கு, தேர்தல் சட்டங்களில் திருத்தங்களைக் கோருகிறது. குறிப்பாக, தங்களின் இராஜினாமாவால் ஏற்படும் உடனடி இடைத்தேர்தலில் வேட்பாளர்கள் போட்டியிடுவதைத் தடுக்கும் வகையில் ஒரு தடைக்காலம் விதிக்கப்பட வேண்டும். இல்லையெனில், இராஜினாமாவோடு கூடிய இத்தகைய கட்சித் தாவல்கள் ஜனநாயக வழிமுறைகளைச் சீர்குலைப்பதாகவே பார்க்கப்படும்.

(தி இந்து ஆசிரிய தலையங்கம்,
28 மே 2026)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# எரிபொருளில் சிக்கனம் கடைப்பிடிப்போம்!

ஈரான் மீது இஸ்ரேல்-அமெரிக்கா நடத்திவரும் போர் காரணமாக மேற்காசியப் பகுதிகளில் தொடர்ந்து பதற்றம் நிலவிவருகிறது. இதனால், கச்சா எண்ணெய் உற்பத்திமிகக் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. எனவே, உலகின் பலநாடுகள் தங்களின் எரிபொருள் பயன்பாட்டில் பல கடுமையான கட்டுப்பாடுகளை அமல்படுத்தத் தொடங்கியுள்ளன.

பல ஆசிய நாடுகள் பொதுமக்களுக்கு பொதுப் போக்குவரத்து, மிதிவண்டிப் பயணம், வாகனப் பகிர்வு போன்ற பயண முறைகளை பரிந்துரை செய்துள்ளன. மியன்மரில் தனியார் வாகனங்கள் பதிவு எண்களின் ஒற்றை, இரட்டை முறையில் அடுத்தடுத்த நாள்களில் மட்டும் இயங்க அனுமதிக்கப் பட்டுள்ளன. மேலும்,தென்னாப்பிரிக்காவின் பல மாகாணங்களில் பொதுமக்கள் அதிக அளவில் எரிபொருள் வாங்குவதில் ஒதுக்கீட்டு முறை அமல்படுத்தப்பட்டுள்ளது.

இந்திய மக்கள் தமது அன்றாட வாழ்வில் பெட்ரோலின் பயன்பாட்டைக் குறைக்கவேண்டும் என்று பிரதமர் மோடி கூறியுள்ளார்.அவர் தனது பாதுகாப்பு வாகனங்களையும் 50 சதவீதமாக குறைத்துள்ளார். அவரின் பாதுகாப்பு நெறிமுறைகளில் குறைவான வாகனங்களே பயன்படுத்தப்படுகின்றன. பொதுமக்கள் மின்சார வாகனங்களைப் பயன்படுத்தவும்,புதிய வாகனங்களை வாங்காமல் கையிருப்பு வாகனங்களையே பயன்படுத்தும்படியும் மேலும் அவர் வலியுறுத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது.

சர்வதேச நெருக்கடிக்கு மத்தியில் பலநாடுகளில் பெட்ரோலியப் பொருள்களின் விலை 30 வீதம் முதல் 70வீதம் வரை உயர்ந்துள்ள நிலையில் இந்தியாவில் நிலையாக உள்ளதாக அறியப்படுகிறது. பொருளாதார இழப்பு ஏற்பட்டுள்ள சமயத்திலும் எண்ணெய் நிறுவனங்கள் உள்நாட்டுநுகர்வோர்மீது சுமையை ஏற்றவில்லை. சமீப நாள்களில் முன்பதிவு செய்யப்பட்ட 1.26 கோடி சமையல் எரிவாயு சிலிண்டர்களில் 1.14 கோடி சிலிண்டர்கள் விநியோகம் செய்யப் பட்டுள்ளன. அதே காலகட்டத் தில், 17,000 டன்னுக்கும் அதிகமான வணிக திரவ எரி வாயுவும், 762 டன்னுக்கும் அதிகமான ஆட்டோ திரவ எரி வாயுவும் விற்கப்பட்டுள்ளன.



நாம் பெட்ரோலை திரவ எரிபொருளாக சமையலுக்கும், திட எரிபொருளாக வாகனங்களுக்கும் பயன்படுத்தி வருகிறோம். தற்போதைய சூழலில் பெட்ரோல் பயன்பாட்டைக் குறைக்கும் முன்னெடுப்புகளில் நாம் ஈடுபடுவது நல்லது. நமது வாகனங்களை சீரான வேகத்தில் ஓட்டுவது, அடிக்கடி வாகனத்தின் வேகத்தைக் கூட்டுவதையும், குறைப்பதையும் தவிர்ப்பது, வாகனத்தை வேகமாக இயக்கத் தொடங்குவதைத் தவிர்த்தல், வாகனத்தின் வேகத்தை படிப்படியாக அதிகரித்தல், அடிக்கடி பிரேக் போடுவதைத் தவிர்த் தல், நிறுத்துமிடத்துக்கு சற்று தொலைவிலேயே வேகத் தைக் குறைத்து நிறுத்துதல் போன்ற செயல்பாடுகளில் கவனம் செலுத்தலாம்.

போக்குவரத்து நெரிசல் அதிகமாக உள்ள நேரங்களிலும், பகுதிகளிலும் பயணத்தைத் தவிர்க்கலாம்.சிக்னல்களில் நீண்ட நேரம் காத்திருக்கும் நேரத்தில் வண்டியின் இயந்திரத்தை அணைத்துவிடுவது நல்லது. வாகனத்தின் டயர்களில் சரியான அளவுகாற்று இருப்பதை உறுதி செய்துகொள்ளுதல், இயந்திர எண்ணெய், காற்று வடிகட்டி போன்றவற்றை குறிப்பிட்ட கால இடைவெளியில் மாற்றுதல் போன்றவையும் நம் வாகனங்களின் எரிபொருள் தேவையைக் குறைக்கும். வாகனத்தில் அனுமதிக்கப்பட்டதை விட அதிக பொருள்களை ஏற்றிச் செல்வதைதவிர்ப்பது,நெடுஞ்சாலைகளில் செல்லும் போது மட்டும் குளிர்சாதனத்தை பயன்படுத்துவது, எரிபொருள் கலனில் தேவையானஅளவுமட்டும் பெட்ரோலைநிரப்புதல், இரு சக்கர வாகனங்களை சாய்வாக நிறுத்தாமல் நேராக நிறுத்துவது, வாகனத்தில் நம்பகமான உதிரிபாகங்களை மட்டுமே பயன்படுத்துதல், காலை நேரங்களில் மட்டும் எரிபொருளை நிரப்புதல், எரிபொருள் கலனில் எப்போதும் அரைப் பங்கிற்குமேல் எரிபொருள் இருக்கும்படி பார்த்துக்கொள்ளுதல், வாகனத்தை சரியான கால இடைவெளியில் பராமரித்தல், எப்போதும் சீரான வேகத்தில் வாகனத்தை இயக்குதல் போன்ற ஓட்டுநரின் செயல்பாடுகள் எரிபொருள் சிக்கனத்துக்கு உதவும்.

தற்போதுநிலவிவரும் எரிபொருள் தட்டுப்பாட்டை சமாளிப்பதற்காக நாம் மின்னடுப்பைப் பயன்படுத்தத் தொடங்கிவிட்டோம். எனவே, நாம் அன்றாட வாழ்வில் நுகரும் மின்சாரத்தின் அளவு இனிவரும் நாள்களில் அதிகரிக்கலாம். இவை அனைத்தும் சேர்ந்து பணவீக்கத்துக்கு நம்மைகொண்டு செல்லலாம். அதன் காரணமாக பல்வேறு பொருள்கள் மற்றும் பணிகளின் விலைகள் கணிசமாக உயரக் கூடும்.

நமது வருமானம் உயர வழியில்லாத நிலையில், விலைவாசி அதிகரிப்பு நமது வாழ்க்கையைப் புரட்டிப் போடலாம். நமது சேமிப்பு குறைந்து, கடன் வாங்க நேரலாம். எனவே, தற்போதுள்ள எரிபொருள் தட்டுபாடு எப்போது முடிவுக்குவரும் என்று யாருக்கும் தெரியாது. எனவே, ‘எரிபொருள் சிக்கனம் தேவை இக்கணம்’ என்பது சரிதானே?

(தினமணி)

# இந்தவார ராசிபலன் 31.05.2026 - 06.06.2026

ஞாயிற்றுக்கிழமை
பராபவ வருடம் - வைகாசி 17
நல்ல நேரம்: 7.31 - 09.00 ராகு காலம் : 4.30 - 06.00 திதி : பவுர்ணமி

**மேஷம்** [ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

மேஷ ராசி அன்பர்களே, இந்த வார பலன்படி, வாக்கு வன்மையால் எதையும் சாதிக் முடியும். குடும்பத்தை பற்றிய உயர்வான எண்ணம் இருக்கும். புதிய வீடு வாங்குவது, கட்டுவது தொடர்பான யோசனைகள் வரும். குடும்பத்தில் இதமான சூழல் நிலவும். வாங்கிய கடனை திருப்பி கடன் கொடுப்பதுடன் மற்றும் பிறரிடம் உதவி கேட்காத நிலை ஏற்படும். உடன்பிறப்பு வகையில் நன்மை ஏற்படும். கணவன் மனைவிடையே இருந்த கருத்து வேற்றுமை நீங்கும்.

**ரிஷபம்** [ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

ரிஷப ராசி அன்பர்களே, இந்த வார பலன்படி, குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் இனிதே நடைபெறும். ஏன் எனில் அவர்கள் உங்களுக்கு எதிராக செயல்பட வாய்ப்புண்டு. கணவன் மனைவிடையே இருந்த மனக்கசப்பு நீங்கும். உங்கள் செயல்களுக்கு முட்டுக்கட்டை போட்டவர்கள் விலகி விடுவர். வண்டி, வாகனங்களில் செல்லும்போது கவனமும், பேசும் வார்த்தையில் நிதானமும் தேவை. உத்யோகத்தில் மனநிறைவு ஏற்படும். தொழில், வியாபாரத்தில் போட்டி இருக்கும்.

**மிதுனம்** [ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

மிதுன ராசி அன்பர்களே, இந்த வார பலன்படி, குடும்ப பெருமையை வெகுவாக உயர்த்த முடியும். உடல் ஆரோக்கியத்தில் எந்த பிரச்னையும் இருக்காது. பழைய நண்பர்களின் சந்திப்பும் அவர்களால் நன்மைகளும் ஏற்படும். பிரியமானவர்கள் வழியில் சில பண விரையம் ஏற்படும்.குடும்பத்தை பற்றிய கவலைகள் ஏற்பட்டாலும் அவை முற்றிலும் நீங்கிவிடும். சொந்த பந்தங்களின் முழுமையான ஆதரவை பெற முடியும். உத்யோகம் தொடர்பான பயணங்கள் ஏற்படும். தொழில்புது ஒப்பந்தம் கையெழுத்தாகும்.

**கடகம்** [ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

கடக ராசிக்காரர்களுயோடு ஈடுபடலாம்.கடக ராசி அன்பர்களே, இந்த வார பலன்படி, பொருளாதார நிலை சீராக முன்னேற்றம் அடையும். முக்கிய காரணங்களுக்காக அடிக்கடி பயணங்கள் மேற்கொள்ள வேண்டிவரும், பெற்றோரின் முழு ஆதரவும் கிடைக்கும். உறவினர்களிடம் இருந்த கருத்துவேறுபாடு மறையும். வாகன பராமரிப்பு செலவுகள் கூடும். புதிய நட்பு வட்டாரம் உருவாகும். பொது பிரச்சனைகளில் தலையிடாமல் இருப்பது மிகவும் நல்லது.

**சிம்மம்** [ மகம், பூரம், உத்திரம் 1 ]

சிம்ம ராசி அன்பர்களே, குடும்பத்தில் முக்கிய பொறுப்புகளை ஏற்க வேண்டிவரும். உங்களுக்கு சம்பந்தமில்லாத விஷயங்களில் தலையிடாமல் இருப்பது நல்லது. உறவினர்களிடம் ஏற்பட்ட கருத்து வேறுபாடு நீங்கும். கொடுக்கல், வாங்கலில் கவனம் தேவை. குடும்ப வருமானம் சொல்லும்படி இருக்கும். பெண்கள் விஷயத்தில் சற்று கவனம் தேவை. உணவு விஷயங்களில் கட்டுப்பாடு மிகவும் அவசியம். வெளிநாடு சென்று வரும் யோகம் உண்டு. உத்யோகத்தில் சில சலுகைகள் கிடைக்கும். வியாபாரத்தில் விரிவாக்கம் ஏற்படும்.

**கன்னி** [ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

கன்னி ராசி அன்பர்களே, இந்த வார பலன்படி, மனதில் தன்னம்பிக்கையும், தைரியமும் அதிகரிக்கும். நீங்கள் திட்டமிட்ட காரியம் ஒன்றில் திடீர் மாற்றம் ஏற்படும். பெரியோர்களின் அன்பும், ஆசியும் கிட்டும். தேவையற்ற மனசஞ்சலம் உண்டாகலாம். கணவன் மனைவிடையே பணி போர் ஏற்பட்டு பின் சீராகும். கடன் தொல்லை குறைய ஆரம்பிக்கும். குடும்பத்தில் சலசலப்புகள் தோன்றினாலும் மகிழ்ச்சிக்குக் குறைவிருக்காது. யாரிடத்திலும் வீண் வாக்குவாதம் செய்ய வேண்டாம். உத்யோகத்தில் ஆதரவு பெருகும்.

**துலாம்** [ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

துலாம் ராசி அன்பர்களே, இந்த வார பலன்படி, எந்த ஒரு முக்கிய முடிவுகளை எடுக்கும் முன்பு ஒரு முறைக்கு பலமுறை யோசித்து செய்யவும். கடுமையான முயற்சியால் எடுத்த காரியத்தில் வெற்றி கிடைக்கும். குடும்பத்தில் புது திட்டங்கள் நிறைவேறும். மறைமுக எதிரிகளின் தொல்லை சுவடு தெரியாமல் மறையும். குடும்பத்தில் சாதகமான சூழ்நிலை உருவாகும். வீண் விவாதங்களை தவிர்க்கவும். உத்யோகத்தில் ஆதரவு பெருகும்.

**விருச்சிகம்** [ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

விருச்சிக ராசி அன்பர்களே, இந்த வார பலன்படி, புதிய முயற்சிகளில் சாதகமான பலன்கள் கிடைக்கும். பேசும் வார்த்தைகளில் பொறுமை அவசியம். பண வரவுக்கு எந்த குறையும் இருக்காது. குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்பு இருக்கும். வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும். சில நேரங்களில் எதை செய்வது எதை விடுவது என்ற தடுமாற்றம் ஏற்படும். உத்யோகத்தில் ஏற்பட்ட தடைகள் நீங்கும். தொழில், வியாபாரத்தில் நிறைய சாதிக்க முடியும்.

**தனுசு** [ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

தனுசு ராசி அன்பர்களே, இந்த வார பலன்படி, மனதில் இருந்த சஞ்சலம் நீங்கி மன நிம்மதி ஏற்படும். குடும்ப பொருளாதார நிலை உயரும். உங்களை சுற்றி இருப்பவர்களிடம் அனுசரணையாக நடந்து கொள்ளவும். இஷ்ட தெய்வ வழிபாடு மனநிம்மதியை தரும். எதிரிகளின் இன்னல்கள் குறைந்து ஏற்றமான நிலை உண்டாகும். வாகன பயணங்களிலும் இரவு நேர பயணங்களிலும் கவனமாக இருக்கவும். உத்யோகத்தில் பணிகளை விரைந்து முடிக்க முடியும். தொழில், வியாபாரத்தில் மந்த நிலை காணப்படும்.

**மகரம்** [ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

மகர ராசி அன்பர்களே, இந்த வார பலன்படி, குடும்பத்தில் பல நல்ல விஷயங்கள் நடக்கும். மனதில் தெளிவு நிலை உண்டாகும். விலகி நின்றவர்கள் கூட விரும்பி வந்து இணைவர். முன்பு தடைப்பட்ட காரியம் இப்போது இனிதே நடைபெறும். எதிர்பாலினத்தவருடன் பழகும்போது கவனம் தேவை. மறைமுக எதிரிகளின் தொல்லை நீங்கும். வெளிவட்டார பழக்கங்கள் விரிவடையும். உத்யோகத்தில் கவனமுடன் செயல்படுவது நல்லது.

**கும்பம்** [ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

கும்ப ராசி அன்பர்களே, இந்த வார பலன்படி, குடும்ப நபர்களின் ஆலோசனை முக்கிய சமயத்தில் கிடைக்கும். குடும்ப விவகாரங்களில் மற்றவர்கள் தலையீடு இல்லாமல் பார்த்துக்கொள்ளவும். பழைய கடன்களை அடைத்துவிடவும் வாய்ப்புண்டு. கணவன் மனைவி மனம் விட்டு பேசுவது நன்மை தரும். நீண்ட நாட்களாக இழுபறியில் இருந்த வேலைகள் கூட சீக்கிரத்தில் முடியும். குடும்பத்தில் புது நபர்களின் வருகை இருக்கும். விஐபிகளின் தொடர்புகள் கிடைக்கும். உத்யோகத்தில் உங்கள் திறமைகள் வெளிப்படும்.

**மீனம்** [ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

மீன ராசி அன்பர்களே, இந்த வார பலன்படி, குடும்பத்தில் சிக்கனமாக இருந்து சேமிக்க பழகவும். மனதில் புது தெம்பும், உற்சாகமும் தோன்றும். எதிர்பார்த்த இடத்திலிருந்து நற்செய்தி வந்து சேரும். கணவன் மனைவியிடையே சண்டை, சச்சரவுகளை தவிர்க்கவும். குடும்பத்தில் அமைதியான சூழல் நிலவும். வீட்டிற்கு தேவையான பொருட்களை வாங்க முடியும். அக்கம் பக்கம் உள்ளவர்களின் ஆதரவு பெருகும். திடீர் பயணங்களும் அவற்றால் நன்மைகளும் உண்டாகும். உத்யோகத்தில் உயர்வு நிலை உண்டு. தொழில், வியாபாரத்தில் நிறைய கற்றுக்கொள்ள முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# சட்டத்தின் முன் சகலரும் சமம் என்ற கோட்பாட்டின் கதியும் அனுராதபுர அட்டமஸ்தானாதிபதி விவகாரமும்!



வீரகத்தி தனபாலசிங்கம்

அநுராதபுரம் அட்டமஸ்தானாதிபதி பல்லேகம ஹேமரத்ன தேரர் சிறுமி ஒருத்தியை பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாகக் கூறப்படும் குற்றச்சாட்டு தொடர்பான வழக்கு நீதிமன்றத்தின் விசாரணையில் இருக்கும்போது அது பற்றி கருத்துக் கூறுவது முறையானது அல்ல என்ற போதிலும், அவர் அண்மையில் கைது செய்யப்பட்டு பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்ட விவகாரம் இலங்கையில் மத அதிகாரம், சட்டப் பொறுப்புக்கூறல் மற்றும் நீதித்துறை எதிர்நோக்கும் சவால்கள் பற்றி எழுப்பியிருக்கும் முக்கியத்துவம் வாய்ந்த பல்வேறு கேள்விகள், பொதுவெளியில் கருத்துக்களை பரிமாறிக்கொள்ள வேண்டிய அவசியத்தை ஏற்டுத்தியிருக்கின்றன.

இந்த விவகாரத்தைக் கையாள்வதில் அரசாங்கமும் தென்னிலங்கை அரசியல் கட்சிகளும் கடைப்பிடிக்கும் அணுகுமுறைகள் ‘சட்டத்தின் முன் சகலரும் சமத்துவமானவர்கள்’ என்ற அடிப்படை நீதிக் கோட்பாட்டை சவாலுக்கு உள்ளாகியிருக்கின்றன.

விசாரணையையும் கைதையும் தொடர்ந்து சந்தேகநபர் உடனடியாக கொழும்பில் தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அதன் மூலம் அவர் தனது கட்டாய விளக்கமறியல் காலத்தை சிறைச் சாலையில் கழிப்பதற்கு பதிலாக மருத்துவமனைப் படுக்கையிலேயே கழித்தார். செல்வாக்கு மிக்க நபர்கள் சட்டத்தின் கடுமையான பிடியில் இருந்து தப்பிப்பதற்காக பயன்படுத்தும் வழக்கமான ஒரு வழிமுறையாக இது இருந்து வருகிறது. சமூகத்துக்கு நெறி முறையைப் போதிக்கும் ஒரு தலைமைக் குருவானவர் கூட முன்னுதாரணமாக வாழத் தயாராயில்லை.

சிறுவர்கள் துஷ்பிரயோகம் தொடர்பான கடுமையான சட்ட விதிகளின் கீழ் சுமத்தப்பட்ட ஒரு குற்றச்சாட்டில் இவ்வளவு விரைவாக வழங்கப்பட்ட பிணை, சட்டத்தை நடைமுறைப்படுத்தும் விடயத்தில் சாதாரண குடிமக்கள் நடத்தப்படுகின்ற முறையுடன் ஒப்பிடும்போது கடுமையான முரண்பாடாக அமைந்திருக்கிறது. சட்டத்தின் முன் சகலரும் சமமானவர்கள் என்ற கோட்பாடு அலட்சியம் செய்யப்பட்டு ஒருவரது சமூக அந்தஸ்தின் அடிப்படையில் சட்டம் எவ்வாறு பாரபட்சமாக நடைமுறைப்படுத்தப்படுகிறது என்பதை இது அம்பலப்படுத்துகிறது.

இந்த விவகாரத்தில் அரசாங்கம் கடைப்பிடிக்கும் அணுகுமுறையும் தென்னிலங்கையின் பாரம்பரிய அரசியல் கட்சிகள் சந்தேக நபருக்கு நேர்ந்த கதியை இலங்கையின் பௌத்த பாரம்பரியத்துக்கு தோன்றியிருக்கும் ஒரு அச்சுறுத்தல் போன்று காட்டுவதற்கு மேற்கொள்ளும் முயற்சிகளும் இலங்கையின் அரசுக் கட்டமைப்பில் ஆழமாக வேரூன்றியிருக்கின்ற வரவேற்கத்தகாத சில யதார்த்தங்களைப் பின்னணியாகக் கொண்டவை.

முக்கியமான அரசியல் கட்சிகள் மூன்று முக்கிய பௌத்த பீடங்களின் (மகாசங்கத்தின்) ஆசியிலும் ஆதரவிலும் தங்கியிருக்கும் ஒரு பாரம்பரியத்தைக் கொண்டிருக்கின்றன. அரச அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு இரு தடவைகள் ஆயுதக் கிளர்ச்சிகளை நடத்திய பிறகு ஜனநாயக அரசியல் நீரோட்டத்தில் பிரவேசித்து தற்போது ஆட்சியதிகாரத்துக்கு வந்திருக்கும் மார்க்சியப் பின்புலத்தைக் கொண்டிருடிருந்த கட்சியும் இதற்கு விதிவிலக்காக இல்லை.

அட்மஸ்தானாதிபதி என்பவர் அநுராதபுரத்தில் அமைந்திருக்கும் ஜய சிறிமகா போதி மற்றும் எட்டு புனித தலங்களின் பாதுகாவலர். மிகவும் உயர்ந்த ஆன்மீக, கலாசார அதிகாரத்தைக் கொண்ட அவருக்கு எதிராக கடுமையான தண்டனையைப் பகிரங்கமாகக் கோருவது தங்களது பாரம்பரிய பௌத்த வாக்காளர் தளத்தை அதிருப்திக்கு உள்ளாக்கும் என்று அரசியல் கட்சிகள் அஞ்சுகின்றன.

வரலாற்று ரீதியாக உயர்மட்ட பௌத்த மதகுருமார் கட்ட மைப்பை



சாதாரண குடியியல் சட்டக் கண்காணிப்புக்கு அப்பாற்பட்ட ஒரு தனி நிறுவன மாகவே அரசியல் வர்க்கம் நடத்தி வந்திருக்கிறது. இந்த நிறுவன ரீதியான ‘விட்டுக்கொடுப்பை’ சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அமைப் புக்களின் விசாரணைகளை திட்டமிட்டு தாமதிப்பதன் மூலமாக குற்றவியல் சட்டம் அதன் இயல்பான பாதையில் பயணிப்பதை தடுப்பதற்கு முன்னெடுக்கப்பட்டு வந்திருக்கும் நடவடிக்கைகளில் காணக்கூடியதாக இருக்கிறது.

அட்டமஸ்தானாதிபதியின் கைது சகல சமூகங்களினதும் கவனத்தை ஈர்த்திருக்கும் அதேவேளை, சிறுவர் பாதுகாப்பு விவகாரத்தில் அரச நீதித்துறை எதிர் நோக்கும் ஒட்டுமொத்த நெருக்கடியையும் தெளிவாக வெளிக்காட்டுகிறது.

சிறுவர் பாதுகாப்புக்காக குரல் கொடுக்கும் அமைப்புக்கள் மற்றும் சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தரவுகளின் பிரகாரம் ஆயிரக்கணக்கான சிறுவர் துஷ்பிரயோக வழக்குகள் சட்டமா அதிபர் திணைக்களத்திலும் நீதிமன்றங்களிலும் வருடக்கணக்காக தேங்கிக் கிடக்கின்றன. குற்றம் சுமத்தப்படுபவர்கள் பெரும் சமூக - அரசியல் செல்வாக்கை கொண்டவராக இருக்கும்போது, தொடக்கத்தில் எழும் பொதுமக்களின் எதிர்ப்பு அடங்கும்வரை சட்ட நடைமுறைகளை காலவரையறையின்றி இழுத்தடிப்பதற்கே இந்த நிறுவன ரீதியான தாமதங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

‘சட்டத்தின் முன் சகலரும் சமத்துவமானவர்கள்’ என்ற கோட்பாட்டுக்கு பரீட்சையாக அமைந்த பல வழக்குகளை இலங்கை ஏற்கெனவே கண்டிருக்கிறது. தற்போது அட்டமஸ்தானாதிபதியின் வழக்கு அந்த தொடர்ச்சியில் பிந்தியதாக வந்திருக்கிறது. உயர்மட்ட மதக் கட்டமைப்பை பாதுகாப்பதை விடவும் பாதிக்கப்பட்ட சிறுமியின் உரிமைகள் மற்றும் நலன்களுக்கு சட்டக் கட்டமைப்பு முன்னுரிமை அளிக்குமா என்ற கேள்வி எழுந்திருக்கிறது.

இது இவ்வாறிருக்க, இலங்கையின் முக்கிய பௌத்த பீடங்களின் மகாநாயக்க தேரர்கள் அட்டமஸ்தானாதிபதி போன்ற உயர் நிலை மதகுருமார் சம்பந்தப்பட்ட சிறுவர் துஷ்பிரயோகக் குற்றச்சாட்டுக்கள் குறித்து சாதிக்கும் மௌனம் உணர்ச்சிபூர்வமான விவாதத்துக்குரிய பேசுபொருளாக மாறியிருக்கிறது.

குற்றம் சுமத்தப்பட்டவர்கள் யாராக இருந்தாலும், சிறுவர் துஷ்பிரயோகத்துக்கும் சுரண்டல்களுக்கும் எதிராக மகாநாயக்கர்கள் உறுதியாகக் குரல் கொடுத்திருக்க வேண்டும். சமூகத்தில் ஆன்மீக மற்றும் ஒழுக்க நெறிப் போதனைகளைச் செய்கின்ற தலைவர்கள என்ற வகையில் அது அவர்களின் தலையாய கடமையாகும். இந்த மௌனம் பாதிக்கப்படக்கூடிய சிறுவர்களைப் பாதூகாப்பதில் நிறுவன மட்டத்தில் ஏற்பட்டிருக்கும் தோல்வியாகவே நோக்கப்படுகிறது.

பகிரங்கமாக கண்டனங்கள் தெரிவிக்கப்படாமல் இருப்பதும் உள்ளக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்படாமல் இருப்பதும் நீதியையும் பொறுப்புக்கூறலையும் விட பௌத்த உயர் பீடங்கள் அவற்றின் சொந்த பிம்பம், அனுபவிக்கும் வரப்பிரசாதங்கள் மற்றும் அதிகாரத்தைப் பாதுகாப்பதற்கே முன்னுரிமை அளிக்கின்றன என்ற தோற்றப்பாடு தவிர்க்க முடியாமல் ஏற்படுகிறது.

**பௌத்த மதகுருமார் சம்பந்தப்பட்ட ஒழுக்காற்று விடயங்களை விசாரணை செய்வதற்கு தனியான தர்ம நீதிமன்றத்தை நிறுவுவதற்கான யோசனை “இரு நீதி வடிவங்களைக்” கொண்ட ஒரு முறைமையை நோக்கி இலங்கை படிப்படியாக நகரக்கூடும் என்ற அச்சத்தை தோற்றுவிக்கிறது.**

சிறுவர் துஷ்பிரயோகம் என்பது பௌத்த மதத்தின் அடிப்படைத் தத்துவங்களான அகிம்சை, கருணை ஆகியவற்றுக்கு முற்றிலும் முரணானது. பௌத்த உயர் தலைமையின் மௌனம் புத்தசாசனத்தின் அறநெறி அதிகாரத்தை சீர்குலைப்பதாகவே அமைகிறது என்பதே பரவலான அபிப்பிராயமாக இருக்கிறது.

சிறுவர் துஷ்பிரயோகம் போன்ற குற்றவியல் குற்றச்சாட்டுக்கள் நாட்டின் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அமைப்புக்கள் மற்றும் நீதித்துறையின் அதிகார வரம்பெல்லைக்குள் மாத்திரமே வருகின்றன என்பதால் உத்தியோகபூர்வ விசாரணை முடிவுகள் வெளிவரும் வரை காத்திருக்கவே பௌத்த உயர்பீடங்கள் விரும்புகின்றன என்ற கருத்தும் மறுபுறத்தில் முன்வைக்கப்படுகிறது.

பௌத்த மதத்தின் நிறுவனரீதியான படிநிலைகளை விடவும் சிறுவர் பாதுகாப்புக்கே முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்ற ஒருமித்த கோரிக்கை சிவில் சமூகத்தின் மத்தியில் அதிகரித்து வருகிறது. குற்றம் சுமத்தப்பட்டவரின் ஆன்மீக அந்தஸ்து, அரசியல் செல்வாக்கு அல்லது சமூகநிலை எதுவாக இருந்தாலும், எந்தவொரு தனிநபரும் சட்டத்துக்கு அப்பாற்பட்டவர் அல்ல என்பதை சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அமைப்புக்கள் மற்றும் நீதித்துறை ஊடாக நிரூபிப்பதே அரசின் முதன்மையான கடமை.

மதபீடங்களின் அல்லது அந்த பீடங்களின் நலன்களுடன் தங்களது அரசியல் நலன்களை அடையாளப்படுத்துகின்ற அரசியல் சக்திகளின் நெருக்குதல்களுக்கும் தலையீடுகளுக்கும் அடி பணியாமல் குற்றச்சாட்டுக்கள் குறித்து பொலிசார் பக்கச்சார்பற்ற - ஆதாரங்களின் அடிப்படையிலான விசாரணையை நடத்த வேண்டும் என்று சிவில் சமூக அமைப்புகள் கோரிநிற்கின்றன.

மதபீடங்களின் நலன்களுக்கும் அரசின் பணிகளுக்கும் இடையில் தெளிவான பிரிகோடு இருக்க வேண்டும். இலங்கையில் பௌத்த மதத்துக்கு அரசியலமைப்பு ரீதியான அதிமுன்னுரிமை கொடுக்கப்பட்டதன் விளைவாக அது சாத்தியமில்லை என்ற போதிலும், சிறுவர் துஷ்பிரயோகம் போன்ற குற்றவியல் முறைகேடுகள் முற்றிலும் மதசார்பற்ற குற்றவியல் சட்டத்தின் கீழ் மாத்திரமே வரும் என்பதை அரசு உறுதியான முறையில் தெளிவுபடுத்தி அரசியல் துணிவாற்றலை வெளிப்படுத்தியிருக்க வேண்டும்.

ஆனால், அதற்குப் பதிலாக, ஜனாதிபதி அநுர குமார திசநாயக்க பௌத்த மதகுருமாரின் ஒழுக்க விதிமுறைகளுக்கு அமைவாக மகாசங்க கட்டமைப்பைப் பேணுவதற்கும் தனியான தர்ம நீதிமன்றங்கள் மூலமாக ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுப்பதற்கான அதிகாரத்தை மீண்டும் வழங்குவதற்கு தேவையான சட்டமூலத்தை அரசாங்கம் விரைவில் பாராளுமன்றத்தில் கொண்டுவரும் என்று கடந்த வாரம் அறிவித்தார்.

சட்டத்தின் முன் சகலரும் சமத்துவமானவர்கள் என்பதே ஜனநாயக நாடொன்றின் அடிப்படைக் கோட்பாடுகளில் ஒன்று. சாதாரண குடிமக்கள் தொடக்கம் உயர்பதவி நிலைகளில் இருப்பவர்கள் வரை சகலரும் ஒரே சட்டக் கட்டமைப்பிற்குள் விசாரணை செய்யப்பட்டு நீதி வழங்கப்பட வேண்டும். நவீன ஜனநாயக ஆட்சிமுறையின் மையக் கோட்பாடாக இதுவே விளங்குகிறது.

இத்தகைய பின்புலத்தில், பௌத்த மதகுருமார் சம்பந்தப்பட்ட ஒழுக்காற்று விடயங்களை விசாரணை செய்வதற்கு தனியான தர்ம நீதிமன்றத்தை நிறுவுவதற்கான யோசனை “இரு நீதி வடிவங்களைக்” கொண்ட ஒரு முறைமையை நோக்கி இலங்கை படிப்படியாக நகரக்கூடும் என்ற அச்சத்தை தோற்றுவிக்கிறது. ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# நிலைப்படுத்தலில் இருந்து தாமதமின்றி மாற்றத்தை நோக்கி...



கலாநிதி ஜெகான் பெரேரா

தேசிய சமாதானப் பேரவையினால் கடந்த வாரம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நல்லிணக்கம் குறித்த மாநாடொன்றில், நாட்டின் எதிர்காலம் குறித்து கலந்துரையாடுவதற்காக பல்வேறு சமூகங்களைச் சேர்ந்த 250 க்கும் மேற்பட்ட மதகுருமார்கள், சிவில் சமூக ஆர்வலர்கள் மற்றும் அரசியல் பிரதிநிதிகள் ஒன்றுகூடியிருந்தனர்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய அமைச்சர் பிமல் இரத்நாயக்க, தேசிய நல்லிணக்கம் குறித்த அரசாங்கத்தின் அணுகுமுறையை விளக்கினார்.

நாட்டின் மீட்சியை அரசாங்கம் மூன்று கட்டங்களாகப் பார்ப்பதாக அவர் கூறினார். முதலாவது கட்டம் நிலைப்படுத்தல், இரண்டாவது அபிவிருத்தி, மூன்றாவது மாற்றம் ஆகும்.

நல்லிணக்கம் என்பது அந்த இறுதிப் புள்ளியில்தான் வரும் என்பதை அவர் மறைமுகமாகக் குறிப்பிட்டார். இதே மாநாட்டில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கலந்து கொண்டமையும் அவரது கருத்துக்களின் ஆக்கபூர்வமான தன்மையும் அந்த நம்பிக்கையை வலுப்படுத்துகின்றன.

தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் 2024 ஆம் ஆண்டில் பதவியேற்றபோது, நாடு சுதந்திரத்திற் குப் பின்னரான அதன் வரலாற்றில் மிகக் கடுமையான நெருக்கடிகளில் ஒன்றிலிருந்து மீண்டு வந்துகொண்டி ருந்தது. 2022 ஆம் ஆண்டின் பொருளாதார வீழ்ச்சியா னது எரிபொருள், உணவு, மருந்துகள் மற்றும் மின்சாரப் பற்றாக் குறைக்கு வழிவகுத்தது. பணவீக்கம் கடுமையாக உயர்ந்தது, வெளிநாட்டு இருப்புக்கள் மறைந்தன, நீண்ட வரிசைகள் அன்றாட வாழ்க்கையின் ஒரு பகுதியாக மாறின.

அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட அரசியல் கொந்த ளிப்பு 'அரகலய' (போராட்டம்) இயக்கத்தின் கீழ் நடந்த மக்கள் போராட்டங்களுக்குப் பிறகு, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் பதவி விலகலில் உச்சக்கட்டத்தை எட்டியது. அதன் பின்னர், சீர்திருத்தம் மற்றும் நல்லிணக்கம் பற்றிப் பேசிய, ஆனால் நேரடி மக்கள் ஆணையைப் பெறாதது என்று பரவலாகக் கருதப்பட்ட ஒரு தலைமையால் நாடு நிர்வகிக்கப்பட்டது.

நிலைப்படுத்தலையும் மாற்றத்தையும் முற்றிலும் தனித்தனி கட்டங்களாகக் கருத முடியாது என்பதையே இலங்கையின் கடந்தகால அனுபவங்கள் உணர்த்துகின்றன. நல்லிணக்கத்தை எதிர்காலத்தின் ஏதோவொரு தருணத்திற்கு ஒத்திவைப்பது, கடந்த காலத் தவறுகளை மீண்டும் செய்வதற்கான ஆபத்தையே ஏற்படுத்தும்.

ஒரு சரியான தருணம் வரும் வரை மாற்றம் என்பது முடிவில்லாமல் தள்ளிப்போடப்பட்டால், புதிய நெருக்கடிகளும், ஒத்திவைப்பதற்கான புதிய காரணங்களும் எப்போதும் வந்து கொண்டே இருக்கும். நாட்டின் தற்போதைய அபாயகரமான சூழ்நிலையை அரசாங்கம் நன்கு உணர்ந்துள்ளதாலேயே, அதன் உடனடி முன்னுரிமை நிலைப்படுத்தலாகத்தான் இருக்க வேண்டும் என்ற அமைச்சர் இரத்நாயக்கவின் வாதம் எழுகிறது.

கடந்த இரண்டு ஆண்டுகளில், பொருளாதார மற்றும் அரசியல் ஸ்திரத்தன்மையை மீட்டெடுப்பதில் அரசாங்கம் கணிசமான அளவிற்கு வெற்றியடைந்துள்ளது. பணவீக்கம் குறைந்துள்ளது, பற்றாக்குறைகள் முடிவுக்கு வந்துள்ளன, மேலும் பொது நிறுவனங்கள் ஓரளவிற்கு இயல்பு நிலைக்குத் திரும்பியுள்ளன.

மறுபுறம், மத்திய கிழக்கில் நிலவும் மோதல்கள் மற்றும் சுற்றுலா, வர்த்தகம், வாழ்க்கைச் செலவு ஆகியவற்றைப் பாதித்துள்ள தீவிர காலநிலை மாற்றங்கள் உள்ளிட்ட உலகளாவிய பாதகமான சூழ்நிலைகளால் நாட்டின் அபிவிருத்தி தொடர்ந்து சவால்களை எதிர்கொள்கிறது. நிலைப்படுத்தல் என்ற பெயரில் நல்லிணக்கம் காலவரையறையின்றி ஒத்திவைக்கப்படலாம் என்பதே இதில் உள்ள ஆபத்தாகும்.

அரசாங்கம் தற்போதே எதிர்க்கட்சிகள் மற்றும் சிவில் சமூகத்துடன் இணைந்து மாற்றத்திற்கான நடைமுறை நடவடிக்கைகளை தாமதமின்றித் தொடங்கினால் இந்த ஆபத்தைக் குறைக்க முடியும்.


இந்த மாநாட்டில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச பங்கேற்றமையும் அவரது ஆக்கபூர்வமான கருத்துக்களும் நல்லிணக்கம் குறித்த இருதரப்பு (அரசாங்க-எதிர்க்கட்சி) ஈடுபாடு இனிமேல் சாத்தியமாகலாம் என்ற உணர்வை வலுப்படுத்தியுள்ளது.


இலங்கைத் தமிழ் மற்றும் மலையகத் தமிழ் சமூகங்களின் பிரதிநிதிகள் வழங்கிய விளக்கங்களில் மாற்றத்தின் அவசியமும் அவசரமும் வலுவாக வெளிப்பட்டன. வடக்கு, கிழக்கில் தீர்க்கப்படாத போருக்குப் பின்னரான பிரச்னைகளால் ஏற்பட்டுள்ள விரக்தியை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். சிறீதரன் எடுத்துரைத்தார். போர்க்காலத்தில் ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்கள் தொடர்பான சர்ச்சைகள், பௌத்த விகாரைகளுடன் தொடர்புடைய சர்ச்சைகள் மற்றும் உள்ளூர் சமூகங்கள் உரிமை கோரும் பகுதிகளில் அரச ஆதரவுடன் முன்னெடுக்கப்படும் குடியேற்ற நடவடிக்கைகள் குறித்து அவர் குறிப்பிட்டார்.

போர் முடிவடைந்து கிட்டத்தட்ட இரண்டு தசாப்தங்கள் நிறைவடையவுள்ள நிலையிலும், வடக்கு, கிழக்கில் பாதுகாப்புப் படையினரின் பெருமளவிலான இருப்பு தொடர்வதையும் சிறீதரன் சுட்டிக்காட்டினார். 2009 ஆம் ஆண்டு ஆயுத மோதல் முடிவுக்கு வந்தது முதல் தமிழ் அரசியல் கலந்துரையாடல்களில் இந்த குறைகளே பிரதானமாக இருந்து வருகின்றன. போரினால் இடம்பெயர்ந்த குடும்பங்கள் தங்களின் பூர்வீக நிலங்களை மீட்பதற்காக இன்னமும் போராடி வருகின்றன.

வடக்கில் உள்ள சிவில் சமூக அமைப்புகள், உள்ளூர் நிர்வாகத்தின் மீது சிவில் கட்டுப்பாட்டை அதிகரிக்க வேண்டும் என்றும் சிவில் வாழ்க்கையில் இராணுவத்தின் தலையீட்டைக் குறைக்க வேண்டும் என்றும் பலமுறை கோரிக்கை விடுத்துள்ளன.

கல்விசார் ஆராய்ச்சிகளும், நடைமுறைக்களப் பணிகளும் நல்லிணக்கம் என்பது கண்ணியம், சமத்துவம் மற்றும் நீதி ஆகிய கேள்விகளிலிருந்து பிரிக்கப்பட முடியாத ஒன்று என்பதைக் காட்டியுள்ளன.






**இலங்கை, மிகவும் வசதியான ஓர் அரசியல் தருணம் வரும் என்ற நம்பிக்கையில் கடினமான சீர்திருத்தங்களை மீண்டும் மீண்டும் ஒத்திவைத்துள்ளது. ஆனால் வாய்ப்புகள் என்பவை ஒரு கனிவான அரசாங்கத்தால் பரிசாக வழங்கப்படுவதில்லை மாறாக அவை உருவாக்கப்பட்டு, போராடிப் பெறப்படுபவையாகும்.**

ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவரும், முன்னாள் அமைச்சருமான மனோ கணேசன், மலையகத் தமிழ் சமூகம் எதிர் கொள்ளும் நீண்டகாலப் பிரச்சினைகள் குறித்துக் கவனம் செலுத்தினார். சுதந்திரம் அடைந்தது முதற்கொண்டே நீடித்து வரும் தொடர்ச்சியான வீட்டு வசதி பற்றாக்குறை, நிலமற்ற நிலை மற்றும் பொருளாதார ஓரங்கட்டப்படல் ஆகிய பிரச்சினைகள் குறித்து அவர் உணர்வுப்பூர்வமாகப் பேசினார்.

சமூக ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் பாதிக்கப்படக்கூடிய நிலையில் இருக்கும் தோட்டப்புற சமூகங்கள் மீது, சமீபத்திய தீவிர காலநிலை நிகழ்வுகள் ஏற்படுத்திய பேரழிவுத் தாக்கத்தையும் அவர் சுட்டிக்காட்டினார். மலையகத் தமிழ் சமூகத்தின் நிலைமை இலங்கையில் நீடித்து வரும் சமூக நீதிப் பிரச்சினைகளில் ஒன்றாகவே இன்றும் தொடர்கிறது.

1948 ஆம் ஆண்டில் சுதந்திரம் பெற்ற பிறகு, அவர்களில் பெரும் பகுதியினருக்கு குடியுரிமை மற்றும் வாக்குரிமை மறுக்கப்பட்டு, சட்டவாக்கங்கள் மூலம் அவர்கள் நாடற்றவர்களாக்கப்பட்டனர். காலப்போக்கில் குடியுரிமை உரிமைகள் மீட்டெடுக்கப்பட்ட போதிலும், இந்த ஓரங்கட்டலின் சமூக - பொருளாதார விளைவுகள் தலைமுறைகள் கடந்தும் இன்றும் உணரப்படுகின்றன. நாட்டின் தோட்டப் பொருளாதாரத்திற்கு அவர்களின் பங்களிப்பு அளப்பரியதாக இருந்தபோதிலும், பல குடும்பங்களுக்கு இன்னும் பாதுகாப்பான வீட்டுவசதியும் நில உரிமையும் கிடைக்கவில்லை.

இந்த இரு கவலைகள் குறித்தும் அமைச்சர் இரத்நாயக்க அளித்த பதில்கள் அரசியல் ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்தவை. சமூகங்களுக்கு இடையில் குறுகிய இன அரசியலின் செல்வாக்கு வீழ்ச்சியடைந்து வருவது உள்ளிட்ட சமீபத்திய அரசியல் முன்னேற்றங்கள், பொதுமக்களின் அணுகுமுறையில் ஏற்பட்டுள்ள பெரும் மாற்றத்தைக் காட்டுவதாக அவர் வாதிட்டார். அவரைப் பொறுத்தவரை, அரசியல் களம் மாறியுள்ள விதம், இனப் பிரிவினை மற்றும் சமூக பாதுகாப்பின்மையை முதன்மையாக நம்பியிருக்கும் அரசியல்வாதிகள் பொதுமக்களின் ஆதரவைத் தக்கவைத்துக் கொள்வதை மேன்மேலும் கடினமாக்கியுள்ளது.

நீண்டகாலப் பிரச்சினைகளுக்கான தீர்வுகளில் எதிர்கால வாய்ப்புகளைக் காணும் இந்த மாறிவரும் அரசியல் அடித்தளம் பற்றிய மதிப்பீட்டை ஆதரிப்பதற்கான சான்றுகள் உள்ளன. 2022 ஆம் ஆண்டின் பொருளாதார வீழ்ச்சி அனைத்து சமூகங்களையும் சமமாகப் பாதித்தது டன், நல்லாட்சி, ஊழல் எதிர்ப்பு, பொறுப்புக் கூறல் மற்றும் பொருளாதார நீதி ஆகியவற்றை மையமாகக் கொண்ட ஒரு புதிய அரசியலை உருவாக்கியது.

'அறகலய' எதிர்ப்பியக்கம் அரசியல் மாற்றத்திற்கான பொதுவான கோரிக்கையில் சிங்களவர், தமிழர் மற்றும் முஸ்லிம்களை ஒன்றிணைத்தது.

இன ரீதியான குறைகள் மறைந்துவிடவில்லை என்றாலும், நாட்டின் எதிர்காலம் பிரிவினையில் அல்லாமல் ஒத்துழைப்பிலேயே தங்கியுள்ளது என்ற பரந்த புரிதலுக் கான இடத்தை இந்த நெருக்கடி உருவாக்கியது.

கருத்தரங்கில் எதிர்க்கட்சித் தலைவர் பிரேமதாச வெளி யிட்ட கருத்துக்கள் இந்த மாறிவரும் அரசியல் சூழலைப் பிரதிபலித்தன. தேசிய நல்லிணக்கத்தைப் பொருளாதார நீதியிலிருந்தும், பிராந்தி யங்களுக்கும் சமூக வர்க்கங்களுக்கும் இடையிலான ஏற் றத்தாழ்வுகளைக் களைய வேண்டியதன் அவசியத்திலி ருந்தும் பிரிக்க முடியாது என்று அவர் வலியுறுத்தினார். இந்தச் செய்தியைச் சமூகத்திற்குக் கொண்டு செல்வதில் சிவில் சமூக அமைப்புகளின் தேவை குறித்தும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கையின் வரலாற்றில் இன ஏற்றத்தாழ்வும் பொருளாதார ஏற்றத்தாழ்வும் பலமுறை ஒன்றை ஒன்று வலுப்படுத்திக் கொண்டுள்ளதால், நல்லிணக்கம் பற்றிய இந்த பரந்த புரிதல் மிக முக்கியமானதாகும்.

சுதந்திரத்திற்குப் பிறகு குடியுரிமை உரிமைகள் மறுக்கப்பட்டமை மலையகச் சமூகத்தைப் பல தசாப்தங்களாகப் பின்னோக்கித் தள்ளிய ஒரு வரலாற்று அநீதி என்று கல்விசார் ஆய்வுகள் அடையாளம் கண்டுள்ளன. இந்த மாற்றத்தை உறுதிப்படுத்துவதுடன், அதனை ஸ்திரத்தன்மை மற்றும் வளர்ச்சிச் செயல்முறையின் ஒரு பகுதியாக மாற்றுவதே தற்போதைய சவாலாகும்.

இதற்கான நடைமுறை ரீதியான முதல் படிகள் சாத்தியமானவையும் அவசியமானவையுமாகும். இறுதி கட்ட மாற்றத்திற்காகக் காத்திருக்காமல், உடனடியாகத் தொடங்கக்கூடிய சில நடவடிக்கைகள் வருமாறு:

இன்னும் அரசாங்கக் கட்டுப்பாட்டில் உள்ள குடிமக்களின் நிலங்களை விடுவித்தல்.

நிருவாக அதிகாரங்களை மேலும் பரவலாக்குதல்.

சிவில் விவகாரங்களில் இராணுவத் தலையீட்டைக் குறைத்தல்.

பொது நிர்வாகத்தில் மொழிச் சமத்துவத்தைப் பேணுதல் தோட்டத் துறையில் வீட்டுவசதி மற்றும் நில உரிமைத் திட்டங்களை விரைவுபடுத்துதல்.

எனவே, மாகாண சபைத் தேர்தல்கள் இறுதியாக இந்த ஆண்டு நடத்தப்படும் என்ற அரசாங்கத்தின் சமீபத்திய அர்ப்பணிப்பு முக்கியத்துவம் வாய்ந்தது. இந்தத் தேர்தல்கள் அடுத்தடுத்து வந்த அரசாங்கங்களால் பலமுறை ஒத்திவைக்கப்பட்டன. தேர்தலை நடத்துவது மட்டுமே இனப் பிரச்சினைக்கு முழுமையான தீர்வாகாது. ஆனால், அது ஜனநாயக நிறுவனங்களை மீட்டெடுப்பதற்கும் அர்த்தமுள்ள வகையில் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்வதற்குமான ஒரு விருப்பத்தை வெளிப்படுத்தும்.


இலங்கை, மிகவும் வசதியான ஓர் அரசியல் தருணம் வரும் என்ற நம்பிக்கையில் கடினமான சீர்திருத்தங்களை மீண்டும் மீண்டும் ஒத்திவைத்துள்ளது. ஆனால் வாய்ப்புகள் என்பவை ஒரு கனிவான அரசாங்கத்தால் பரிசாக வழங்கப்படுவதில்லை மாறாக அவை உருவாக்கப்பட்டு, போராடிப் பெறப்படுபவையாகும். பொருளாதார நெருக்கடி மற்றும் பொறுப்புக் கூறும் அரசாங்கத்திற்கான பொதுமக்களின் கோரிக்கையால் வடிவமைக்கப்பட்டுள்ள தற்போதைய தருணம், ஸ்திரத்தன்மை, வளர்ச்சி மற்றும் நல்லிணக்கத்தை நோக்கி ஒரே நேரத்தில் பயணிப்பதற்கான ஒரு அரிய வாய்ப்பை வழங்குகிறது.

மாகாண சபைத் தேர்தல்கள் அதற்கான முதல் அர்த்தமுள்ள படியாக அமையலாம். ஆனால், அதுவே இறுதியானதாக இருந்துவிடக் கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அநுரகுமர தரப்பினரின் ஆயுதகலாசார பின்னணியும் தமிழர் தங்கள் விடிவுக்காக ஆயுதம் ஏந்தியதும் ஒன்றா?

பனங்காட்டான்



இப்பொழுது எதற்கெடுத்தாலும் செயற்கை நுண்ணறிவு, காலநிலை மாற்றம் என்பவையே பேசுபொருளாகி நிற்கின்றன. இதன் வழியாக காலநிலைமாற்ற அகதிகள் என்ற புதியவர்க்கம் உருவாகி வருவதாக ஐரோப்பிய வட்டகை தெரிவித்துள்ளது.

இதுபற்றிய விரிவாக்கம் பற்றியதான குழாமொன்று காலநிலைமாற்ற அரசியல்வாதிகள் பற்றியும், இவர்களால் மக்களின் இயல்பு வாழ்க்கை கேள்விக்குறியாகி வருவதையும் சுட்டியுள்ளது. இவை ஒன்றுக்கொன்று உடன்பாடுள்ளவையாகக் காணப்படினும், இவைகளால் ஏற்படும் மாற்றங்கள் வெவ்வேறானவையாக பிரிந்துதென்படுகின்றன.

மனிதனின் நுகர்வுப் பொருட்களில் முதலிடம் வகிக்கும் அரசியிலிருந்து அனைத்துமே இன்று அரசியலாக மாறி வருகிறது. காலநிலைமாற்ற அரசியல்வாதிகளின் தலையெடுப்பு இலங்கை போன்ற சிறு நாடுகளிலிருந்து அமெரிக்கா போன்ற வல்லரசுகள் வரை பல நெருக்கடிகளையும், அமைதியின்மையையும் ஏற்படுத்தி வருகிறது.

ஏழரை தசாப்தத்தை தாண்டிய தமிழ்த் தேசியத்துக்கான போராட்டம் இன்று எங்கு கொண்டு சென்று நிறுத்தப்பட்டுள்ளது என்பதை ஆய்ந்துணர்ந்து பார்க்கும் ஓர் அரசியல் மாணவன் மட்டும் இதனை அறிந்துகொள்ள முடியுமென்றில்லை. அனைவருக்குமேபட்ட வர்த்தனமாகத் தெரிகிறது.

தமிழ்த் தேசியத்துக்கான வழித்தடம் பற்றிப் பேசுங்கால் இலங்கைத் தமிழரசுக் கட்சி இதில் தவிர்க்கமுடியாத ஒன்று. இலங்கைத் தமிழருக்கான முதலாவது அரசியல் கட்சியாக பதிவுபெற்றது ஜி.ஜி. பொன்னம்பலம் என்னும் சட்டமேதை தலைமையிலான அகில இலங்கை தமிழ் காங்கிரஸ். அதிலிருந்து வெளியேறிய சிலரால் உருவாக்கப்பட்டதே இலங்கை தமிழரசுகட்சி.

தென்னிலங்கையில் முதலில் உருவான ஐக்கிய தேசிய கட்சியில் அமைச்சராக விருந்தவர் எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்க. சில காலத்தின் பின்னர் இதிலிருந்து வெளியேறிய இவர் சிறிலங்கா சுதந்திரகட்சியை உருவாக்கியதை, தமிழ் காங்கிரஸிலிருந்து வெளியேறியவர்கள் தமிழரசுக் கட்சியை உருவாக்கியதற்கு சமாந்தரமாகப் பார்க்கலாம். காலத்தின் கோலமோ என்னவோ இந்த நான்கு கட்சிகளும் இன்று தங்கள் சொந்த மக்கள் மத்தியில் நிலைத்து நிற்கமுடியாது வெறும் அரசியல் செய்பவர்களாக மாறியுள்ள நிலைமையை காணமுடிகிறது.

> ஜனாதிபதி அநுரகுமரதிஸ்ஸ நாயக்கவின் ஆயுதகலாசார பின்னணியும், தமிழ் மக்கள் தங்கள் விடிவுக்காக ஆயுதமேந்திப் போராடியதும் ஒன்றா? ஓர் இனம் தனது மண்ணையும் மக்களையும் பாதுகாக்கப் போராடியதை, இன்னோர் இனம் நாட்டின் ஆட்சியைக் கவிழ்த்துஅதனைக் கைப்பற்ற முனைந்ததையும் எவ்வாறு ஒன்றாக்கமுடியும்?

சட்டவாளரான தமிழ் அரசியல் ஆய்வாளர் ஒருவர் இது பற்றி மேலோட்டமாக தமது கட்டுரை ஒன்றில் சுட்டியிருந்தார். சிங்கள தேசம் எங்களுக்கான புதிய அரசியல் தலைமை ஒன்றை இரண்டாண்டுகளுக்கு முன்னர் அங்கீகரித்து ஊழலற்ற ஆட்சிக்கு வழிவகுத்தது. ஆனால், தமிழ்த் தேசிய உணர்வு மக்கள் தங்களுக்கான அரசியல் காலநிலை மாற்றத்துக்கு ஏற்ப ஒரு மாற்றத்தை ஏற்படுத்த முடியாதிருப்பது இங்கு சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.

விரும்பியோ விரும்பாமலோ தமிழரசுக் கட்சியே இன்று தமிழரின் தலைமை அரசியல் சக்தியாக விளங்குகிறது. ஆயுதப்போராட்டம் உச்சம் பெற்றிருந்த வேளையில் அதற்கு தலைமை தாங்கிய தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழரசுக் கட்சியையும் அதன் வீடு சின்னத்தையும் தேர்தல்கள் ஊடாக தமிழ் மக்கள் அங்கீகரிக்கவேண்டிய நிலைமையை உருவாக்கிக் கொடுத்தனர். விடுதலைப் புலிகளின் முடிவை தமிழ் மக்களின் அடையாளமாக ஏற்றுள்ள தமிழ்த் தேசியம், தமிழரசுக் கட்சியை தொடர்ந்து தக்கவைத்துக் கொண்டிருக்கிறது.

ஆனால், யதார்த்தத்தில் பார்க்கின் தமிழரசுக் கட்சிஅதன் செயற்பாட்டைப் பொறுத்தளவில் தோற்றுப்போன ஒன்றாக மாறிவிட்டது. இலங்கை நாடாளுமன்றத்தில் மூன்றாவது பெரிய கட்சியாக தமிழரசுக் கட்சி இயங்கிவருவதாக அதன் பதில் செயலாளர் சுமந்திரன் அண்மையில் தெரிவித்திருந்தார். 1977ம் ஆண்டு தேர்தலில் இலங்கையின் இரண்டாவது பெரியகட்சியாக தமிழரசுக் கட்சியின் தலைமையில் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி இருந்தமையால் எதிர்க்கட்சி தலைவர் பதவி அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்துக்கு கிடைத்தது. அதே தமிழரசுக் கட்சி இன்று எவ்வாறு மூன்றாவது இடத்துக்குப் போனது என்பதை சுமந்திரன் சுயவிமர்சனம் செய்வாரானால் அரசியல் காலநிலை மாற்றத்தை புரிந்து கொள்ள முடியும்.

தனித்துவத்தைப் பேணியே தமிழரசுக் கட்சி செயற்படுகிறது என்றும் சுமந்திரன் மேலும் கூறியுள்ளதும் கவனத்துக்குரியது. தனித்துவம் என்று இவர் குறிப்பிடுவது தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் தெரிவை மதிக்கின்றனர் என்பதே தவிர சமகால தேர்தல் முடிவுகளை அல்ல என்பதை புரிந்துகொள்ளவேண்டியது அவசியம். இதனை சமகால அரசியல் காலமாற்றத்துக்குள் நின்றுபார்க்கின் சுமந்திரனின் தோல்வியையே ஆழமாக நோக்கநேரிடும். 2010ல் தேசியபட்டியல் ஊடாக ஓர் எம்.பியாக நியமிக்கப்பட்ட இவர் 2015 பொதுத்தேர்தலில் 58,043 வாக்குகள் பெற்று வெற்றிகண்டார். 2020 தேர்தலில் இந்த எண்ணிக்கை ஐம்பது வீதத்தால் குறைவாகி 27,854 வாக்குகள் மட்டும் பெற்றுவெற்றி பெற்றார். ஆனால், 2024 தேர்தலில் இவரைமக்கள் தோற்கடித்தனர்.

இதன் பின்னர் கட்சியின் தலைமைப் பதவிக்குபோட்டியிட்டு சிவஞானம் சிறீதரன் எம்.பியால் தோற்கடிக்கப்பட்டார். இதன் பின்னரே தமிழரசுக் கட்சி தனது எதிர்காலத்தைத் தீர்மானிப்பதற்கு நீதிமன்ற தீர்ப்பை எதிர்பார்த்திருக்கும் நிலைமை உருவாக்கப்பட்டது. இதனை தமிழரசுக் கட்சியின் தனித்துவ வரலாறு என்று சொல்லலாமா?

மட்டக்களப்பில் இடம்பெற்றகட்சியின் கூட்டம் ஒன்றில் பதில் செயலாளராகவிருந்தசத்தியலிங்கம் எவ்வாறு பதவியை ராஜினாமாசெய்யநிர்ப்பந்திக்கப்பட்டார் என்பதும், அப்பதவிக்கு சுமந்திரன் எவ்வாறுநியமிக்கப்பட்டார் என்பதும் கூட ஒருதனித்துவவிடயம்தான். இந்த - குறுநாடகம் பற்றிவிளப்பமாகவேறொரு தடவைபார்க்கலாம்.

சில வாரங்களுக்கு முன்னர் சிவஞானம் சிறீதரனை கட்சியிலிருந்து நீக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவென நடத்தப்பட்ட கூட்டத்தில் சுமந்திரனும் சிறீதரனும் ஏக வசனங்களால் மோதிக்கொண்டனர். தமிழ்த் தேசிய பரப்பில் கட்சிகளுக்கிடையே சுமுகமான இணக்கநிலை ஏற்படமுடியாதிருப்பதற்கு சுமந்திரன் - சிறீதரன் மோதலும், சுமந்திரன் - கஜேந்திரகுமார் சேர்ந்தியங்க முடியாதிருப்பதுமே அடிப்படை காரணங்கள் என்று அண்மையில் கட்டுரை ஒன்றில் குறிப்பிடப்பட்டிருந்தது யதார்த்தம்.

எவ்வகையிலாவது தெற்கில் அரசியல் சக்தியோடு இணைந்து தமிழ்த் தேசியத்தை அதற்குள் புதைத்துவிட வேண்டுமென்பதையே தனித்துவம் பேணுவதாக சுமந்திரன் கருதுவதுபோல தெரிகிறது. சிலவருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் ஜே.வி.பி. நடத்திய மேதின ஊர்வலத்தில் சுமந்திரன் செஞ்சட்டை அணிந்து அநுரகுமரதிஸ்ஸநாயக்க, ரில்வின் சில்வா ஆகியோர் சகிதம் சென்ற புகைப்படங்கள் இணையத்தளங்களில் இப்போதும் முகம் காட்டுகின்றன.

அண்மையில் மட்டக்களப்பு பொது நூலககட்டிடத் திறப்பு விழாவில் அநுரவுக்கு அண்மையில் நெருங்கியவாறு சுமந்திரன் நின்றதை பார்க்கமுடிந்தது. நூலகதிறப்புவிழா நாடாவை வெட்டும் கத்திரிக்கோலை சுமந்திரனிடம் அநுரகுமர கையளிக்க அதனை ஏற்று அவரே நாடாவை வெட்டிதிறந்துவைத்தார். தேர்தல்கள் மூலம் மக்களால் நிராகரிக்கப்பட்ட ஒருவர் கட்சியில் பதில் செயலாளராகி அதனை தமக்கு சாதகமாகப் பயன்படுத்தி, மட்டக்களப்பில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட இன்னொருவருக்கு கிடைக்கவேண்டிய வாய்ப்பை அபகரிக்கலாமா?

அன்றொருநாள் ரணில் விக்கிரமசிங்க கையளித்த சிங்கக்கொடியை சம்பந்தன் உயர்த்திப் பிடித்ததற்கும், இப்போது அநுரகுமர கையளித்த நாடாவை வெட்டி நூலகத்தை சுமந்திரன் திறந்து வைத்ததற்கும் என்ன வித்தியாசம்?

இந்நிகழ்வு பற்றிக் குறிப்பிடுகையில் இங்கு சுமந்திரன் தெரிவித்த ஓர் கருத்து அதிமுக்கியத்துவம் பெறுகிறது. 'ஜனாதிபதி அநுரகுமர திஸ்ஸநாயக்க ஜே.வி.பி. அரசியலின் ஆயுத கலாசார பின்னணியிலிருந்து வந்தவர். அதேபோன்று, எமது தமிழ் மக்களும் எமது விடிவுக்காக ஆயுதமேந்திப் போராடியவர்கள்' என்று சுமந்திரன் கூறியுள்ளது உண்மைக்குப் புறம்பானது.

1971 ஏப்ரலில் சிங்களஆட்சிபீடத்தைக் கைப்பற்றி நாட்டை ஆள்வதற்காகவே ஜே.வி.பி. ஆயுதமேந்தி படுகொலைகளை மேற்கொண்டது. ஆனால் தமிழ் மக்கள் தங்கள் பிறப்புரிமைக்கும், வாழ்வுரிமைக்கும் ஆயுதமேந்தத் தள்ளப்பட்டார்கள். நாட்டை ஆள்வதற்கு ஆட்சி பீடத்தை கவிழ்ப்பதற்காக தமிழ் மக்கள் போராடவில்லை. ஆரச பயங்கரவாதத்துக்கு எதிராக ஆயுத மேந்த தள்ளப்பட்ட இவர்கள் தமிழ் மண்ணையும் மக்களையும் காப்பாற்றவே இறுதிவரை போராடினார்கள்.

இந்த உண்மையை மறைத்து,ஜே.வி.பி. போன்று தமிழ் மக்களும் சிங்களஅரசை கவிழ்த்து இலங்கையின் ஆட்சியைக் கைப்பற்ற முயன்றார்கள் என்று வரலாற்றை ஏதற்காக சுமந்திரன் திரிபுபடுத்தினார்?

இதுபற்றி இன்னும் எழுதுவதற்கு பல விடயங்கள் உண்டு. காலநிலை அரசியல் மாற்றம் பற்றி அவ்வப்போது மேலும் எழுதுவோம். உண்மைகளை வரலாற்றில் பதிவிடுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




**தமிழர்** அரசியலை முன்னிலைப்படுத்தி பல்வேறு விடயங்கள் பேசப்படுகின்றன. தமிழ் மக்களுக்கான உரிமை என்பதுதான் அவற்றின் சாரம்சம். வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் தாயக நிலம், அதில் தமிழ் மக்கள் தங்களை தாங்களே தீர்மானித்து வாழ வேண்டும் - இந்த அடிப்படையில்தான் 1949இல் இலங்கை தமிழரசு கட்சி உருவாக்கப்பட்டது. சிங்கள ஆட்சியாளர்களோடு காலத்திற்கு காலம், மேற்கொண்ட பேச்சுவார்த்தைகள் தோல்வியில் முடிந்தமையின் விளைவாக தனிநாட்டுக் கோரிக்கை எழுந்தது. நமது அரசியல் வரலாற்றை ஒரு வரியில் பேசுவதாயின் இப்படித்தான் பதிவு செய்ய முடியும்.

அன்றைய சூழலில், சாதாரண மக்கள் மத்தியில் தனிநாடு என்பது கவர்ச்சிகர மான ஒன்றாக இருந்தது - அதே வேளை இளைஞர்கள் மத்தியில் எழுச்சிகரமான ஒன்றாக இருந்தது. ஆனால் தனிநாட்டு கோசத்தை உயர்த்திப்பிடித்த அன்றைய தமிழரசு கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர்கள் எவரிடமும் அதற்கான வேலைத்திட்டம் என்ன என்பது பற்றிய புரிதல் இருந்திருக்கவில்லை. ஆகக் குறைந்தது அதற்கான புரிதல் கூட அவர்களிடம் இருந்திருக்கவில்லை. தாங்கள் என்ன கூறுகின்றோம் - அதன் விளைவு என்ன என்பதை அறியாமலேயே அவைகள் பற்றி உணர்ச்சிகரமாகப் பேசிக் கொண்டிருந்தனர்.

ஆனால் மறுபுறமாக அவ்வாறான உணர்ச்சிகரமான பேச்சுக்கள் ஒரு தலைமுறையையே ஆட்கொண்டது. அவர்கள் அதனை உண்மையாகவே நம்பினர். இதன் விளைவாகத் தோற்றம் பெற்றதுதான் ஆயுத அமைப்புக்கள். உணர்ச்சியின் விளைவாக இல்லம் துறந்த அன்றைய இளைஞர் குழுக்கள் இந்தியாவின் பயிற்சியின் விளைவாக இயக்கங்களானார்கள். அன்றைய அரசியல் சூழலில் அவ்வாறான நிலைப்பாட்டை எடுக்க வேண்டிய தேவை இந்தியாவுக்கு இருந்தது. பற்றிக் சறத்தோடு, உள்ளாடை கூடப் போடாமல் இருந்த பொடியள் விடுதலை இயக்களானார்கள். தாம் எதை நோக்கிப் போகின்றோம் - அதன் விளைவுகள் என்ன - ஒரு வேளை தாங்கள் தோல்வியுற்றால் என்ன நடக்கும் என்னும் கேள்விகள் அப்போது இருந்திருக்கவில்லை.

எங்கே செல்கின்றோம் என்று தெரியாமலேயே ஒரு பயணத்தில் தங்களை அர்ப்பணித்திருந்தனர். இதில் புரட்சி, சோசலிசம், என்றெல்லாம் கற்பனைகள் தாராளமாகவே இருந்தது. பொதுவாக இளைய வயதில் அப்படியான கிளர்ச்சியூட்டக் கூடிய ஆசைகள் இயல்பானதும் கூட. ஒரு கட்டத்தில் எல்லாமும் முடிந்து போனது. எவரும் தேவையில்லை - நாங்கள் தனித்தே தமிழீழம் காண்போம் என்னும் நம்பிக்கையுடன் போராடிய விடுதலைப் புலிகள் அமைப்பும் இறுதியில் மிச்சமின்றி அழிக்கப்பட்டது. விடுதலைப் புலிகள் அமைப்பின் அழிவுடன் தமிழர் அரசியல் கோரிக்கை என்பது கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாகி விட்டது.

இதற்கு ஒரு அடிப்படையான காரணம் உண்டு. விடுதலைப் புலிகள் அமைப்பு ஏன் முற்றிலுமாக யுத்தத்தில் அழிக்கப்பட்டது? அதற்கு பின்னாலிருந்த காரணம் என்ன? விடுதலைப் புலிகளின் தலைமை மட்டும்தான் இலக்கு என்றால், ஏனையவர்களுக்கு மன்னிப்பு வழங்கியிருக்கலாம் அல்லது அவர்கள் ஜனநாயக அரசியலை நோக்கி வருவதற்கான வாய்ப்பை வழங்கியிருக்கலாம் ஆனால் ராஜபக்ச நிர்வாகம் அவ்வாறு செய்யவில்லை - விடுதலைப் புலிகளை முற்றிலுமாக அழிக்கும் ஒற்றை இலக்குடனேயே போரை முன்னெடுத்திருந்தது. அதில் பெற்றிபெற்றது. எந்தவொரு சர்வதேச போர் விதிகளும் பின்பற்றப் படவில்லை. சரணடைந்தவர்களில் முக்கியமானவர்களுக்கு என்ன நடந்தது என்று இன்றுவரையில் தெரியவில்லை. அவை தெரிந்துவிடக் கூடாது என்னுமடிப்படையில் மிகவும் நுட்பமாகவே அனைத்தும் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றது. அவ்வாறாயின் போரின் நோக்கம் என்ன?

200 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த ரஸ்ய போரியல் நிபுனர் ஜெனரல் கார்ல் வான் கிளாஸ்விட் போர் தொடர்பில் எழுதிய நூல் இன்றும் உற்றுநோக்கப்படுகின்றது. வரலாற்றில் எவரை விடவும் போர் பற்றி அவர் கூறியிருப்பதாகவே நோக்கப்படுகின்றது. அண்மையில்

யுத்தத்தில் வெற்றிபெற்ற தென்னிலங்கை, அதன் பின்னரான சூழலில், அரசியலை தோற்கடிக்கும் நகர்விலும் கணிசமான வெற்றிகளை பெற்று விட்டது. அதன் முழுமையான வெற்றிக்கு தடையாக இருப்பது அரசியலமைப்பின் பதின்மூன்றாவது திருத்தம் மட்டும்தான். அதனையும் எடுத்துவிட்டால் வெற்றி முழுமையடைந்துவிடும். பதின்மூன்றை இல்லாமலாக்க வேண்டும் என்று கூறும் தமிழ் குழுக்கள் யாரின் சேவகர்கள் என்பதை புரிந்து கொள்வதில் என்ன சிரமம் உண்டு?

அமெரிக்க சஞ்சிகை ஒன்று அரிய நேர்காணல் ஒன்றை வெளியிட்டிருந்தது. செயற்கை நுண்ணறிவைக் கொண்டு, ஜெனரல் கார்ல் வானுடன், தற்போது இடம்பெற்றுக் கொண்டிருக்கும் அமெரிக்க - ஈரான் போர் நகர்வுகள் தொடர்பில் உரையாடப்பட்டிருந்தது. போர் தொடர்பில் அவர் கூறும் ஒரு சில விடயங்களை எங்களுடைய சூழலுடன் பொருத்திப் பார்க்கலாம். அவர் கூறுகின்றார், போரின் இலக்கு என்பது அடிப்படையில் இராணுவ இலக்கல்ல மாறாக அரசியலே போரின் இறுதி இலக்காகும். அரசியலின் தொடர்ச்சியே போர். அரசியல் இலக்கொன்றை அடைவதற்காகவே போர் முன்னெடுக்கப்படுகின்றது. அரசியல் இலக்கின் அடிப்படையிலேயே போரின் விளைவுகள் தீர்மானிக்கப்படுகின்றன. அரசியல் இலக்கிற்கு ஏற்ப போர் மட்டுப்படுத்தப்படுகின்றது அல்லது விரிவுபடுத்தப்படுகின்றது.

இப்போது நமது விடயத்திற்கு வருவோம். விடுதலைப் புலிகள் அமைப்பை பூண்டோடு இல்லாமலாக்க வேண்டும் என்பது ஒரு அரசியல் இலக்காகும். இந்த இலக்கை அடைவதற்காகவே இத்தனை அழிவுகள் ஏற்படுத்தப்பட்டது. விடுதலைப் புலிகள் அமைப்பை ஒரு எல்லைக்குள் முடக்குவதுதான் தென்னிலங்கையின் அரசியல் இலக்காக இருந்திருந்தால், போரின் விளைவுகளும் மாறுபட்டிருக்கும் ஆனால் அவர்களுடைய அரசியல் இலக்கோ விடுதலைப் புலிகளால் முன்னிலைப்படுத்தப்பட்ட அரசியலை முற்றிலுமாக இல்லாமலாக்குவதாகும் - அந்த அரசியல் இலக்கை ஒரு பேரழிவின்றி அடைய முடியாது. இந்த அடிப்படையில்தான் யுத்தம் புலிகளை முழுவதுமாக அழிப்பதுடன் முடிவுற்றது.

இதனை இன்னும் இலகுவாக புரிந்து கொள்வதாயின், விடுதலைப் புலிகளின் அரசியல் இலக்கு தனிநாடு ஒன்றை அடைவதாக இருந்தது. தென்னிலங்கையின் இலக்கு அந்த தனிநாட்டுக்கான அனைத்தையும் இல்லாமலாக்குவதாக இருந்தது. புலிகள் அமைப்பு ஆயுதத்துடன் இருக்கும் வரையில் அந்த அரசியல் இலக்கை தோற்கடிக்க முடியாது என்பதே கொழும்பின் அரசியல் இலக்காக இருந்தது. இது தென்னிலங்கையின் முடிவு மட்டும்தானா அல்லது அது ஒரு உலகளாவிய முடிவா? எனது தேடலில், இது வெறுமனே தென்னிலங்கையின் முடிவாக மட்டும் இருப்பதற்கான வாய்ப்பு மிகவும் குறைவு. அவைகளுக்கு எவ்வித ஆதாரங்களையும் எவராலும் வெளிப்படுத்த முடியாவிட்டாலும் கூட, அரசியலை தர்க்கரீதியில் ஆராய்ந்தால், வெளிச்சக்திகளின் தலையீடுகள் இல்லாமல் அவ்வாறானதொரு முடிவை இலங்கை போன்றதொரு சிறிய நாட்டினால் எடுத்திருக்க முடியாது. அதாவது விடுதலைப் புலிகள் போன்றதொரு அமைப்பபு தெற்காசியாவில் தொடர்ந்தும் இருப்பது வெளித்தரப்புக்கள் எவருடைய நலன்களுக்கும் தேவைப்படவில்லை என்பதுதான் உண்மை.

இப்போது நமது அரசியலை திரும்பிப் பார்த்தால் நாம் நமக்குள் கேட்டுக் கொள்ள வேண்டிய கேள்வி ஒன்றுதான் - அதாவது, இந்தப் பின்னணியில் தென்னிலங்கை அரசியல் தீர்வு ஒன்றை தமிழர்களுக்கு வழங்கும் என்று, தமிழர்கள் எதிர்பார்க்கலாம்? உண்மையில் தென்னிலங்கையிடம் ஒரு நியாயமான அரசியல் தீர்வை எதிர்பார்ப்பது சரியானதா?

இந்த இடத்தில்தான் விடயங்களை ஆழமாகவும் நிதானமாகவும், தர்க்கரீதியாகவும் தமிழர்கள் நோக்க வேண்டும். தமிழ் மக்கள் மத்தியில் சிந்திக்கும் தரப்பாக தங்களை அடையாளப்படுத்திக் கொள்பவர்கள் நேர்மையாக விடயங்களை ஆராய முற்பட வேண்டும். விடுதலைப் புலிகள் பேச்சு வார்த்தையில் சமஸ்டியை ஆராய முற்பட்டதாக கூற முற்பட்டாலும் கூட, விடுதலைப் புலிகளின் தலைமை அதனை ஏற்றுக் கொண்டிருக்கவில்லை. அதில் ஆச்சரியப்படவும் ஒன்றும் இல்லை. விடுதலைப் புலிகளின் தலைமையை அறிந்த அனைவருக்கும் அது நன்கு தெரியும். அண்மையில் ஜி.எல்.பீரிஸ் யாழ்ப்பாணத்தில் வைத்து அந்த விடயங்களை முன்வைத்திருந்தார். பீரிஸ் ஒரு நேர்மையான நபரல்ல - அவர் தொடர்பில் இந்தக் கட்டுரையாளர் அக்கறைப்பட வில்லை ஆனால் இங்கு ஒரு விடயம் இருக்கின்றது அதாவது, சமஸ்டித் தீர்வில் கரிசனை இருந்திருந்தால், விடுதலைப் புலிகள் இல்லாமலாக்கப்பட்ட பின்னர் அதனை அரசாங்கம் முன்னெடுத்திருக்கலாம் அல்லவா! ஏன் அது நிகழவில்லை.

இந்த இடத்தைத்தான் தமிழர்கள் ஒன்றை ஆழமாக கவனிக்க வேண்டும். விடுதலைப் புலிகளின் அழிவின் மூலம், தனிநாட்டுக்கான அரசியல் மட்டும் தோற்கடிக்கப்படவில்லை மாறாக, சமஸ்டிக்கான - அரசியல் தீர்வுக்கான அரசியலும்தான் தோற்கடிப்பட்டது. அப்படித்தான் தென்னிலங்கை கருதுகின்றது. சமஸ்டி மட்டுமல்ல எந்தவொரு தனியான அரசியல் ஏற்பாடும் தமிழர்களுக்கு தேவையில்லை அதன் குரலாக இருந்த புலிகளை நாம் அழித்துவிட்டோம் - பின்னர் எதற்காக இப்போது தீர்வு பற்றிப் பேச வேண்டும். இதுதான் தென்னிலங்கையின் அரசியல் நிலைப்பாடு. ஏனெனில் தமிழர் வரலாற்றில் அரசியல் தீர்வு ஒன்றிற்காக தென்னிலங்கையுடன் பேரம் பேசும் பலத்தை விடுதலைப் புலிகள் அமைப்பு மட்டுமே கொண்டிருந்தது. இதனை பலரும் சரியாக புரிந்து கொள்ளவில்லை.

அவ்வாறாயின் தமிழர்கள் என்ன செய்வது, எங்கிருந்து அரசியலை ஆரம்பிப்பது? இந்த நிலைமையை துல்லியமாக மதிப்பிட்டால் உங்களுக்கு முன்னால் ஒரேயொரு பதில் மட்டுமே இருக்கும். அதாவது, தற்போது எது சாதகமாக இருக்கின்றதோ அதுதான் தமிழர்களுக்கான ஒரேயொரு வாய்ப்பாகும். அது என்ன? மாகாண சபை ஒன்றுதான் தமிழர்களுக்குள்ள வாய்ப்பு. இந்த அடிப்படையில்தான் நாம் தொடர்ந்தும் இந்த யதார்த்தத்தை முன்வைத்து வருகின்றோம். ஆனால் உண்மைகளுக்கு மதிப்பில்லாத தமிழ்ச் சூழலில், பொய்கள் மீதான மயக்கமும் கவர்ச்சியுமே மேலோங்கி இருக்கின்றது.

இப்போது தமிழ் மக்கள் மத்தியில் இருக்கும் சிந்திக்கும் தரப்பினர், அவர்கள் உண்மையிலேயே சிந்திக்கும் தரப்பினராக இருந்தால் பொய்கள் மீதான மயக்கத்திலிருந்து தங்களை விடுவித்துக் கொள்ள முயற்சிக்க வேண்டும். உண்மை ஒன்றேயொன்றுதான், அரசியலமைப்பின் பதின்மூன்றாவது திருத்தச்சட்டத்தை விடவும் உயர்வான ஒரு அரசியல் தீர்வு கானல் நீராகும். அதிலிருந்து முன்னோக்கி பயணிக்க முடியும் ஆனால் அதுவும் தமிழர்களின் கெட்டித்தனத்தினால் மட்டுமே சாத்தியப்படும். தற்போது மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட நிற்பவர்களை நோக்கினால், தமிழர்களால் அதுவும் முடியுமா என்னும் கேள்வியுண்டு. ஆனால் இதுதான் தமிழ் மக்களுக்கு முன்னாலுள்ள அரசியல் உண்மை. ஏனைய அனைத்தும் பொய்யாகும். யுத்தத்தில் வெற்றிபெற்ற தென்னிலங்கை, அதன் பின்னரான சூழலில், அரசியலை தோற்கடிக்கும் நகர்விலும் கணிசமான வெற்றிகளை பெற்றுவிட்டது. அதன் முழுமையான வெற்றிக்கு தடையாக இருப்பது அரசியலமைப்பின் பதின்மூன்றாவது திருத்தம் மட்டும்தான். அதனையும் எடுத்துவிட்டால் வெற்றி முழுமையடைந்துவிடும். பதின்மூன்றை இல்லாமலாக்க வேண்டும் என்று கூறும் தமிழ் குழுக்கள் யாரின் சேவகர்கள் என்பதை புரிந்து கொள்வதில் என்ன சிரமம் உண்டு?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# குற்ற உணர்ச்சியும் இனப்பிரச்சினைக்கான தீர்வும்?



நிலாந்தன்

“நான் அவதானித்திருக்கிறேன், அண்மை காலங்களில், சமூக ஊடக வலைத்தளங்களில், போர்க் குற்றங்களுக்கு ஆதரவுகாட்டுபவர்களில் அனேகமானவர்கள் சிங்கள இளையோர்தான். அவர்கள் அனைவரும் தகவல் யுகம், செயற்கை நுண்ணறிவு யுகம் என்பவற்றில் பிறந்தவர்கள். செய்யப்பட்ட குற்றங்களை அவர்கள் நிராகரிக்கவில்லை. இறுதியிலும் இறுதியாக அவர்கள் அதைக் ஏற்றுக் கொள்கிறார்கள், அதைக் குறித்து பெருமைப்படுகிறார்கள். இங்கே பிரச்சனை என்னவென்றால், தகவல்கள், கிடைக்கக் கூடிய தரவுகள், சான்றுகள் சிங்கள மக்களுக்குக் கொடுக்கப்படவில்லை என்பதல்ல. பிரச்சினை அதற்குமப்பாலானது. யூதசியோனி சத்தைப்போல அது அவர்களுக்குக் கற்பிக்கப்படுகிறது. ஆழமாக வேரோடிப்போய் உள்ளது...”. இக்குறிப்பை கடந்தவாரம் முகநூலில் எழுதியவர் சஞ்சுலா என்றபெயரைக் கொண்ட, ஒரு தென்னிலங்கையைச் சேர்ந்த ஓர் அரசியல் செயற்பாட்டாளர்.

அண்மை வாரங்களாக, குறிப்பாக முள்ளிவாய்க்கால் நினைவு நாளை முன்னிட்டு, தமிழ் மக்களும் தமிழ் மக்களுக்கு நீதி வேண்டும் என்றுகேட்கின்ற சிங்களச் செயற்பாட்டாளர்களும் தமிழிலும் சிங்களத்திலும் சமூக ஊடக வலைத்தளங்களில் எழுதும் குறிப்புக்களுக்கு சிங்களப் பெயரைக் கொண்ட ஒரு தொகுதியினர் பதில்வினையாற்றி வருகிறார்கள். இப்பதில்கள் அநேகமானவை தமிழ் மக்களை அவமதிப்பவை. இறுதிக்கட்டப் போரில் கொல்லப்பட்டவர்கள் பொதுமக்கள் அல்ல என்று கருத்து தெரிவிப்பவை. அது ஒரு பயங்கரவாத இயக்கத்துக்கு எதிரான போர் என்பதனால், அங்கே கொல்லப்பட்டவர்கள் பயங்கரவாதிகளே என்று கருத்துரைப்பவை. அங்கே இன அழிப்பு நடக்கவில்லை என்று வாதிடுபவை. குறிப்பாக விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் அதன் தலைவருக்கும் எதிராகவெறுப்பைக் கக்குபவை.

இதே காலப்பகுதியில் புலம்பெயர்ந்த தமிழ்ச் செயற்பாட்டாளர் ஒருவரும் இதே விடயத்தைச் சுட்டிக்காட்டியிருந்தார். இசைப்பிரியா பற்றிய ஒரு பதிவின் கீழ் வந்த சிங்களப் பெயர் கொண்டவர்கள் எழுதியபதில் குறிப்புகளை அவர் அங்கே தொகுத்துப் போட்டிருந்தார். அப்பதில்வினைகளில் ஒருபகுதி கொல்லப்பட்ட இசைப்பிரியாவை ஆபாசமாகச் சித்தரிப்பவை. இன்னொரு பகுதி அவர் ஒரு பயங்கரவாதி என்ற அடிப்படையில் கொல்லப்படவேண்டியவர் என்று நியாயப்படுத்துபவை.

இன அழிப்புக்கு நீதிகேட்கும் தமிழ் மக்கள் மற்றும் சிங்கள செயல்பாட்டாளர்களின் பதிவுகளுக்கு எதிராக ஓர் அணி திட்டமிட்டு அந்த டிஜிட்டல் தளத்தைப் பயன்படுத்துகிறது என்ற ஒரு தொகுக்கப்பட்ட அவதானிப்பு உண்டு. ஆனால் அவ்வாறு திட்டமிட்டு அணியாகச் செயல்படுபவர்களின் பின்னணியில் அரசாங்கத்தின் “டிஜிட்டல் புரோமோஷன்” அணி உண்டு என்ற முடிவுக்கு உடனடியாகவரத் தேவையில்லை. இது போன்ற தமிழ் மக்களுக்கு எதிரான, தமிழ் மக்கள் கேட்கும் நீதிக்கு எதிரான கருத்துக்களைக் கூறும் சிங்கள மக்களில் ஒரு பகுதியினர் நன்கு நிறுவனமயப்பட்டு காணப்படுகிறார்கள் என்பது தான் இப்போதைக்குத் தெரியவருவது.

தமிழ் மக்கள் ஓர் அரசு இல்லாத தரப்பு. அதேசமயம் சிங்கள மக்களைப் பொறுத்தவரையிலும் போரில் தமது நிலைப்பாட்டை நியாயப்படுத்துவதற்கு ஓர் அரசாக அவர்களிடம் எல்லாவிதமான உபகரணங்களும், வளங்களும், தளங்களும் வசதிவாய்ப்புகளும் உண்டு. உதாரணமாக ஐநாவிலும் உலக தலைநகரங்களிலும் தமிழ் மக்கள் அரசாங்கத்துக்கு எதிராக முன்வைக்கும் குற்றச்சாட்டுகளை எதிர்கொள்வதற்கு அந்தந்த நாடுகளின் தூதரகங்கள் உண்டு. இலங்கை வெளிவரவு அமைச்சு அதனை ஒரு மையத்திலிருந்து திட்டமிட்டு செயல்படுத்தும்.

குறிப்பாக கடந்த 16 ஆண்டுகளிலும் கோத்தபாய ராஜபக்சேவின் ஆட்சிக்காலத்தில், முன்னாள் கடற்படை பிரதானி ஆகியசரத் வீரசேகர ஐநாவுக்கு சென்றிருந்தார். தமிழ்த் தரப்பின் குற்றச்சாட்டுகளுக்கு எதிரானபதில் குற்றச்சாட்டுகள் அவரிடம் இருந்தன. அதற்கென்று நிறைய வீட்டு வேலைசெய்து, தொகுக்கப்பட்ட ஆவணங்களோடு அவர் ஐநாவிற்குச் சென்றிருந்தார். அங்கே அவர் நினைத்ததைச் சாதிக்கமுடியவில்லை என்பது வேறுவிடயம். ஆனால் அப்படி ஒரு ஏற்பாடு அங்கே இருந்தது. இப்பொழுதும் இருக்கிறது.

இந்த அனுபவத்தின் பின்னணியில்



வைத்து அண்மை மாதங்களாக சமூக வலைத்தளங்களில் தமிழ் மக்களின் நீதிக்கான கோரிக்கைகளுக்கு எதிராக முன்வைக்கப்படுகின்ற சிங்களத் தரப்பு விமர்சனங்களைத் தொகுத்து பார்க்கலாம் என்று சில தமிழ் செயற்பாட்டாளர்கள் கருதுகிறார்கள். அதேசமயம் இது பொதுவான சமூகவலைத்தளச் சூழல் என்று இன்னொரு பகுதியினர் கருதுகிறார்கள்.

சமூக ஊடகவலைத்தளச் சூழல் என்பது உலகம் முழுவதும் அப்படித்தான் காணப்படுகிறது என்று அவதானிக்கப்பட்டுள்ளது. அதுபெருமளவுக்கு சமானியர்களின் தளம். சமானிர்களிடம் இருக்கக் கூடிய கூட்டு உணர்வுகளையும் கும்பல் மனோநிலையையும் பிரதிபலிப்பது. அதனால்தான் அக்கும்பல் மனோநிலைக்கூடாக இன்னொரு இனத்துக்கு எதிராக, மதத்திற்கு எதிராக, பால் பிரிவினருக்கு எதிராக கருத்துக்களை நொதிக்கசெய்யும் ஒரு தளமாகவும் அது காணப்படுகிறது. அதனால் தான் ரோகியங்கா முஸ்லிம் இனப்படுகொலையில் முகநூலுக்குப் பங்குண்டு என்று ஐநா நிபுணர்கள் குற்றம் சாட்டினார்கள். எனவே இது உலகப் பொதுவான ஒரு விஷச் சூழல் என்று எடுத்துக் கொள்ளலாம்.

அது பெருமளவுக்கு அறிவாழம் இல்லாதது, மேலோட்டமானது, மேம்போக்கானது, எதையும் அதன் உணர்ச்சித் தளத்திலேயே விளங்கிக் கொள்வது. இதற்கு சிங்கள சமூகத்துக்குள்ளேயே மற்றொரு உதாரணத்தை இங்கு காட்டலாம். சில ஆண்டுகளுக்கு முன் காலிமுகத்திடலை தம்வசப்படுத்திய இளையதலைமுறை, அங்கே அரசாங்கத்திற்கு எதிராகப் போராடியது. அப்போராட்டக் கிராமத்தில் புத்திஜீவிகள், படைப்பாளிகள், செயற்பாட்டாளர்கள் போன்றவர்கள் உரையாற்றினார்கள். ஒருநாள் அங்கே பிரிட்டோ பெர்னாண்டோ உரையாற்றினார். பிரிட்டோ ஒரு மனித உரிமைச் செயற்பாட்டாளர். தென்னிலங்கையில் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்காகத் தொடர்ச்சியாகப் போராடிவருபவர். கடந்தவாரம் அவருக்கு இந்த ஆண்டுக்கான **“Per Anger Prize”** விருது கிடைத்தது.

பிரிட்டோ, காலிமுகத்திடலில் பேசிக் கொண்டிருந்தபோது, அவருடைய பேச்சின் நேரலைக்கு கீழேவந்த நூற்றுக்கணக்கான குறிப்புகளைத் தொகுத்த எனது சிங்கள நண்பர் ஒருவர் பின்வருமாறு சொன்னார் “இந்தப் போராட்டம் சிங்கள இளையோர் மத்தியில் அரசியல் அறிவை **(Political literacy)** ஓரளவுக்கு வளர்த்திருக்கிறது. ஆனால் வரலாற்று அறிவை **(Historical literacy)** வளர்த்திருக்கவில்லை” என்று. ஏனென்று கேட்டேன். அங்கே பிரிட்டோவின் பேச்சை ரசித்த பலருக்கும் அவருடைய மனித உரிமைச் செயற்பாட்டு வாழ்க்கைப் பின்னணி தெரிந்திருக்கவில்லை என்றுஅவர் சொன்னார்.

> **சிங்கள மக்கள் மத்தியில் தமிழ் மக்களின் நீதியை ஏற்றுக்கொள்பவர்களின் தொகை எந்த அளவுக்கு அதிகரிக்கின்றதோ, அந்த அளவுக்கு இனப்பிரச்சனைக்கான தீர்வும் இலகுவாகிவிடும். இலங்கை இனப் பிரச்சனைக்கு பிரிவினை அல்லாத ஒரு தீர்வைக் காண்பது என்று சொன்னால், சிங்கள பௌத்த கூட்டு உளவியலின் குற்றவுணர்ச்சியைத் தூண்டவேண்டியது ஒரு முன்நிபந்தனை ஆகும்.**

இதுதான் சமூக ஊடகவலைத்தளச் சூழலில் உள்ளபொதுப் போக்கு. “தனக்குத் தெரியாத ஒன்றைக் குறித்துக் கருத்து கூறும் துணிச்சல்”. எனவே இப்பொழுது இன அழிப்புக்கு நீதி கேட்கும் தமிழ், சிங்கள பதிவுகளுக்கு எதிரான குறிப்புகளிலும் அதன் பிரதிபலிப்புகளைப் பார்க்கக்கூடியதாக இருக்கிறது என்பதுதான் அடிப்படை உண்மை.

அதேசமயம், இங்கு “அரகலய”வுக்குப் பின்னரான உற்சாகமூட்டும் மாற்றம் ஒன்றைச் சுட்டிக்காட்டவேண்டும். தமிழ் மக்களின் கோரிக்கைகளுக்கு ஆதரவாக சிங்கள மக்கள் மத்தியிலும் செயற்பாட்டாளர்கள் துணிந்து முன்வந்து கருத்துத் தெரிவித்து வருகிறார்கள். அண்மை ஆண்டுகளில் தென்னிலங்கையில் அவர்கள் முள்ளிவாய்க்கால் நாளை அனுஷ்டிக்கிறார்கள். அதேசமயம் சமூக ஊடக வலைத்தளங்களிலும் தமிழ் மக்களின் கோரிக்கைகளுக்கு ஆதரவாக எழுதுகிறார்கள்.

இது இன அழிப்புக்கு எதிரான நீதியைக் கேட்கும் தமிழர்களுக்கு உற்சாகமூட்டக்கூடிய ஒரு விடயம். அண்மையில் கத்தோலிக்க மதகுருவும் அரகலய போராட்டத்தின் பிரதானிகளில் ஒருவருமாகிய, அருட்தந்தை ஜீவந்தபீரிஸ் தெரிவித்த தகவல்களும் அந்த அடிப்படையிலானவைதான். கடந்தவாரம் மே 18 நினைவு நாளை முன்னிட்டு அவர் கருத்துத் தெரிவிக்கும்போது இலங்கையில் நடந்தது இன அழிப்பு என்று துணிந்து சொன்னார். ஏற்கனவே 2022 ஆம் ஆண்டு நான்கு தமிழ் ஆயர்கள் இணைந்து வெளியிட்ட அறிக்கையும் நடந்தது இன அழிப்பு என்பதனை ஏற்றுக்கொண்டிருந்தது.

ஆனால் அருட்தந்தை ஜீவந்த தெரிவித்திருந்த கருத்துக்களுக்கு, அவர் சார்ந்தகத்தோலிக்கத் திருச்சபையின் கொழும்பு ஆயர் இல்லத்தின் உத்தியோக பூர்வசெய்திக் குறிப்பு ஒன்று மறுப்புத் தெரிவித்திருந்தது. அது இலங்கை கத்தோலிக்கு சமூகத்துக்குள்ளேயே பலத்தவாதப் பிரதிவாதங்களை ஏற்படுத்தியிருக்கிறது.

இலங்கைத் தீவின் மதப் பிரிவுகளுக்குள் இனப்பிரச்சினையை அதிகம் ஆழமாக பிரதிபலித்த ஒரு மதப்பிரிவு கத்தோலிக்கத் திருச்சபை தான். இரண்டு சமூகங்கள் மத்தியிலும் மிகப்பலமாகக் காணப்பட்ட இத்திருச்சபையானது, கடந்த பல தசாப்தங்களாக இனமுரண்பாடுகளைக் கூர்மையாக பிரதிபலித்திருக்கிறது. சிங்கள பகுதிகளில் காணப்படும் ஆயர்களும் அருட்தந்தைகளும் தாங்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் சமூகத்தின் இன உணர்வுகளை அதிகம் பிரதிபலித்தார்கள். இதில் ஜீவந்தபோல விதிவிலக்குகள் உண்டு. அதேசமயம் தமிழ்ப்பகுதிகளில் கத்தோலிக்க சமூகத்துக்கு வழிகாட்டிய குருவானவர்களும் ஆயர்களும் தெளிவாக இன அழிப்புக்கு எதிரான போராட்டத்தில் முன்நின்றார்கள். அவ்வாறு முன்நின்றவர்களில் மகிமைக்குரிய ஒருவராக முன்னாள் மன்னார் ஆயர் ராயப்பு ஜோசப் அவர்களைக் கூறலாம்.

இப்பொழுது மட்டுமல்ல யுத்தகாலங்களிலும், கத்தோலிக்கத் திருச்சபை எவ்வாறு இன முரண்பாடுகளைப் பிரதிபலித்தது என்பதற்கு ஓர் உதாரணத்தைக் காட்டுவார்கள். அப்பொழுது “வெரிதாஸ் வானொலி” தமிழ் மக்களால் அதிகம் விரும்பிக் கேட்கப்பட்டது. அந்த வானொலிக்கூடாகவே ஒருஜெகத் கஸ்பார் என்ற மதகுரு தமிழ் மக்கள் மத்தியில் நன்கு பிரபல்யமானார். வெரிதாஸ் வானொலியின் தமிழ்ப் பிரிவுசெய்தி கூறும்போது, தமிழ் இளையோரை போராளிகள் என்று விழிக்கிறது என்றும், அதேசமயம் சிங்களப் பிரிவு அவர்களை “ரஸ்தவாதிகள்” அதாவது பயங்கரவாதி கள் என்று அழைக்கிறது என்றும் ஒரு விமர்சனம் அப்பொழுது வந்தது.

இவ்வாறு இனமுரண்பாட்டை ஆழமாகப் பிரதிபலித்த ஒரு திருச்சபைக்குள், 17 ஆண்டுகளின் பின்னரும் அந்த முரண்பாடுகள் ஆழமாக வேரோடியுள்ளன என்பதைத்தான் கடந்த முள்ளிவாய்க்கால் நாளிலிருந்து இடம்பெற்று வருகின்றவாதப் பிரதிவாதங்கள் நமக்கு உணர்த்துகின்றன.

இக்கட்டுரையின் தொடக்கத்தில் கூறப்பட்டதுபோல, சிங்கள மக்கள் மத்தியில் தமிழ் மக்களின் நீதிக்கான கோரிக்கைகளை ஆதரித்து குரல் எழுப்புபவர்கள் துணிச்சலாக தமது பணிகளை முன்னெடுத்து வருகிறார்கள் என்பதைத்தான் அருட்தந்தை ஜீவந்த தெரிவித்தகருத்து நமக்குக் காட்டுகிறது. எழுத்தாளர் தீபச்செல்வனின் நூலுக்கு தடைவந்த விடயத்திலும் சிங்கள செயற்பாட்டாளர்கள் தமிழ் மக்களைவிடவும் அதிகமாகப் போராடினார்கள்.

இது நீதிக்கான போராட்டத்தில் தமிழ் மக்களுக்கு உற்சாக மூட்டக்கூடிய விடயம். சிங்கள மக்கள் மத்தியில் தமிழ் மக்களின் நீதியை ஏற்றுக்கொள்பவர்களின் தொகை எந்த அளவுக்கு அதிகரிக்கின்றதோ, அந்த அளவுக்கு இனப்பிரச்னைக்கான தீர்வும் இலகுவாகிவிடும். இலங்கை இனப் பிரச்சனைக்கு பிரிவினை அல்லாத ஒரு தீர்வைக் காண்பது என்று சொன்னால், சிங்கள பௌத்த கூட்டு உளவியலின் குற்றவுணர்ச்சியைத் தூண்டவேண்டியது ஒரு முன்நிபந்தனைஆகும். அதே சமயம் தமிழ்க்கூட்டு உளவியலின் குற்றவுணர்ச்சியும் தூண்டவேண்டும். அது தான் தமிழ்த் தேசிய அரசியலின் ஜனநாயக இதயத்தை நோய் நீக்கும் செழிப்பாக்கு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இந்திய-இலங்கைத் தரைவழி இணைப்பு: விரும்பும் இந்தியாவும் மறுக்கும் இலங்கையும்!



கந்தையா
அருந்தவபாலன்

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் தரைவழிப்பாதை தொடர்பான முன்மொழிவு தெற்கில் மீண்டும் பேசுபொருளாகமாறியுள்ளது. இந்தமாதம் இரண்டாம் திகதி கொழும்பில் நடைபெற்ற 'பூகோளப் புத்தாக்கமும் தலைமைத்துவமும்' பற்றிய மாநாட்டில் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா அப்பாதையின் முக்கியத்துவம் மற்றும் அவசியம் தொடர்பில் கருத்துரைத்ததைத் தொடர்ந்து அத்திட்டத்திற்கு எதிராகவும் சார்பாகவும் பொதுவெளியில் பல்வேறுதரப்புகளாலும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுவருவதைப் பார்க்கமுடிகிறது. தயான் ஜயதிலகபோன்ற இராஜதந்திரிகள் உட்பட சிங்கள தேசியவாதிகள் பலர் அத்திட்டத்துக்கு எதிர்ப்பினைத் தெரிவிக்கும் அதேவேளை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் அதனைவரவேற்று அறிக்கையிட்டிருப்பதையும் காணலாம். ரணில் விக்கிரசிங்கமற்றும் மிலிந்த மொரகொட போன்ற ஒருசிலரைத் தவிர இலங்கையின் எந்தவொரு ஆட்சித் தலைவரோ அன்றி அரசியல்வாதிகளோ அத்திட்டத்துக்கு ஆதரவான நிலைப்பாட்டில் இருக்கவில்லை என்பதேயதார்த்த நிலையாகும். குறித்த இணைப்புப் பாதை அமைவதன் மூலம் ஒப்பீட்டு ரீதியில் இலங்கைக்கு அதிகளவில் பொருளாதார நன்மைகள் கிடைப்பதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்ற போதும் இலங்கை அத்திட்டத்தை நிராகரிப்பதற்கு வேறு பலகாரணிகள் உள்ளன.




பாக்குநீரிணையூடாக தரைவழிப் போக்குவரத்துக்கான பாலம் மற்றும் சுரங்கம் அமைப்பதற்கான கோரிக்கைக்கு கால் நூற்றாண்டு வயதாகப்போகிறது. இதற்கான கோரிக்கை முதலில் இலங்கையினாலேயே முன்வைக்கப்பட்டது. 2002 ஆம் ஆண்டில் இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் இடம்பெற்ற சமாதானகாலத்தில் அப்போதைய பிரதம மந்திரியான ரணில் விக்கரம சிங்காவினால் இந்தியாவிடம் இக்கோரிக்கை முன்வைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து இந்தியாவின் தனுஷ்கோடிக்கும் இலங்கையின் தலைமன்னாருக்குமிடையில் வாகனங்கள் மற்றும் ரெயில் போக்குவரத்துக்கெனசுமார் 23 கிலோமீற்றர் நீளமான தரைப்பாலம் மற்றும் சுரங்கப்பாதைஅமைப்பதற்கானசாத்தியப்பாடுகள் தொடர்பானஆரம்பக்கட்டமுயற்சிகள் தொடக்கப்பட்டிருந்தன. இதற்கானஉத்தேசசெலவு 5 மில்லியன் டாலர்கள்.

எனினும் மகிந்தராஜபக்ஷ பதவியிலிருந்த 2005-2015 காலத்தில் அம்முயற்சிகள் உறங்குநிலையில் இருந்து 2015 இல் மைத்திரி- ரணில் ஆட்சிக்காலத்தில் மீண்டும் பேச்சுமேசைக்குக் கொண்டுவரப்பட்டது. சமகாலத்தில் இந்திய அரசின் போக்குவரத்துத் துறைக்கான அமைச்சர் நிதின் கட்காரியினால் இத்திட்டத்துக்குத் தேவையான 5பில்லியன் டொலர்களுக்கானகோரிக்கை ஆசிய அபிவிருத்தி வங்கியிடம் முன்வைக்கப்பட்டு அதற்கான ஒப்புதலும் பெறப்பட்டிருந்தது. ஆயினும் இலங்கையின் அப்போதைய போக்குவரத்து துறைக்கான அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்லாவால் அது நிராகரிக்கப்பட்டிருந்தது. பின்னர் ரணில் விக்கிரமசிங்கா ஜனாதிபதியாகவந்ததும் 2023 இல் மீண்டும் இத்திட்டம் உயிர்ப்பிக்கப்பட்டதுடன் சாத்தியவளஆய்வுகளும் நிறைவுக்கு வந்திருந்தன. எனினும் 2024 இல் ஜனாதிபதியாகப் பொறுப்பேற்ற அனுர அத்திட்டத்துக்கு இப்போது இலங்கைதயாராக இருக்கவில்லை எனத் தெரிவித்து அதற்கான கதவை மூடிவிட்டார். இந்நிலையில்தான் இந்திய உயர்ஸ்தானிகர் மீண்டும் அதனைப் பேசுபொருளாக்கியுள்ளார்.

பொருளாதார நன்மைகள் பல இருந்தாலும்கூட இந்தியாவுடன் இவ்வாறானநிரந்தர இணைப்பொன்றை ஏற்படுத்துவதற்கு இலங்கை தொடர்ந்து தயக்கம் காட்டி வருவதற்குஅதன் அரசியல்,பண்பாட்டுக் காரணிகளே பிரதானமாக உள்ளன. அதாவது இலங்கை தனது இறைமையையும் தனித்துவமான மதம் மற்றும் பண்பாட்டு கூறுகளையும் தொடர்ந்து தக்கவைப்பதே அந்தத் தயக்கத்தின் பின்னாலுள்ளபிரதானநோக்கமாகும். உண்மையில் இந்தியாவின் பெருநிலப்பரப்பிலிருந்து இலங்கை தனித்தீவாகபிரிக்கப்பட்டிருப்பது இலங்கைக்கு இயற்கைகொடுத்தவரப்பிரசாதம் எனலாம். இல்லையெனில் இன்று இலங்கை என்ற ஒரு நாடோ, சிங்களவர் என்ற ஒரு இனமோ, புத்த மதமோ இவையாவற் றுடனும் இணைந்த அதன்தனித்துவமான பண்பாட்டுக் கூறுகளோ எதுவும் இருந்திருக்க வாய்ப்பிருந்திருக்காது. இது ஈழத்தமிழ் இனத்தின் தனித்தவத்துக்கும் பொருந்தும்.

**இந்தியாவிலிருந்தான இவ்வாறானதரைவழி இணைப்பு இலங்கையின் வடக்குடன் இல்லாது தெற்குடன் இருந்திருக்குமானால் சிலவேளைகளில் அதற்கான சாத்தியப்பாடு கூடுதலாக இருந்திருக்கக்கூடும்.**

இவையாவும் இந்த இணைப்பினூடாக எதிர்காலத்தில் கரைந்துவிடக்கூடும் என்ற பயம் இலங்கையிடம் இருந்து வருகிறது. இந்தப்பயம் இலங்கைக்கு இன்று நேற்று ஏற்பட்ட தொன்றல்ல. வரலாற்றுக் காலந்தொட்டே அது இருந்து வருகிறது. வரலாற்றில் அதிகளவில் இடம்பெற்ற இலங்கை மீதான இந்திய ஆட்சியாளர்களது படையெடுப்புகள், ஆக்கிரமிப்புக்கள், கலப்புகள் கற்றுந்தந்த அனுபவங்கள் இந்தியா மீதான பயத்தையும் வெறுப்பையும் இன்றுவரை தொடரச் செய்கிறது. அதில் நிறைந்த உண்மையும் உண்டு.

இது தொடர்பாக தயான் ஜயதிலக தனது அண்மைய கட்டுரையில் இரண்டு முக்கிய விடயங்களைச் சுட்டிக்காட்டுகிறார்.

1. எமது ஒரே அண்டை நாடாகவும் எம்மை விட ஒப்பிடமுடியாதளவு பரந்த மற்றும் அதிகளவு மக்கள் தொகைகொண்ட நாடாகவும் இருப்பதால் இந்தியா எம்மீதான பிடியை வலுப்படுத்திவிடும்.

2. ஏனைய நாடுகளுடன் குறிப்பாக சீனா மற்றும் பாகிஸ்தான் நாடுகளுடன் எமது உறவுகளின் மூலம் அதிகாரச்சமநிலையை உருவாக்கி எமது உத்திசார் தன்னாதிக்கத்தையும் தேசிய நலன்களையும் பாதுகாப்பதில் சுதந்திரத்துக்குப் பின் னர் நாம் அனுபவித்துவரும் நெகிழ்வுத் தன்மையை அது இல்லாமல் செய்துவிடும்.

இலங்கை தனித்தீவாக இருப்பதனா லேயே அது தனது இருப்பையும் தனித்து வத்துவத்தையும் தக்கவைப்பதற்கான அதி காரச் சமநிலையைப் பேணமுடிகிறது. எடுத்துக்காட்டாக அளவுக்கதிகமான அழுத்தங்களைப் பிரயோகித்தால் இலங்கை சீனாபக்கம் சாய்ந்துவிடும் என்ற பயம் இந்தியாவுக்கும் மேற்குல குக்கும் இருப்பதுபோலவே மறுபுறத்தில் சீனாவுக்கும் உள்ளது. விலாங்குமீன் போலத் தேவைக்கேற்ப தலையையும் வாலையும் காட்டி இன்றுவரை அது தனித்துவத்துடன் தப்பிப் பிழைத்து வாழ்கிறது என்பதுதான் உண்மை. இதன் மூலம் இலங்கை தனது தன்னாதிக்கத்தைத் தக்கவைத்திருப்பதுடன் அதிகளவு பொருளாதார நன்மைகளையும் எல்லாத் தரப்புகளிடமிருந்தும் கறக்கமுடிகிறது. இந்தநிலையை இழப்பதற்கு இலங்கை மட்டுமன்றி எந்தவொரு நாடும் விரும்பாது. தரைவழி இணைப்பு இவை எல் லாவற்றையும் எதிர்காலத்தில் தகர்த்து விடக்கூடும் என்ற ஐயமும் பயமும் இலங்கையிடம் நிரந்தரமாகவே உள்ளது.

பொதுவான இந்த ஐயம், பயம் என்பவற்றுக்கப்பால் அதைவிடக் கூடுதலாக அல்லது அவற்றைமேலும் வலுப்படுத்துவதாக இருப்பது இந்தத் தரைவழி இணைப்பின் அமைவிடங்களாகும். இவ்விணைப்பு இந்தியாவில் தமிழ்நாட்டையும் இலங்கையில் மன் னாரையும் தொட்டுநிற்கின்றது. இரண்டுபுறமும் இருப்பது தொப்புழ்கொடி உறவெனச் சித்தரிக்கப்படும் தமிழ் மக்கள். வரலாற்றுக் காலத்தில் இடம்பெற்ற தென்னிந்திய படையெடுப்பு கள் தொடர் பான பயத்தை விட அண்மைக்காலத்தில் ஈழ விடுதலைப் போராட்டத்தில் இடம்பெற்ற தமிழ் நாட்டின் நேரடியான, மறை முகமான உதவிகள் தொடர்பான பயமே இன்றைய ஆட்சியாளருடமும் சிங்கள மக்களி டமும் அதிகளவில் காணப்படுகிறது. தமிழீழம், அகன்ற தமிழ்நாடு போன்ற கருத்துருவாக் கங்களும் கடந்தகாலத்தில் இடம்பெற்ற ஆயுதப்போ ராட்டங்களின் வலுவும் இவ்வாறான பயத்தை அவர் களிடம் ஏற்படுத்தியதில் தவறு காண முடியாது. இந்த விடயத்துக்கும் தயான் ஜெயதிலக அதனது கட்டுரை யில் அதிகமுக்கியத்துவம் வழங்கியிருப்பதைக் காண முடிகிறது. ஆயுதப் போராட்ட காலத்தில் இவ்வாறு தமிழ் நாட்டுக்கும் இலங்கையின் வடக்குக்குமிடையில் தரைவழிப்பாதை ஒன்று இருந்திருந்தால் இலங்கையின் நிலை என்னவாக இருந்திருக்கும் என்பது அவரது நியா யமான கேள்வியாகும். இந்தியாவிலிருந்தான இவ்வா றான தரைவழி இணைப்பு இலங்கையின் வடக்குடன் இல்லாது தெற்குடன் இருந்திருக்குமானால் சிலவேளை களில் அதற்கானசாத்தியப் பாடு கூடுதலாக இருந்திருக் கக்கூடும்.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான இந்தத் தரைவழி இணைப்புக்கான முன்மொழிவு 25 ஆண்டுகள் நெருங்கியும் இன்றும் தொடக்கநிலையிலேயே இருந்துவருகிறது. இது அத்திட்டம் தொடர்பான இலங்கையின் விருப்பமின்மையேயே காட்டிநிற்கிறது. இன்று இலங்கை போன்ற பல சிறிய நாடுகள் தமது பொருளாதார நலன்களுக்காக சில அரசியல் உரிமைகளை பிற நாடுகளுடன் சமரசம் செய்துகொள்வதைக் காணமுடியும். இலங்கையும் அவ்வாறு செய்துவருவதற்கு பல எடுத்துக் காட்டுகள் உள்ளன. எனினும் இந்த விடயத்தில் இலங்கை இந்தியாவுடன் எதிர்காலத்தில் சமரசம் காண்பதற்கானவாய்ப்புகள் மிகக்குறைவாகவே இருக்கும். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஐங்கரன் விக்கினேஸ்வரா

# தோல்வியின் விளிம்பில் ரஷ்யா? போரில் உக்ரைன் மேலோங்கிறதா?

**இரு நாடுகளும் அடுத்தடுத்து தாக்குவதால் அமைதி என்பது எட்டாக்கனியாகி, இந்த போர் மீண்டும் தீவிரமடைந்து வரும் நிலையில், தற்போது யாரின் படைவலு மோலோங்கி இருக்கிறது என்பதை இலகுவாக உணர முடியாதுள்ளது. தற்போதைய உக்ரைன் கள நிலவரத்தின் அரசியல் - ராணுவப் பார்வையில் ரஷ்யா முழுமையாக தோல்வியடைந்து விட்டது என்றும் கூற முடியாத நிலையே உள்ளது.**

2022 ஆம் ஆண்டு ஆரம்பித்த உக்ரைன் போர் இன்று உலக அரசியலின் மிகப்பெரிய புவிசார் மோதலாக மாறியுள்ளது. ஆரம்பத்தில் சில வாரங்களில் உக்ரைன் அரசை வீழ்த்தி, தலைநகர் கீவை கைப்பற்றலாம் என ரஷ்யா கருதியதாக மேற்கத்திய ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். ஆனால் நான்கு ஆண்டுகளைத் தாண்டியும் போர் முடிவுக்கு வரவில்லை. இதனால் ரஷ்யா தோல்வியடைந்து வருகிறதா என்ற கேள்வி உலகளவில் அதிகமாக எழுகிறது.

ஆனாலும் இந்தக் கேள்விக்கு நேரடியான “ஆம்” அல்லது “இல்லை” என்று பதில் அளிப்பது எளிதல்ல. ஏனெனில் இந்தப் போர் வெறும் நிலப்பரப்பு கைப்பற்றும் போராக மட்டுமல்ல. அது பொருளாதாரம், தொழில்நுட்பம், தகவல் போர், உலக கூட்டணிகள், ஆற்றல் அரசியல் மற்றும் நீண்டகால தாங்கும் திறன் ஆகியவற்றின் மோதலாக மாறியுள்ளது.

**கீவ் மீது ஏவுகணை தாக்குதல்:**

உக்ரைன் - ரஷ்யா இடையேயான போர் பல ஆண்டுகளாகத் தொடர்ந்து நீடித்து வரும் நிலையில், சமீபத்திய வாரங்களில் இல்லாத அளவுக்கு ரஷ்ய ராணுவம் கடந்த வாரம் உக்ரைன் தலைநகர் கீவ் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் பெரும் வான்வழித் தாக்குதலை நடத்தியுள்ளது. ரஷ்யாவின் கட்டுப்பாட்டில் உள்ள லுகான்ஷ்க் பகுதியில் அப்பாவி விடுதி மாணவிகள் மீது உக்ரைன் நடத்திய தாக்குதலுக்குப் பழிவாங்கும் நடவடிக்கையாக இது அரங்கேற்றப்பட்டுள்ளது. நள்ளிரவு முழுவதும் கீவ், செர்காசி, கார்கிவ், ஒடெசா உள்ளிட்ட பல பிராந்தியங்களில் சுமார் 600 ட்ரோன்களும், 90 அதிநவீன ஏவுகணைகளும் மழை போலப் பொழிந்தன.

கீவ் நகர மக்கள் வழக்கம்போல் உறக்கத்தில் இருந்த நேரத்தில், வானில் ஒலித்த எச்சரிக்கை சைரன்கள் அச்சத்தை ஏற்படுத்தின. அதனைத் தொடர்ந்து ரஷ்ய ஏவுகணைகளும் ட்ரோன்களும் நகரின் பல பகுதிகளை குறிவைத்து தாக்கின. பல அடுக்குமாடி குடியிருப்புகள் தீப்பற்றியதுடன், அரச கட்டிடங்களின் சுவர்கள் இடிந்தன. அலுவலக வளாகங்கள் சேதமடைந்ததால் நகரின் சில பகுதிகளில் மின்சாரம் மற்றும் தொடர்பு சேவைகளும் பாதிக்கப்பட்டன. உக்ரைனிய வான் பாதுகாப்பு அமைப்புகள் பல ஏவுகணைகளையும் ட்ரோன்களையும் இடைமறித்ததாகக் கூறினாலும், அனைத்தையும் தடுக்க முடியாத நிலை ஏற்பட்டது.

இத்தாக்குதலில் ரஷ்யா தங்களின் மிக நவீனமயமான ‘ஒரேஷ்னிக்’ ஹைப்பர் சோனிக் பாலிஸ்டிக் ஏவுகணையைப் பயன்படுத்தி உள்ளதாக உக்ரைன் அதிபர் வொலோடிமிர் ஜெலென்ஸ்கி தெரிவித்துள்ளார். ஒலியின் வேகத்தைப் போல 10 மடங்கு வேகத்தில் செல்லக்கூடிய இந்த ஏவுகணை, பூமிக்கு அடியில் மூன்று அல்லது நான்கு தளங்களுக்குக் கீழே உள்ள பங்கர்களைக் கூடத் துல்லியமாக அழிக்கக்கூடிய வல்லமை பெற்றது.

ஏற்கனவே 2024 நவம்பரில் டினிப்ரோ நகரிலும், கடந்த ஜனவரியில் எல்விவ் பிராந்தியத்திலும் பயன்படுத்தப்பட்ட இந்த ஏவுகணை, தற்போது மூன்றாவது முறையாகக் கீவ் பிராந்தியத்தில் உள்ள பிலா த்செர்கவா நகரை குறிவைத்து ஏவப்பட்டுள்ளது. இந்த அதிநவீன ஏவுகணைகளின் பயன்பாடு உக்ரைன் தரப்பில் பெரும் அதிர்ச்சியையும் கவலையையும் ஏற்படுத்தியுள்ளது.




**ஆரம்பக் கட்ட பின்னடைவு:**

இந்த போர் மீண்டும் தீவிரமடைந்து வரும் நிலையில், தற்போது யாரின் படைவலு மோலோங்கி இருக்கிறது என்பதை இலகுவாக உணர முடியாதுள்ளது. ஏனெனில் போரின் 2022 பெப்ரவரி மாதத்தில் ரஷ்யா எதிர்பார்த்த வேகத்தில் முன்னேறவில்லை. கீவ் மீது நடத்திய விரைவு இராணுவ நடவடிக்கை தோல்வியடைந்தது. குறிப்பாக உக்ரைனின் கடுமையான எதிர்ப்பும், மேற்கத்திய நாடுகளின் உளவுத்தகவல் ஆதரவும் ரஷ்ய முன்னேற்றத்தை தடுத்து நிறுத்தின.






அதன் பின்னர் கார்கிவ் மற்றும் கெர்சோன் பகுதிகளில் ரஷ்ய படைகள் பின்வாங்கியமை உலக ஊடகங்களில் ரஷ்ய ராணுவத்தின் பின்னடைவு என விவரிக்கப்பட்டது. மேலும் ரஷ்ய இராணுவத்தின் ஒருங்கிணைப்பு குறைபாடுகள், பழைய ஆயுதங்கள், விநியோக சிக்கல்கள் போன்றவை வெளிச்சத்துக்கு வந்தன.

ஆனால் 2023 இறுதி மற்றும் 2024 - 2025 காலப்பகுதிக்குள் போரின் தன்மை முற்றிலும் மாறியது. ரஷ்யா தன்னுடைய போர் பொருளாதாரத்தை முழுமையாக மாற்றிக் கொண்டது. ஆயுத உற்பத்தி அதிகரிக்கப்பட்டது. ட்ரோன் தொழில்நுட்பம், ஏவுகணை தாக்குதல்கள் மற்றும் நீண்டகால கலப்பு போர் என்ற அணுகுமுறையை ரஷ்யா பின்பற்றத் தொடங்கியது.

அத்துடன் மேற்கத்திய நாடுகள் வழங்கிய ஆயுத உதவிகள் இருந்தபோதிலும், உக்ரைனுக்கு மனிதவள பற்றாக்குறை பெரும் சவாலாக மாறியுள்ளது. நீண்டகாலப் போரால் உக்ரைன் பொருளாதாரம் கடுமையாக பாதிக்கப்பட்டது. இதே வேளை ரஷ்யா, சீனா, ஈரான், வட கொரியா போன்ற நாடுகளுடன் மாற்று கூட்டுறவுகளை விரிவுபடுத்தியுள்ளது.

தற்போதைய உக்ரைன் கள நிலவரத்தின் அரசியல் - ராணுவப் பார்வையில் ரஷ்யா உண்மையில் தோல்வியடைந் ததா என்ற கேள்வி எழுந்துள்ளது. ஆனால் அதற்கு உக்ரைன் எதிர்ப்பு திறன் கூடியுள்ளமையே முக்கிய காரணமாக இருக்கிறது. ஒரு போரை மதிப்பிடும் போது மூன்று அம்சங்கள் முக்கியமாக பார்க்கப்படுகிறது.

முதலாவது அரசியல் இலக்கு அடைந்ததா, அடுத்தது நிலப்பரப்பு கட்டுப்பாடு என்ன நிலையில் உள்ளது என்பது முக்கிய கேள்வியாகும். இறுதியாக நீண்டகால தாங்கும் திறன் யாருக்கு அதிகம் உள்ளது என்பதை அறிய வேண்டும்.

இந்த அளவுகோல்களில் பார்க்கும் போது, உக்ரைன் கள நிலவரத்தின் அரசியல் - ராணுவப் பார்வையில் ரஷ்யா முழுமையாக தோல்வியடைந்து விட்டது என்று கூற முடியாத நிலையே உள்ளது. முதன்மையாக நேட்டோவை தடுக்க முயன்ற ரஷ்யா தனது வளங்களை பயன்படுத்தி வருகிறது.

ரஷ்யாவின் முக்கிய நோக்கங்களில் ஒன்று நேட்டோ விரிவைத் தடுக்க வேண்டும் என்பதாகும். ஆனால் இந்த போருக்குப் பிறகு பின்லாந்து, சுவீடன் நேட்டோவில் இணைந்தன. இந்த அளவில் பார்க்கும்போது ரஷ்யா அரசியல் பின்னடைவை சந்தித்துள்ளதாக மேற்குலக ஊடகங்களால் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை நிலப்பரப்பு கட்டுப்பாடு குறித்து பார்க்கும் போது, கிழக்கு மற்றும் தெற்கு உக்ரைனின் முக்கிய பகுதிகளில் ரஷ்யா இன்னும் கட்டுப்பாட்டை வைத்திருக்கிறது. டொன்பாஸ் பிராந்தியத்தின் பெரும் பகுதி ரஷ்ய செல்வாக்குக்குள் உள்ளது. கருங்கடல் பாதுகாப்பு மற்றும் நிலப் பாதை இணைப்பில் ரஷ்யா தனது நிலையை கடுமையாக உறுதிப்படுத்தியுள்ளது.

மறுபுறம் ஐரோப்பிய பொருளாதாரத் தடைகள் எதிர்பார்த்த பலனை கொடுத்ததா என்பது குறித்து முழுமையான பதில்கள் இதுவரை வழங்கப்படவில்லை. ஏனெனில் மேற்கத்திய பொருளாதாரத் தடைகள் ரஷ்யாவை முற்றிலும் சிதைக்க வில்லை. மாறாக ரஷ்யா எண்ணெய் ஏற்றுமதியை ஆசிய சந்தைகளுக்கு மாற்றியது. ரூபிள் நாணயத்தில் ஏற்றத் தாழ்வுகள் இருந்தாலும், ரஷ்ய போர் இயந்திரம் தொடர்ந்து முன்னேறி செயல்பட்டு வரு கிறது.

இந்தப் போர் நீளுவதால் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளிலும் அரசியல் சோர்வு தோன்றியுள்ளது. ஆயுத உதவி, நிதி ஆதரவு, அகதி பிரச்சினை ஆகியவை உள்நாட்டு அரசியலில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. இதனால் மேற்கத்திய நாடுகளின் பொருளாதார சிக்கல் மேலும் வளர்ச்சி பெறுகிறது.

அதேவேளை டொனால்ட் ட்ரம்ப் போன்ற அரசியல் தலைவர்கள் “இந்தப் போரை முடிக்க வேண்டும்” என்று வலியுறுத்துவது, மேற்கத்திய ஒற்றுமையில் பாரிய மாற்றங்களை காட்டுகிறது.

**தகவல் போரின் தாக்கம்:**

இந்தப் போரில் உண்மை நிலவரத்தை மதிப்பிடுவது கடினம். மேற்கத்திய ஊடகங்களும் ரஷ்ய ஊடகங்களும் தங்களுக்கான தகவல் போரில் ஈடுபட்டுள்ளன. ஒரு தரப்பு ரஷ்யா சரிந்து வருகிறது என கூற, மற்றொரு தரப்பு உக்ரைன் முற்றிலும் உயர்ந்து வருகிறது என கூறுகிறது. உண்மையில், இரு தரப்பும் மிகப்பெரிய இழப்புகளை சந்தித்துள்ளன.

தற்போதைய கள நிலவரப்படி ரஷ்யா முழுமையான வெற்றியைப் பெற்றுவிட்டது என்றும் கூற முடியாது. அதேபோல் அது தோல்வியடைந்து விட்டது என்றும் கூறவும் முடியாது. ஆனால் ஆரம்பத்தில் எதிர்பார்த்த விரைவு வெற்றியை ரஷ்யா பெறவில்லை என்பதும் உண்மையே.

அதே நேரத்தில், மேற்கத்திய நாடுகள் எதிர்பார்த்தபடி ரஷ்ய அரசும் பொருளாதாரமும் சரிந்து போகவில்லை என்பதும் உண்மை.

இன்று இந்தப் போர் யார் வெல்வார்கள் என்ற கேள்வியைத் தாண்டி, யார் அதிக காலம் தாங்குவார்கள் என்ற நிலைக்கு மாறியுள்ளது. அதனால் உக்ரைன் போர் 21ஆம் நூற்றாண்டின் நீண்டகால கலப்பு போரின் முக்கிய எடுத்துக்காட்டாக உலக வரலாற்றில் பதிவாகி வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அத்தியாவசிய பொருள்களின் விலைகள் கணிசமாக உயரும்!

## ஹர்ஷ டி சில்வா எச்சரிக்கை



கொழும்பு, மே. 31
அரசாங்கத்தின் நிர்வாகத் திறமையின்மை மற்றும் ஊழல் காரணமாக மின்சாரம், எரிபொருள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் கணிசமாக உயரும் அபாயம் ஏற்பட்டுள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு இணங்கி செஸ் வரியை நீக்க அரசாங்கம் எடுக்கும் முயற்சிகள் உள்நாட்டுத் தொழில்முனைவோரை முற்றாக அழித்துவிடும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா எச்சரித்துள்ளார்.

நாணய நிதியத்துடனான அரசாங்கத்தின் இணக்கப்பாடு தொடர்பில் தெளிவுபடுத்தி வெளியிட்டுள்ள காணொளியிலேயே அவர் இவற்றைக் குறிப்பிட்டுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு 600 மில்லியன் டொலருக்கும் அதிகமான தொகையை வழங்குவதற்குத் தீர்மானித்துள்ளது. இது ஒரு சிறந்த விடயம் என்றாலும், இந்த உடன்படிக்கையின் பின்னணியில் உள்ள சில உண்மைகளைப் புரிந்துகொள்ள வேண்டும்.

சர்வதேச நாணய நிதியத்தின் பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜீயேவாவிடமிருந்து ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க மற்றும் மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க ஆகியோருக்கு அனுப்பப்பட்ட கடிதத்தில் கூறப்பட்டுள்ள வாக்குறுதிகளே மிக முக்கியமானவையாகும்.

அந்தக் கடிதத்தின்படி, எரிபொருள் மற்றும் மின்சாரத்திற்கு தற்போது வழங்கப்பட்டு வரும் அனைத்து மானியங்களையும் வரும் செப்டெம்பர் மாத இறுதிக்குள் அல்லது ஒப்புக் கொள்ளப்பட்ட 100 பில்லியன் ரூபாய் முடிவடைவதற்குள் முழுமையாக இரத்து செய்வதற்கு அரசாங்கம் உறுதியளித்துள்ளது-என்றார். (அ)

# யாழில் வெசாக் கொண்டாட்டம் ஆரம்பித்து வைத்தார் ஆளுநர்



யாழ்ப்பாணம், மே. 31
யாழ்ப்பாண மாவட்டத்தில் பொலிஸார் மற்றும் இராணுவத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விசேட வெசாக் பண்டிகைக் கொண்டாட்டங்களை வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் நேற்று சனிக்கிழமை மாலை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

யாழ்ப்பாணம் பிரதான பொலிஸ் நிலையத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வெசாக் வலயத்தின் மின்விளக்கு அலங்காரங்களை ஒளிரச் செய்து நிகழ்வை ஆரம்பித்து வைத்த ஆளுநர், ஒவ்வொரு பொலிஸ் நிலையத்தினராலும் பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்டிருந்த வெசாக் கூடுகள் மற்றும் அலங்காரங்களையும் பார்வையிட்டார். அதனைத் தொடர்ந்து அங்கு ஒழுங்கமைக்கப்பட்டிருந்த "தன்சல்" (அன்னதானம்) நிகழ்வையும் ஆளுநர் பொது மக்களின் பாவனைக்காகத் தொடக்கி வைத்தார். இந்த நிகழ்வில் வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர், வட பிராந்திய கடற்படை கட்டளைத் தளபதி, யாழ். மாவட்டச் செயலாளர், யாழ். மாவட்டக் கட்டளைத் தளபதி மற்றும் யாழ்ப்பாண மாவட்டப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து, யாழ்ப்பாணம் நாகவிகாரைச் சூழலில் இராணுவத்தினரால் ஒழுங்கமைப்புச் செய்யப்பட்டிருந்த வெசாக் வலயத்தின் மின்விளக்கு அலங்காரங்களை வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் நா.வேதநாயகன் மற்றும் யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரகத்தின் கொன்சூயிரல் ஜெனரல் சாய் முரளி ஆகியோர் இணைந்து உத்தியோகபூர்வமாக ஒளிரச் செய்தனர். இதனையடுத்து, அங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த "தன்சல்" நிகழ்வும் அதிதிகளால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நாகவிகாரையில் நடைபெற்ற இந்த விசேட நிகழ்வுகளில் நாகவிகாரையின் விகாராதிபதி உள்ளிட்ட வணக்கத்துக்குரிய மதத் தலைவர்கள், யாழ். மாவட்டக் கட்டளைத் தளபதி, வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர், வட பிராந்தியக் கடற்படை கட்டளைத் தளபதி, பலாலி விமானப்படைத் தளத்தின் கட்டளை அதிகாரி, யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களின் செயலாளர்கள், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் மற்றும் யாழ்ப்பாண மாவட்டப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஆகியோர் உடனிருந்தனர். மேலும், இந்த நிகழ்வில் வெசாக் அலங்காரப் போட்டிகளில் மிகச் சிறந்த வடிவமைப்புக்காக முதல் மூன்று இடங்களைக் கைப்பற்றிய இராணுவப் படைப்பிரிவுகளுக்கு ஆளுநர் உள்ளிட்ட அதிதிகளால் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# "குஷ்" போதைப்பொருளுடன் இருவர் கைது!

கொழும்பு, மே. 31
கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் நான்கு கிலோகிராமிற்கும் அதிகமான 'குஷ்' ரகப் போதைப்பொருளைக் கடத்தி வந்த இரண்டு சந்தேகநபர்கள் பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் விமான நிலையக் கிளை அதிகாரிகளுக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில், நேற்று அதிகாலை மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போதே இவர்கள் இருவரும் வலையமைப்பிற்குள் சிக்கியுள்ளனர்.

விமான நிலையத்தின் வருகைப் பகுதியில் சந்தேகத்திற்குரிய முறையில் நடமாடிய நபர் ஒருவரை அதிகாரிகள் சோதனையிட்டபோது, அவரிடமிருந்து 4 கிலோகிராம் 104 கிராம் எடையுடைய 'குஷ்' போதைப் பொருள் கைப்பற்றப்பட்டது.

இதனைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட உடனடி விசாரணைகளின் அடிப்படையில், குறித்த போதைப்பொருள் கடத்தலுக்கு உடந்தையாகச் செயல்பட்ட மற்றும் அதனைப் பொறுப்பேற்க வந்திருந்த மற்றொரு சந்தேகநபரும் விமான நிலைய வளாகத்தில் வைத்து அதிரடியாகக் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட இரு சந்தேகநபர்களும் நீர்கொழும்பு மற்றும் கல்கிசை ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனப் பொலிஸார் அடையாளம் கண்டுள்ளனர்.

இந்த போதைப்பொருள் சர்வதேச கடத்தல் கும்பல் ஒன்றிடமிருந்து கொண்டுவரப்பட்டதா மற்றும் இதன் பின்னணியில் உள்ள ஏனைய நபர்கள் யார் என்பது குறித்துப் பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் தீவிர மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# நேற்று சிறப்புற நடந்தது திருக்கேதீஸ்வரம் தீர்த்தம்



மன்னார், மே. 31
பஞ்ச ஈச்சரங்களில் ஒன்றான, வரலாற்றுச் சிறப்பு மிக்க மன்னார் திருக்கேதீஸ்வர ஆலய வருடாந்த மகோற்சவத்தின் தீர்த்தத்திருவிழா நேற்றுக் காலை இடம்பெற்றது.

நேற்றுக் காலை வசந்த மண்டபத்தில் பூசை வழிபாடுகள் இடம்பெற்றதை தொடர்ந்து, கொடித் தம்பத்திற்கு பூசை வழிபாடுகள் இடம்பெற்றன.

தொடர்ந்து சுவாமியின் உள் வீதி உலா இடம்பெற்றதுடன், திருக்கேதீஸ்வரம் பாலாவி தீர்த்தக்கரைக்கு பஞ்ச மூர்த்திகள் எழுந்தருளி, தீர்த்த உற்சவம் வெகு விமரிசையாக இடம் பெற்றது.

பக்த அடியார்கள் தமது நேர்த்திக் கடன்களை செலுத்துவதற்காக, பாலாவி தீர்த்தக்கிரையில் இருந்து தீர்த்த செம்புகளில் தீர்த்தங்களை எடுத்துச் சென்று, மகாலிங்க பெருமானுக்கு அபிஷேகம் செய்தனர்.

அந்தவகையில், நேற்று மாலை கொடியிறக்க நிகழ்வும் இடம்பெற்றது. (அ)

# 11 வயது சகோதரியை கொலை செய்து குளியலறையில் தண்ணீர் தொட்டியில் போட்ட 14 வயது சகோதரன் கைது!

அம்பாறை, மே. 31
ஏறாவூர் பொலிஸ் பிரிவிலுள்ள நீதிமன்ற வீதியில் உள்ள வீடு ஒன்றின் தனிமையில் இருந்த 11 வயது சகோதரி வைத்திருந்த கையடக்க தொலைபேசியை தர மறுத்த காரணத்தால் அவரை கழுத்தை நெரித்து கொலை செய்துவிட்டு குளியலறையில் உள்ள தண்ணீர் தொட்டியில் வீசிய சம்பவம் தொடர்பாக 14 வயது சிறுவனை நேற்று கைது செய் துள்ளதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த வியாழக்கிழமை மாலையில் ஏறாவூர் 5 பிரிவு நீதிமன்ற வீதியைச் சேர்ந்த சத்யானந்தன் சதிஷா, என்ற சிறுமி குளியலறை தண்ணீர் தொட்டியில் விழுந்து உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

குறித்த சிறுமியின் தாயார் வெளிநாட்டுக்கு வேலைவாய்ப்பு பெற்று சென்றுள்ளதுடன் தந்தையார் சம்பவ தினத்தன்று வேலைக்காக வெளியில் சென்றுள்ள நிலையில் 14 வயது சகோதரனும் 11 வயது சகோதரியும் தனியாக வீட்டில் இருந்துள்ளனர்.

இந்த நிலையில் சகோதரி வைத்திருந்த கையடக்க தொலைபேசியை தருமாறு டிக் டாக் பார்க்க வேண்டும் என சகோதரன் கேட்டுக் கொண்டார். அதற்கு சகோதரி கையடக்க தொலைபேசியை கொடுக்க மறுத்துள்ள நிலையில் இருவருக்கும் இடையே வாய்த்தர்க்கம் ஏற்பட்ட நிலையில் சகோதரியின் கழுத்தை நெரித்ததையடுத்து அவர் உயிரிழந்துள்ளார்.

இதனை தொடர்ந்து சகோதரியை இழுத்து சென்று குளியலறையில் உள்ள தண்ணீர் தொட்டியில் போட்டுவிட்டு ஒன்றும் தெரியாது போல வீட்டில் இருந்து பக்கத்து வீட்டுக்கு சென்றுள்ளார்.

அதே நேரம் வெளியில் இருந்து வீட்டுக்கு வந்த தந்தை வீட்டில் பிள்ளைகளை காணவில்லை என தேடிய போது குளியலறை தண்ணீர் தொட்டியில் 11 வயது மக்கள் வீழ்ந்து மயங்கி கிடப்பதை அவரை மீட்டு கண்டு வைத்தியசாலைக்கு கொண்டு சென்று அனுமதித்த போது அவர் உயிரிழந்துள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறான நிலையில் 14 வயது சிறுவன் மீது சந்தேகம் கொண்ட பொலிசார் மேற்கொண்ட சிறுவன் சகோதரியை கொலை செய்துள்ளார் என பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதனை தொடர்ந்து குறித்த சிறுவனை கைது செய்துள்ளதாகவும் அவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்து வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிஸ் நிலைய பெரும் குற்றத்தடுப்பு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## பௌத்தத்தை தேசிய...

தீர்மானத்தின் மூலம் உலகம் முழுவதிலும் வாழும் பல மில்லியன் பௌத்தர்களின் புனித நாளான வெசாக் தினத்துக்கு சர்வதேச அங்கீகாரம் கிடைத்தது.

ஐக்கிய நாடுகள் சபையில் வருடாந்தம் நடைபெறும் இந்த வெசாக் தினக்கொண்டாட்ட நிகழ்வை ஒருங்கிணைப்பதற்கும், அதில் பங்கேற்பதற்குமான வாய்ப்பு இலங்கைக்குக் கிடைத்தமை மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். அத்தோடு இந்த நிகழ்வின் இணை ஏற்பாட்டாளரான தாய்லாந்து அரசுக்கு என விசேட நன்றியை வெளிப்படுத்துகிறேன்.

வெசாக் தினமானது புத்த பெருமானின் பிறப்பு, ஞானம் பெறல் மற்றும் பரிநிர்வாணம் அடைதல் ஆகியவற்றை நினைவுபடுத்துகிறது. மனித மனத்தின் உண்மையான ஆற்றலை உலகுக்கு வெளிப்படுத்திய புத்த பெருமான், உள்மன மற்றும் வெளி உலக அமைதியை அடைந்துகொள்வதற்காக எண்வகை வழிகளையும், பரிநிர் வாணம் எனும் இறுதி அடைவையும் காண்பித்துள்ளார்.

பௌத்தம் என்பது நோய் மற்றும் மரணம் போன்ற இயற்கையின் எல்லைகளிலிருந்தும், மனிதனால் உருவாக்கப்பட்ட சமூகக் கட்டமைப்புக்களினால் ஏற்படும் முடிவற்ற துன்பச் சுழற்சியிலிருந்தும் தீர்வுகளைத் தேடும் ஒரு பயணமாகும்.

அனைத்து மனிதர்களுக்கும் பொதுவானது பகுத்தறிவு மாத்திரமே என்றும், நாமாகவே உள்வாங்கிக் கட்டியெழுப்பிய கருத்தியல்களின் அடிப்படையிலேயே நாம் யார் என்பது தீர்மானிக்கப்படுகிறது என்றும் புத்த பெருமான் விளக்கியுள்ளார்.

இந்தக் கருத்தியல்கள் நமக்குள் பிரிவினை உணர்வை ஏற்படுத்துகின்றன. அவை சமூகக் கட்டமைப்புக்களுக்குள் ஆழமாக வேரூன்றி, அரசு, தேசம், சாதி, பாலினம், நிறம் மற்றும் மதம் போன்ற பிரிவினைகளின் ஊடாக மனித வரலாற்றின் பெரும்பாலான துன்பங்கள் தோற்றுவிக்கப்படுகின்றன.

இந்தப் பிரிவினைகள் மீதான தீவிர பற்றுதலே துன்பத்துக்கு அடிப்படைக் காரணம் என்பதுடன், இதன் மூலம் மனிதர்கள் ஒருவருக்கொருவர் எதிராகச் செயற்படும் சூழ்நிலைகள் உருவாகின்றன.

பௌத்த மதம் உலகம் முழுவதும் பரவியபோது பெரும் எண்ணிக்கையான மக்கள் இந்த மார்க்கத்தைப் பின்பற்றி நிர்வாணப்பாதையைத் தேடினர். அதுமாத்திரமன்றி அந்தச் சமூகங்கள் தமது வாழக்கையை பௌத்த போதனைகளை அடிப்படையாகக்கொண்டு வடிவமைத்துக்கொண்டன.

இலங்கை எப்போதும் பௌத்த மதத்தை தனது தேசிய அடையாளத்தினதும், கலாசாரத்தினதும் இதயமாகக் கருதுகிறது. அந்தவகையில் எமது அரசாங்கம் பொருளாதார மேம்பாடு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, நல்லாட்சி மற்றும் சமூகநலன் ஆகியவற்றை சமநிலைப்படுத்தி, நிலையான பார்வையுடன் "கிளீன் சிறீலங்கா" திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகிறது.

நெருக்கடிகளுக்கு மத்தியில் இணக்கப்பாட்டுக்கு வருவது அல்லது நெகிழ்வுத்தன்மையுடன் நடந்துகொள்வது பலவீனம் அல்ல. மாறாக அது பலமாகவே கருதப்படவேண்டும். உலக அமைதி மற்றும் சகவாழ்வுக்காக பௌத்தம் போதித்த மெத்தா, கருணா, முதிதா மற்றும் உபேக்கா ஆகிய நான்கு பண்புகளை முன்னிறுத்தி செயற்படுவதற்கு வழிகாட்டவேண்டும்-என்றார்.(அ)

## காலத்தை கடத்த...

விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைக் கூறினார்.

மைதானத்தில் திரண்டிருந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் மத்தியில் ஜனாதிபதி மேலும் உரையாற்றுகையில்,

கடந்த கால அரசுகள் சர்வதேச வர்த்தகச் சந்தையில் அதிக வட்டிக்குக் கடன்களைப் பெற்று, தங்களது ஐந்து வருட ஆட்சிக் காலத்தை ஓட்டுவதையே குறிக்கோளாகக் கொண்டிருந்தன. ஆனால், இலங்கையில் முதன் முறையாக எதிர்காலத்தைப் பற்றிச் சிந்திக்கும் தொலைநோக்குடைய அரசு ஒன்று தற்போது உருவாகியுள்ளது.

இன்று நாம் ஒரு கடனைப் பெறும்போது, 2035 அல்லது 2040ஆம் ஆண்டுகளில் அதனை எம்மால் முறையாகத் திருப்பிச் செலுத்த முடியுமா என்று ஆராய்ந்தே பெறுகின்றோம்.

நமது கடன் பெறுதல்களைத் தேசிய உற்பத்தியில் 4 வீத வரம்புக்குள் வைத்திருக்க வேண்டும் என்ற நிலையான கொள்கையில் நாம் உறுதியாக இருக்கின்றோம்.

டொலரின் ஏற்ற இறக்கங்களை வைத்து அரசு வீழ்ச்சியடையும் எனச் சிலர் மேடைகளில் கூச்சலிடுகின்றார்கள். ஆனால், நாம் முறையான பொருளாதாரத் திட்டத்துடன் பயணிக்கின்றோம். எந்தவொரு புயலுக்கும், சர்வதேச அதிர்வுகளுக்கும் அசையாமல் நிற்கக் கூடிய ஒரு பொருளாதாரத்தை உருவாக்குவதே எமது சவாலாகும்.

கடந்த 2022, 2023 காலப்பகுதியில் திறைசேரிக் கணக்கானது 800 பில்லியன் ரூபா வங்கி மேலதிகப் பற்றுடன் முற்றிலும் பணமின்றி முடங்கிக் காணப்பட்டது. இதனால் வங்கிகளால் தனியார் துறைக்குக் கடன் வழங்க முடியாமல் நிதிச் சந்தை சுருங்கியது. ஆனால், எமது முறையான முகாமைத்துவத்தால் மூன்று தசாப்தங்களுக்குப் பிறகு நாட்டின் தேசிய வருமானத்தை 16.7 வீதமாக உயர்த்தி, திறைசேரிக் கணக்கை 120,000 கோடி ரூபா மேலதிக இருப்புக்குக் கொண்டு வந்துள்ளோம்.

இதன் காரணமாக, அரசு வங்கிகளில் கடன் பெறுவதைக் குறைத்து, தனியார் துறையின் தொழில்துறைகளுக்காக 2025ஆம் ஆண்டில் 2000 பில்லியன் ரூபாயைக் கடனாக வழங்கியுள்ளது. இந்த ஏப்ரல் மாதத்தில் மட்டும் 250 பில்லியன் கடன் வழங்கப்பட்டுள்ளது.

இது பொருளாதாரம் மிக வேகமாக வளர்ச்சியடைவதற்குக் காட்டும் முக்கிய அறிகுறியாகும். அத்துடன், 2027 ஆம் ஆண்டில் மூலதனச் செலவினமாக 2 ட்ரில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்வதற்கும் திட்டமிட்டுள்ளோம்.

தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள ரம்புக்கனை முதல் கலகெதர வரையிலான 4 வழிகளைக் கொண்ட அதிவேக நெடுஞ்சாலைத் திட்டத்துக்காக 112.44 பில்லியன் ரூபா செலவிடப்படவுள்ளது. போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மேற்பார்வையின் கீழ், முழுமையாக உள்நாட்டு நிதி மற்றும் உள்நாட்டு ஒப்பந்த நிறுவனங்களின் பங்களிப்புடன் இந்தத் திட்டம் செயற்படுத்தப்படுகின்றது.

இதன் நிர்மாணப் பணிகளை 2029 மே 28ஆம் திகதிக்குள் நிறைவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. அதேவேளை, பொத்துஹெர முதல் ரம்புக்கனை வரையிலான முதற்கட்ட நிர்மாணப் பணிகள் அடுத்த வருட நடுப்பகுதிக்குள் நிறைவு செய்யப்படும். இந்த நிதியை உரிய காலத்துக்குள் கண்டிப்பாகச் செலவிட்டு, பணிகளைத் தாமதமின்றி முடிக்க வேண்டும் என ஒப்பந்தக்காரர்களிடம் கேட்டுக்கொள்கின்றோம்." - என்று குறிப்பிட்டார். (அ)

## பிக்குகள் - பௌத்த...

மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்நாட்டின் வரலாற்றைச் சிதைக்க சோழர்கள் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் முயற்சித்த போதிலும், அவர்களால் அந்தப் பணியை நிறைவேற்ற முடியவில்லை. அதேபோன்று, இலங்கையில் ஐந்நூறு ஆண்டுகள் ஆட்சியிலிருந்த மேற்கத்திய நாடுகளாலும், முப்பது ஆண்டுகள் யுத்தம் புரிந்த பிரபாகரனாலும் கூட அந்தப் பிணைப்பை உடைக்க முடியவில்லை.

எனினும், தற்போது மிகவும் துரதிர்ஷ்டவசமான முறையில், சமூக வலைத்தளங்களை ஆயுதமாகப் பயன்படுத்தி, புத்த சாசனத்துக்கும், கௌதம புத்தரின் தத்துவங்களுக்கும், மகா சங்கத்தினருக்கும் எதிராக மிக மோசமான முறையில் அவதூறு பரப்பும் சதித்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. சமூக வலைத்தளங்களின் ஊடாக பௌத்த பிக்குகளை அவமதிப்பதன் மூலம், இந்த நாட்டின் மகா கலாசாரத்தை வீழ்த்தி, நாட்டை ஆபத்தான நிலைக்குத் தள்ளச் சில தரப்பினர் முயற்சிக்கின்றனர்.

பிக்குகளைப் பலவீனப்படுத்துவதன் மூலம் புத்த சாசனத்தை வீழ்த்தி, இந்நாட்டை ஆப்கானிஸ்தான் போன்றதொரு நிலைக்குத் தள்ளும் சதித்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இத்தகைய சதித்திட்டங்கள் குறித்து பௌத்த மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும். பௌத்த காலத்தில் தேவதத்த தேரர் போன்றவர்கள் இருந்தபோதிலும், அது உண்மையான சங்கத்தினருக்கு எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை. அதேபோல, தர்மசோக மன்னர் அறுபதாயிரம் பிக்குகளைச் சாசனத்திலிருந்து நீக்கிய போதிலும், அது அஷ்டாரிய மகா சங்கத்தினருக்கு எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை.

அதேபோல, இன்றும் ஒரு சிலர் செய்யும் தவறுகளுக்காக ஒட்டுமொத்த சங்க சமூகத்தையும் மதிப்பிட்டு, பௌத்த சாசனத்தை வீழ்த்த இடமளிக்கக்கூடாது. பௌத்த சாசனத்தைப் பாதுகாப்பதற்கான தேசிய வேலைத்திட்டத்துக்கு அனைவரும் ஒன்றிணைய வேண்டும். தசாப்தங்களாகத் தாம் அரசாங்கங்களிடம் வலியுறுத்தி வரும் சங்க நிர்வாகச் சாசனத்தை பதிவு செய்யும் நடவடிக்கையை முன்னெடுக்குமாறு கோரிக்கை விடுக்கின்றேன்.

ஒவ்வொரு நிக்காயவுக்கும் உரித்தான நிர்வாக விதிமுறைகளுக்குச் சட்ட அந்தஸ்து வழங்குவதே உண்மையான தீர்வாகும். சங்க சபைக்கே பிக்குகளைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் வழங்கப்பட வேண்டும். பிக்குகள் செய்யும் தவறுகளைத் திருத்த, வினய பீடகத்தில் உள்ள ஒழுக்க விதிகளை முறையாகப் பயன்படுத்தினால் போதுமானது- என்றார். (அ)

## நவீன தொழில்நுட்ப...

கடற்தொழிலாளர்கள் காணாமல் போனமை தொடர்பில் , கடற்படையினர் நீண்ட தேடுதல்களை நடத்தி வருகின்றனர்.

தேடுதல் பணிகள் விஸ்தரிக்கப்பட்டு, இந்திய கடல் எல்லை பகுதியை அண்மித்த இடங்களிலும் தேடுதல் நடாத்த இந்திய அரசாங்கத்தின் அனுமதிகளை பெற்று தேடுதல் பணிகளை முன்னெடுத்துள்ளோம்.

தடயறி (ஜி.பி.எஸ்.) ஊடாக அவர்களின் படகுகளின் இடத்தை கண்டறிய கடுமையான முயற்சிகள் எடுத்துள்ள போதிலும் அவை தொடர்பில் கண்டறிய முடியவில்லை. அத்துடன் ட்ரோன் ஊடாக கடற்பகுதியில் கடற்படையினர் தேடுதல்களை மேற்கொண்டு வருகின்றனர்-என்றார். (அ)

## நீதிமன்ற அனுமதியுடன்...

இந்த நிலையில் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை அறிவிப்பதற்காக மரண தண்டனை கைதிகள் அனைவரும் யாழ்ப்பாணத்துக்கு அழைத்து செல்லப்பட்டிருந்தனர்.

இந்த நிலையிலேயே யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த பூபாலசிங்கம் ஜெயக்குமார் கடந்த திங்கட்கிழமை தனது உயிரை மாய்த்துக் கொண்டார்.

பிரேத பரிசோதனையின் பின்னர், உடலத்தை பொறுப்பேற்பதற்கு உறவினர்கள் மறுப்பு தெரிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து நீதிமன்ற அனுமதியைப் பெற்று உடலம், அரச செலவில் நேற்று அடக்கம் செய்யப்பட்டது. (அ)

## சில வணிக...

போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த தவறான முடிவுகளின் சுமை, வரி அதிகரிப்பு, வாழ்க்கைச் செலவு உயர்வு, மின்சாரம் மற்றும் எரிபொருள் விலை உயர்வு ஆகியவற்றின் மூலமும், உள்நாட்டுத் தொழில்துறைகள் மற்றும் வாழ்வாதாரங்களின் வீழ்ச்சி மூலமும் சாதாரண மக்கள் மீது அநியாயமாகச் சுமத்தப்பட்டுள்ளது.

விவசாயிகள், தொழிலாளர்கள், சிறு மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முனைவோர் மற்றும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்கள் எதிர்கொள்ளும் போராட்டங்களைப் புறந்தள்ளிவிட்டு, தனது நலன்களுடன் இணைந்த ஒரு சில வணிகர்களைப் பாதுகாப்பதையே அரசாங்கம் தேர்ந்தெடுத்துள்ளது.

அரசாங்கம் மக்களுடன் நிற்கவில்லை. அது ஆட்சியில் இருப்பவர்களுக்கு நெருக்கமான ஒரு சில வணிகர்களுடனேயே நிற்கிறது. அவர்களுக்குப் பயனளிக்கும் வகையில் எடுக்கப்படும் ஒவ்வொரு முடிவும் இறுதியில் பொதுமக்கள் சுமக்கும் சுமையாக மாறுகிறது.

தொழிற்சாலைகள் மூடப்பட்டு வரும் வேளையில், ஊழியர்களைப் பாதுகாப்பது குறித்தோ, வேலைவாய்ப்புகளைப் பாதுகாப்பது குறித்தோ அரசாங்கம் மௌனம் காக்கின்றது. தொழில்துறை மற்றும் முதலீட்டிற்கு நிலையான சூழலை உருவாக்குவதற்குப் பதிலாக, நிர்வாகம் தொடர்ந்து பொதுமக்கள் மீதான நிதிச் சுமையை அதிகரித்து வருகிறது.

வலுசக்தி கொள்முதல் மற்றும் பொது விலைமுறிக் கோடல்களை கையாண்ட விதம் சமூகத்தில் கடுமையான விமர்சனத்துக்குள்ளாகியுள்ளது. தரம் குறைந்த இறக்குமதிகள் மற்றும் முறையற்ற நிர்வாகத்தால் ஏற்படும் நட்டங்கள், இறுதியில் அதிக செலவுகள் மற்றும் வரிகள் மூலம் மக்கள் மீதே சுமத்தப்படுகிறது.

கட்டமைப்பிற்குள் இருக்கும் தோல்விகளுக்கும் ஊழல்களுக்கும் மக்கள் பணம் செலுத்த வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாக்கப்படுகிறார்கள். விவசாய சமூகத்துக்கு நிவாரணமும் பாதுகாப்பும் வழங்குவதாக உறுதியளித்து ஆட்சிக்கு வந்த போதிலும், உள்ளூர் விவசாயிகளுக்கு ஆதரவளிக்க அரசாங்கம் தவறிவிட்டது. உர விலையின் கடுமையான உயர்வையும், உற்பத்திச் செலவிற்கும் விவசாயிகளுக்குக் கிடைக்கும் சந்தை வருவாய்க்கும் இடையே பாரிய இடைவெளி காணப்படுகிறது.

முதலீடுகளை ஈர்ப்பது, வேலை வாய்ப்புகளை உருவாக்குவது, உள்ளூர் உற்பத்திகளை ஆதரிப்பது மற்றும் இளைய தலைமுறையினருக்குத் தொழில்நுட்பம் சார்ந்த தொழில்துறைகளை அறிமுகப்படுத்துவது ஆகியவற்றில் கவனம் செலுத்தும் ஒரு நடைமுறைப் பொருளாதார மீட்புத் திட்டம் இலங்கைக்கு அவசரமாகத் தேவைப்படுகிறது.

அரசியல் எதிராளிகளைக் கைது செய்வதோ அல்லது விமர்சனங்களை முடக்க முயல்வதோ மக்கள் எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வாகாது. நாட்டிற்குத் தேவையானது தீர்வுகள், முதலீடுகள், வேலைகள் மற்றும் சாதாரண மக்களின் கஷ்டங்களைப் புரிந்து கொள்ளும் ஒரு தலைமைத்துவம் ஆகும்.

அரசியல் அச்சுறுத்தல்கள் மற்றும் தவறான பிரச்சாரங்களை விடுத்து, மக்கள் நலக் கொள்கைகளைக் கடைப்பிடிக்குமாறும், மக்கள் மீதான சுமையைக் குறைத்து, பொறுப்புக்கூறல் மற்றும் வெளிப்படைத் தன்மையுடன் ஆட்சி செய்யுமாறும் அரசாங்கத்துக்கு அழைப்பு விடுக்கின்றோம்-என்றார். (அ)

## பல்லேகம...

அறிவித்துள்ளது.

மகா சங்க சபை மற்றும் அட்டமஸ்தானக் குழுவின் தீர்மானத்திற்கமைய இந்த தற்காலிக நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு

# திஸ்ஸ விகாரையைப் புகைப்படம் எடுத்தனர் என இரண்டு பேர் கைது!

**தையிட்டியில் நேற்று பரபரப்பு**

யாழ்ப்பாணம், மே. 31

வலிகாமம் வடக்கு தையிட்டிப் பகுதியில் அமைந்துள்ள சர்ச்சைக்குரிய 'திஸ்ஸ விகாரை' வளாகத்தைப் புகைப்படம் எடுத்ததாகக் குற்றம் சுமத்தப்பட்டு இரண்டு இளைஞர்கள் பலாலி பொலிஸாரால் நேற்றுக் கைது செய்யப்பட்டனர்.

நேற்று மதியம் தையிட்டி திஸ்ஸ விகாரைப் பகுதிக்கு சென்ற குறித்த இரு இளைஞர்களும், தங்களது கைபேசிகளைப் பயன்படுத்தி விகாரை வளாகத்தைப் புகைப்படம் மற்றும் காணொளி எடுத்துள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது. இதனைத் தொடர்ந்து அங்கு கடமையில் இருந்த பொலிஸ் அதிகாரிகள், அந்த இளைஞர்களை இடை மறித்து அவர்களது கைபேசிகளைப் பறிமுதல் செய்து சோதனையிட்டுள்ளனர்.

அத்துடன், அந்த இளைஞர்களின் புகைப்படங்களையும் பொலிஸார் தங்களது கைபேசிகளில் எடுத்துக் கொண்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

முதற்கட்ட விசாரணைகளின் பின்னர், இரு இளைஞர்களையும் விகாரை வளாகத்துக்குள் அழைத்துச் சென்று விசாரணை நடத்திய பொலிஸார், மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக அவர்களை அங்கிருந்து பலாலி பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றுள்ளனர். இராணுவத்தினரால் தையிட்டியில் அமைக்கப்பட்ட இந்த விகாரை தொடர்பாக ஏற்கனவே பல்வேறு அரசியல் மற்றும் சிவில் சமூகப் போராட்டங்கள் நடந்து வரும் நிலையில், இக்கைது நடவடிக்கை அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (அ)

# புதிய அரசியலமைப்பு நிச்சயமாக உருவாகும்!

**நீதி அமைச்சர் ஹர்ஷன**

கொழும்பு, மே. 31



புதிய அரசியலமைப்பு நிச்சயம் உருவாக்கப்படும். ஆனால் அதற்கான காலவரைபு பற்றி இதுவரை எவ்வித பேச்சுவார்த்தையும் இடம் பெறவில்லை. வடக்கு, கிழக்கு மற்றும் மலையக மக்களுக்கு அரசியலமைப்பு சார்ந்த உரிமைகளை பெற்றுக்கொடுப்போம் என நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

30 வருடகால யுத்தம் முடிவடைந்தாலும் அதனால் ஏற்பட்ட பாதிப்புகளுக்கு இன்றளவில் தீர்வு கிடைக்கவில்லை. இதனால் தான் வடக்கு மற்றும் கிழக்கு மக்கள் இன்றும் போராட்டங்களில் ஈடுபடுகிறார்கள்.

நாட்டின் தேசிய பாதுகாப்பை கருத்திற் கொண்டு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணிகள் விடுவிக்கப்படும். ஜனாதிபதி அநுரகுமார ஆட்சிக்கு வந்து ஒன்றரை வருட காலத்தில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பல ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன. இராணுவ முகாம்கள் அகற்றப்பட்டுள்ளன. வீதிகள் திறக்கப்பட்டுள்ளன.

பொதுமக்களின் காணிகளை பொதுமக்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உறுதியாகவுள்ளோம். தேசிய பாதுகாப்பை கருத்திற் கொண்டு காணிகளை விடுவிக்க முடியாவிடின் அந்த காணிகளுக்கு சொந்தமானவர்களுக்கு மாற்று காணிகளோ அல்லது இழப்பீடோ வழங்கப்படும். அதற்குரிய நடவடிக்கைகள் உரிய அமைச்சுக்கள் ஊடாக முன்னெடுக்கப்படுகின்றன.

தற்போதைய அரசியலமைப்பு மற்றும் அரசியலமைப்பு திருத்தம் தொடர்பில் நல்லதொரு அபிப்பிராயம் மக்கள் மத்தியில் கிடையாது. நாட்டுக்கு பொருத்தமான வகையில் புதிய அரசியலமைப்பு ஒன்றை உருவாக்குவோம் என்று மக்களுக்கு வாக்குறுதியளித்தோம்.

புதிய அரசியலமைப்பு உருவாக்கம் என்பது விரிவான தொரு செயற்பாடாகும். புதிய யாப்புருவாக்கத்துக்குரிய கால வரைவு பற்றி அமைச்சரவையில் எவ்வித தீர்மானமும் இதுவரையில் எடுக்கவில்லை - என்றார். (அ)

# அமைதி, ஒத்துழைப்பு வலயமாக இந்து சமுத்திரம் இருக்கவேண்டும்

**பாதுகாப்பு செயலர் வலியுறுத்து**

மொஸ்கோ, மே. 31

இந்து சமுத்திரப் பிராந்தியத்தை அமைதி மற்றும் ஒத்துழைப்பு வலயமாகப் பேண வேண் டும் என, பாதுகாப்புச் செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் சம்பத் துய கொந்தா வலியுறுத்தியுள்ளார்.

ரஷ்யாவின் மொஸ்கோ நகரில் நடைபெற்ற, பாதுகாப்பு விவகாரங்களுக்குப் பொறுப்பான உயர் அதிகாரிகள் பங்கேற்ற 14 ஆவது சர்வதேச மாநாட்டில், கலந்து கொண்டு உரையாற்றும் போதே, அவர் இதனைக் குறிப்பி ட்டுள்ளார்.

இந்து சமுத்திரத்தில் அதிகரித்து வரும் புவியியல் மற்றும் அரசியல் முக்கியத்துவத்தையும் இதன் போது சுட்டிக்காட்டினார்.

அத்துடன், கடல் வழிச் சுதந்திரம், சர்வதேச சட்டங்களுக்கு மதிப்பளித்தல் மற்றும் நாடுகளுக்கிடையிலான பயனுள்ள உரையாடல்களை நிலைநிறுத்துவதன் மூலம், பிராந்தியப் போட்டிகள் மோதல்களாக மாறுவதைத் தடுக்க முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

தீவிரவாதம், இணையவழி குற்றங்கள், கடல்சார் பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் மற்றும் காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் அபாயங்கள் போன்ற நவீன சவால்களை எதிர்கொள்ள சர்வதேச ஒத்துழைப்பு, புலனாய்வுத் தகவல் பகிர்வு மற்றும் கூட்டு நடவடிக்கைகள் மிகவும் அவசியம் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, தற்போதைய சிக்கலான உலக சூழலில் பேச்சுவார்த்தை, நம்பிக்கை மற்றும் பிராந்திய நிலைத்தன்மையை மேம்படுத்துவதில், சிறிய நாடுகளுக்கும் முக்கிய பங்கு இருப்பதாகவும் பாதுகாப்புச் செயலாளர், எயார் வைஸ் மார்ஷல் சம்பத் துயகொந்தா வலியுறுத்தியுள்ளார். (அ)



# காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் நேற்று ஆர்ப்பாட்டம்



வவுனியா, மே. 31

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் நேற்று வவுனியா பழைய பஸ் நிலையத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நிதி தேவை இல்லை நீதியே தேவை, சர்வதேச தலையீடு தேவை எனக் கோரி அவர்கள் ஆர்ப்பாட்ட த்தில் ஈடுபட்டனர்.

50 இற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டஇ குறித்த ஆர்ப்பாட்டத்தில், ஓ.எம்.பி. அலுவலகத்தினால் வழங்கப்பட்டுவதாகக் கூறப்படும் நிதி தேவை இல்லை எனவும், சர்வதேச ரீதியிலான விசாரணையும் தமது காணாமல்போன உறவினர்களுடைய முடிவுமே தமக்குத் தேவையான ஒன்று எனவும் அவர்கள் கோஷங்களை எழுப்பினர்.

சுமார் ஒரு மணி நேரமாக இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பச்சிளம் குழந்தையை 1 இலட்சம் ரூபாய்க்கு பேரம் பேசிய 2 பெண்கள் சி.ஐ.டியால் கைது!

கொழும்பு, மே. 31

தனது 20 நாள்கள் உடைய குழந்தையை ஒரு இலட்சம் ரூபா பணத்திற்கு விற்பனை செய்ததாகக் கூறப்படும் 25 வயதுடைய இளம் தாய் ஒருவரும், அக்குழந்தையை விலைக்கு வாங்கியதாகக் கூறப்படும் பெண் ஒருவரும் புத்தளம் குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பள்ளம, கம்மந்தழுவ பகுதியில் பதிவான சம்பவம் ஒன்று தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளைத் தொடர்ந்தே இந்த கைது நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. மதுரங்குளி, கடையமொட்டை பகுதியில் வசிக்கும் பெண் ஒருவரிடம் இந்தக் குழந்தை ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும், குழந்தையை வாங்கிய பெண்ணின் கணவரால் 100,000 ரூபா பணம் வழங்கப்பட்டு இந்த கொடுக்கல் வாங்கல் நடத்தப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாரின் வெளிப்படுத்தல்களின்படி, இந்த இளம் தாய் அதிகளவில் மதுப்பழக்கத்துக்கு அடிமையான ஒருவருடன் தொடர்பு வைத்திருந்துள்ளார். இவர்கள் இருவரும் கடுமையான நிதி நெருக்கடிகளை எதிர்கொண்டு வந்துள்ளனர்.

புதிதாக பிறந்த குழந்தையைப் பராமரிப்பதில் ஏற்பட்ட இயலாமை காரணமாக, குழந்தை பிறந்து குறுகிய காலத்திலேயே இவ்வாறு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

குழந்தையைப் பெற்றுக்கொண்ட பெண் திருமணமாகி 18 வருடங்களுக்கு மேல் ஆகியும் அவர்களுக்குக் குழந்தைகள் இல்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

கிடைத்த தகவலின்படி, தம்பதியினர் குறித்த கர்ப்பிணிப் பெண் குழந்தை பிரசவித்ததும், உடன்பட்ட தொகையைச் செலுத்தி குழந்தையைத் தங்களது பொறுப்பில் எடுப்பதற்கு முன்கூட்டியே அவர்கள் திட்டமிட்டுள்ளனர் எனக் கூறப்படுகிறது. (அ)

# நீதித்துறையில் 2,647 வெற்றிடம்

**ஆட்சேர்ப்பை விரைவுபடுத்த ஆலோசனை**

கொழும்பு, மே. 31

நீதித்துறையில் கடந்த 2018ஆம் ஆண்டின் பின்னர் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படாமையினால் இதுவரை 2,647 வெற்றிடங்கள் காணப்படுகின்றன என்று அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

இதற்கு அமைய ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளை விரைவில் எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு நீதி அமைச்சர் ஆலோசனை வழங்கினார்.

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சு சார் ஆலோசனைக் குழு அதன் தலைவர் அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தலைமையில் பாராளு மன்றத்தில் கூடியபோதே இந்த ஆலோசனை வழங்கப்பட்டது.

நீதித்துறையில் காணப்படும் வெற்றிடங்கள் தொடர்பில் இங்கு கவனம் செலுத்தப்பட்டதுடன், 2018ஆம் ஆண்டின் பின்னர் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படாமையினால் இதுவரை 2,647 வெற்றிடங்கள் காணப்படுவதாக அதிகாரிகள் தெரிவித்தனர். இதற்கு அமைய ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளை விரைவில் மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

அத்துடன், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள் மற்றும் நீதித் துறையில் காணப்படும் பல்வேறு குறைபாடுகள் தொடர்பில் அமைச்சின் கவனத்துக்குக் கொண்டுவந்ததுடன், இவற்றுக்கு விரைவில் தீர்வு பெற்றுக் கொடுப்பது தொடர்பில் குழுவின் தலைவர் அதிகாரிகளுக்கு உரிய அறிவுறுத்தல்களை வழங்கினார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 31.05.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media